# கலைச் செல்வி

1974

அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.

රජයේ ගුරු විදුහල,
මඩකලපුව.

**GOVT. TEACHERS' COLLEGE,**
BATTICALOA.

# கலைச் செல்வி

அரசினர் ஆசிரியர் கலாசாலை,

மட்டக்களப்பு

— 1974 —

# தமிழ்த் தெய்வ வணக்கம்

பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன் உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல் மறைந்து வாழ்த்துதுமே.

—மனோன்மணியம்.

# கலாசாலை வாழ்த்துப்பா

### பல்லவி

ஒருதனி முதல்தரு மாதமிழ் வாழ்க
ஓதும் நல் மாணவர் வாழ்க.

### சரணங்கள்

ஸ்ரீலங்கா தேவிதரு மட்டுமா நகரில்
மாபெரும் ஆசிரியர் மன்றம்
ஆனநல் ஞான ஒளியினை உதவும்
அரசினர் நீடூழி வாழ்க
அறிவினை யாமறிவோமே
அறிவதும் பிறர்க்காமே
அழகுறப் பயின்றிடு வோமே — ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

உண்மையும் நன்மையழகாகிய நோக்கமும்
உள்ளதோர் நல்லவராவோம்
திடகாத்திர தேகமும் காத்திர மனமும்
காணும் நல் வீரர்களாவோம்
கல்வியின் மூலமும் நாமே
கடவுளை அடைந்திடுவோமே
களங்கமில் தொண்டு செய்வோமே — ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

நம் மாணவ மாணவி பரிசுத்த தன்மை
மதித்து நல் அறநெறி புகழ்வோம்
சாதனை போதனை யாவிலும் சுத்த சன்
மார்க்க நல் ஆசிரியராவோம்
ஆதியில் மானிடர் ஒன்றே
ஆண்டவன் என்பதும் ஒன்றே
ஒருயிர் போலினி வாழ்வோம் - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

# அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

## கலைச்செல்விக் குழு

**- 1974 -**

*காப்பாளர்:*

திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை, அதிபர்.

*ஆலோசகர்கள்:*

திரு. கோ. கோணேசபிள்ளை, விரிவுரையாளர்.
திரு. வே. சுப்பிரமணியம், விரிவுரையாளர்.
ஜனப். எம். எஸ். ஏ. அஸீஸ், விரிவுரையாளர்.

*இணையாசிரியர்கள்:*

திரு. க. கனகசிங்கம், செல்வி வ. மாரிமுத்து.

*துணையாசிரியர்கள்:*

திரு. மு. இரத்தினம், செல்வி ஜீ. வடிவேல்.

*பொருளாளர்:*

திரு. பொ. சிவாநந்தன்.

*துணைப்பொருளாளர்:*

திரு. கே. சரவணமுத்து.

*செயற்குழு உறுப்பினர்கள்:*

திரு. க. கிருஷ்ணபிள்ளை — செல்வி. பா. செல்லத்தம்பி
திரு. இ. இராமநாதன் — செல்வி. இ. அருளம்பலம்
திரு. இ. குலசிங்கம் — செல்வி. வி. அருளாநந்தம்
திருமதி. ஜே. டி. சோமநாதர்.

1974-05-29.

**ஈ. சி. வேலாயுதபிள்ளை**
அதிபர்.


# அதிபர் அவர்களின் ஆசியுரை

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை பழைய பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பதுடன் புதிய சாதனைகளையும் நிலைநாட்டிப் புகழ்பெற்று வருகின்றது குறிப்பாக கல்வித் திணைக்களத்தினரால், மாறிவரும் காலத்திற்கும் கல்விக் கொள்கைகளுக்குமேற்ப அமைக் கப்பட்ட, புதிய கல்வித்திட்டத்திற்கமையப் பயிற்சி பெற்ற நல்லாசிரியர் பலரை இக்கலாசாலை உருவாக்கி யுள்ளது. இன்று ஆரம்ப பாடசாலைகளின் கல்வி முறையில் குறிப்பிடக்கூடியதும் பாராட்டக்கூடியது மான மாற்றங்களை நாம் காணக்கூடியதாயிருப்பதற் குக் காரணம் எமது விரிவுரையாளர்களதும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களதும் அயராத பணியே என்பதற்கு எவ்வித ஐயமும் இல்லை. இக்கலாசாலையில் பயின்ற ஆசிரியர்கள் கணிதம், விஞ்ஞானம், விவசாயம், இலக் கியம், சமூகவியல், இசை, சித்திரம், மனையியல் போன்ற எல்லாத் துறைகளிலும் விசேட திறமை பெற்றிருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வழக்கம்போல எல்லாவிதமான சிறப்பம்சங் களும் பொருந்தியதாகவும் கலாசாலைப் பணிகளின் பிரதிபலிப்பாகவும் பயிற்சிபெறும் ஆசிரியர்களதும் பேரறிஞரதும் கட்டுரை, கதை, கவிதை போன்ற வற்றைத் தாங்கிப் புதுப்பொலிவுடன் வெளிவரும் 'கலைச்செல்விக்கு' எனது இதயபூர்வமான ஆசியை வரைவதில் அளப்பிலா மகிழ்ச்சியடைகிறேன்.

**ச. சி. வேலாயுதபிள்ளை**
அதிபர்.

# எங்கள் அதிபர்



திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை அவர்கள்.

# கலாசாலைப் பணியிலே...

## அதிபர்

திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை, B. Sc. Dip-in-Ed.

## விரிவுரையாளர்கள்

திரு. சு. தர்மலிங்கம் B. A. (Ceylon) Dip-in-Ed.

திருமதி. பி. ஜி. காசிநாதர், Dip-in-Home Sc. (Lady Irwin College, New Delhi).

திரு. கோ. கோணேசபிள்ளை, 1st Class Eng. Sec. Tr. Maths (Macquarie) B. Ed. Part II (Queensland)

திரு. கே. சின்னத்தம்பி, B. Sc. Dip-in-Ed. (Merit).

திரு. ஏ. சுந்தரலிங்கம், 1st Class Sec. Tr. (Agri)., Dip-in-Agri.

திரு. ஏ. வி. பாலசுப்பிரமணியம், B. A. (Cey) Sec. Tr., S. S. C. (Sinhalese).

திரு. வி. சுப்பிரமணியம், 1st Class English Sec. Tr., (Sc.) B. A. (Hons) Ceylnn.

திரு. என். தேவபாலசிங்கம், 1st Class Sec. Tr., (Eng.) Teachers Certificate in Physical Education 2nd Class

திரு. எம். எஸ். ஏ. அஸீஸ், Dip-in-Art. Drawing Teachers' Certificate.

செல்வி வி. சுப்பிரமணியம், Sangeetha pooshanam (Annamalai).

## பகுதி நேரப் போதனாசிரியர்கள்

திரு. ஆர். ஈஸ்வரமூர்த்தி, Teachers' Certificate in PhysicalEducation (Madras).

திருமதி J. P. யேசுதாசன், B. T., Dip-in-Phy. Ed. (Madras).

வண. பிதா அன்ரனி ஜான் அழகரசன், M. A.

திரு. பி பிறைசூடி, 1st Class Tamil Tr.

திரு. எஸ். டி. தங்கத்துரை (Evangelist).

செல்வி ஈ. ஆர். ஜோசப்.

## விடுதி மேற்பார்வையாளர்

திரு. சி. சா. இராசதுரை, 1st Class Tamil Tr.

## உதவி விடுதி மேற்பார்வையாளர்

திருமதி. த. தருமலிங்கம்.

## எழுது வினைஞர்

திரு. வீ. தட்சணாமூர்த்தி.

# இந்த மலரிலே...

ஆண்டுதோறும் வெளிவரும் கலைச்செல்வியை வழமைபோல இவ்வாண்டும் வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஜனுப். ஏ. எம். எம். மஜீத் அவர்களின் வாழ்த்துடனும், எங்கள் கல்லூரி அதிபர் திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை அவர்களின் ஆசியுடனும் இம் மலர் வெளிவருகின்றது.

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகக் கல்வி விரிவுரையாளர் திரு. வி. ஆறுமுகம் அவர்களின் ''கல்வியின் வரையறை'', பொறியியல் விரிவுரை யாளர் கலாநிதி சி. சிவசேகரம் அவர்களின் ''நமது கல்வியும் சமுதாயமும்'', சிரேஷ்ட புவியியல் விரிவுரை யாளர் திரு. சோ. செல்வநாயகம் அவர்களின் ''புதிய பாடத்திட்டமும் இடைநிலைப் பருவக் கல்வியும்'' ஆகிய கட்டுரைகளும் மலரைச் சிறப்பிக்கின்றன.


மேலும், எமது கல்லூரி ஆசிரிய மாணவர் களின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை, நாடகம் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

இம்மலரை உரிய காலத்தில் வெளியிட உதவி நல்கிய அதிபர், ஆலோசகர்கள், விரிவுரையாளர்கள், கலைச்செல்விக் குழுவினர், ஆசிரிய மாணவர்கள் ஆகி யோருக்கும், மட்டக்களப்புக் கத்தோலிக்க அச்சகத் தாருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

வணக்கம்.

—ஆசிரியர்கள்.

# எங்கள் விரிவுரையாளர்கள்



இடமிருந்து வலம்: முன்வரிசை:- செல்வி வி. சுப்பிரமணியம், திரு. ஆ. சுந்தரலிங்கம், திரு. என். தேவபாலசிங்கம், திரு. க. சின்னத்தம்பி, திரு. கோ. கோணேசபிள்ளை, திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை (அதிபர்), திரு. எஸ். தர்மலிங்கம் (உப அதிபர்), திரு. ஏ. வி. பால சுப்பிரமணியம், திரு. வி. சுப்பிரமணியம், அருட்திரு அன்ரனி ஜோன், திருமதி பி. ஜி. காசிநாதர்.

இடமிருந்து வலம்: பின்வரிசை:- திருமதி பி. சங்கரப்பிள்ளை, திரு. பி பிறைசூடி, திரு. எஸ். டி. தங்கத்துரை, திரு. ஆர். ஈஸ்வரமூர்த்தி, திரு. வீ. தெட்சணாமூர்த்தி (எழுதுவினைஞர்) ஜனாப் எம். எஸ். ஏ. அசீஸ், திரு. சீ. சா. இராசதுரை, திருமதி யேசுதாசன், திருமதி த. தர்மலிங்கம்.

# கல்வியின் வரையறை

திரு. வி. ஆறுமுகம், B. A. (Hons), M. Phil.
விரிவுரையாளர்
கல்வித்துறை,
இலங்கைப் பல்கலைக் கழக வளாகம்.

மனித இனத்தினுடைய வரலாறு என்று ஆரம்பித்ததோ அன்று தொட்டு கல்வியும் ஆரம்பித்தது என்று கொள்ளப்படுகின்றது. மனிதனுடைய ஒவ்வொரு முயற்சியும ஏதோ ஒன்றைக் கற்பதாகவோ அல்லது கற்பிப்பதாகவோ அமைவதை நாம் காணலாம். எனினும், நாகரிகம், பண்பாடு என்றெல்லாம் பேசிக்கொள்ளும் இந்தக்காலத்தில் எமது வாழ்வில் கல்விக்குரிய இடத்தையிட்டு நாம் அதிகம் சிந்திப்பதற்கில்லை. கல்வியின் வளர்ச்சியே நாகரீகம் என்று கூறுவது மிகையாகாது. கல்வியானது வாழ்க்கையின் புகுமுகம் அல்லது நுழைவாயில் என்றும், வாழ்க்கையே கல்வி என்றும், வாழப் பயிற்சியளிப்பதே கல்வியாகையால் கல்விக் கூடங்கள் வாழ்க்கைக் கூடங்களாக அமையவேண்டும் என்றும் இன்னோரன்ன கருத்துக்களைக் கல்வியாளரிடையே காணலாம். மனிதனது இயற்கை அறிவைக் கூர்மைப்படுத்தி, மக்கள் மத்தியில் உலகத்தோடு ஒட்டவாழும் பண்பை அவனுக்கு நல்கும் தன்மையையுடையதாகிய கல்வியை வரையறுக்க முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வி என்னும் முயற்சி படிமுறை வளர்ச்சியிலேயே செயலாற்றுகின்றது என்பதை நாம் நினைவுறுத்துவது முக்கியமாகும். தேவலோகத்தைக் கொண்டுவந்து கண் முன்னே காட்டவோ அல்லது ''மந்திர தந்திர'' முறைகளால் தீர்வுகளைக் கண்டு பிடிக்கவோ கல்வியால் இயலாது. "முயற்சி திருவினையாக்கும்" என்றபடியும்; ''மெய் வருந்தக் கூலிதரும்'' என்றபடியும், இடைவிடா முயற்சியையும் ஒரே முகமான கட்டுப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு கல்வி இயங்கவேண்டும். செலுத்தப்படுகின்ற பாதையைப் பொறுத்து, மனித இனத்தை ஆக்கப் பாதையிலோ அல்லது அழிவுப் பாதையிலோ இட்டுச் செல்லும் சக்தி கல்விக்குண்டு.

## வரைவிலக்கணம்

நூற்றாண்டுகளாக வளர்ச்சிபெற்றுள்ள கல்வியின் இயல்புக்கு, அதற்கு வகுக்கப்பட்டுள்ள, வெவ்வேறு காலத்தைய வரைவிலக்கணங்கள் சான்று கூறுகின்றன. தலை சிறந்த மெய்யியல் ஞானியாகிய பிளேத்தோ ''உடலுக்கும் உள்ளத்துக்கும், அவற்றுக்கேற்ற, அவற்றாலியன்ற, செம்மையையும் நிறைந்த அழகினையும் கொடுப்பது கல்வி'' எனக் கருதினர். ஹெர்பேர்ட் ஸ்பென்சர் கொடுத்த விளக்கம் குணநலனை ஆக்குவதென்பது இதற்கும் ஒருபடி மேலே சென்றது. ஹெர்பெர்ட் மான் கொடுத்த கருத்து, அவர் ''தரத்தில் சிறந்ததும், அளவில் எல்லையற்றதுமான, அனுபவத்துக்கு எம்மைக் கொண்டுசெல்லக்கூடியது கல்வி'' என நம்பினர். கல்விபற்றிய அண்மைய கருத்துக்களில் மிகவும் பிரசித்திபெற்றது யோன் டூயி என்னும் அமெரிக்க அறிஞருடைய கருத்தாகும். ''பின்னைய அனுபவங்களை வழிப்படுத்தக்கூடிய, எமது வாழ்க்கைக்குப் பொருளாக அமையும், அனுபவங்களின் புனரமைப்பே கல்வி'' என்பதுவே அது. இங்கு குறிப்பிடப்பட்ட அனுபவம்

தர அடிப்படையைக் கொண்டது அறிவு வளர்ச்சி மட்டுமல்லாது, உணர்வு முதிர்ச்சி, அறநெறிப் பாங்கு முதலியவற்றையும் அடக்கி, கல்வி முறைகளின் தொடர்புப் பரிசீலனையையும் குறிப்பிடுவது கவனிக்கற்பாலது.

மேலே குறிக்கப்பட்ட விளக்கங்கள் ஒவ்வொன்றும் அவரவர் வாழ்ந்த கால, சமூக, தேவைகளையொட்டி எழுந்தவை. அவற்றிற்கியைய கல்வியை வெவ்வேறு கோணங்களிலிருந்து நோக்கின. எனவே, முழுமையான வரைவிலக்கணம் ஒன்று கல்விக்கு வகுக்கப்படவேண்டின் இவ்வமிசங்கள் எல்லாவற்றையும் கருத்திற்கொள்வது இன்றியமையாததாகும்.

## நோக்கங்கள்

தொடக்கத்தில், குடும்பமே கல்வி நிலையமாகவும், பெற்றோர்களே கல்வியாளர்களாகவும் செயற்பட்டமை பல ஆய்வாளர்களாலும் ஏற்பட்டுள்ளது. காலப் போக்கில், பல்வகைப்பட்ட தொழிற்குழுகள் தொழில் சம்பந்தப்பட்ட கல்வியையும், கோயில்கள் அல்லது மதக்குழுக்கள் ஆத்மீக வாழ்வுக்கேற்ற கல்வியையும் வழங்கின. இருந்தும், கல்வி ஒரு சிலருடைய தனியுடைமையாகவே காணப்பட்டது. சிறிது சிறிதாக ஏற்பட்ட மாற்றங்களும், தோன்றிய புதிய நிறுவனங்களும் கல்வியின் பரவலுக்குக் காலாயின. வளர்ச்சியின் போக்கில் கல்விப்பொருள், கல்வி என்னும் உருவகம் இடம்பெறலாயிற்று; இதைச் சிறப்புறச் செயற்படுத்த அதன் நோக்கங்கள் பற்றிய முழுமையான அறிவு தேவையாகும்.

கல்வியின் நோக்கம் என்று நாம் குறிப்பிடும்போது நூதனமாக எண்ணவேண்டியதில்லை. வாழ்க்கையின் ஏனைய துறைகளில் செம்மையான செயல்முறைக்கு நோக்கம் எப்படி அவசியமோ அப்படியே கல்விக்கும் நோக்கம் வேண்டும். அதுபற்றிய ஆராய்ச்சி இன்று நேற்று ஆரம்பமானதல்ல. கிரேக்க-உரோம ஆதியபத்திய காலத்திலிருந்து, பிளேத்தோ - அரிஸ்டாட்டில் போன்ற அறிஞர்களுடைய காலத்திலிருந்து மேற்குத் தேசங்களில் உருவெடுத்த ஒன்று. கீழைத் தேசங்களிலும், ஆன்ம வளர்ச்சியோடு தொடர்புற்று, பண்டுதொட்டுத் தோன்றியது என்றாலும் இன்றுவரை இதுதான் கல்வியின் நோக்கம் என்று அதை ஒருமைப்படுத்தி அறுதியிட்டு எவரும் கூறவில்லை. தேச இன, பண்பாட்டுப் பேதங்களுக்கேற்ப நோக்கங்களும் வேறுபட்டே காணப்படுகின்றன. அதனுடைய பல்வகைப்பட்ட பரப்பைப் பார்க்கும்போது கல்விக்கு நோக்கமேயில்லை என்றுகூடச் சொல்லத்தோன்றும். இங்கு டூயி கூறிய ''கல்வி தனக்கென எவ்வித நோக்கமும் இல்லாதது என்பதை நினைவு கொள்ளுதல் நல்லது. பெற்றோர், ஆசிரியர்கள் முதலியோரே நோக்கங்களைக் கொண்டுள்ளனர்'' என்னும் கூற்றைக் கருத்திலிருத்தல் பொருத்தமுடைத்து.

பெற்றோர் தமது குழந்தைகள் வளரும் சூழலில் தமது (குழந்தைகளது) வாழ்க்கையை வகுத்துக்கொள்ளக்கூடிய பயிற்சியைக் கொடுக்க விரும்புவர். தம் பிள்ளைகள் சிறந்த, பல்வகைப்பட்ட அம்சங்களோடு நிறைந்த, வாழ்வை வாழ்ந்து முற்சந்ததியினரால் உருவாக்கப்பட்ட கலை கலாச்சாரச் செல்வங்களை அனுபவிப்பதைப் பெற்றோர் விரும்புகின்றனர். நீதி, இரக்கம், சகோதரத்துவம், அன்பு போன்ற அறப் பண்புகளையும், ஆத்மீகப் பெறுமானங்களையும், தனிச் சுதந்திரத்தையும் பொதுவாக மனிதர்கள் பெரிதாக மதிப்பதுண்டு. சில சமயங்களில் ஒருவன் தனது வாழ்க்கைக்காக இயற்கைச் சக்திகளுடன் போராட வேண்டிவரும். இவற்றுக்காக உடல் வளர்ச்சி மட்டுமல்லாமல் உளவளர்ச்சியும் தேவைப்படும். கல்வியின் ஆரம்ப, அடிப்படை நோக்கம் இதுவெனக் கொள்ளலாம். பொருளாதார வலிமை, தொழிற்திறன் ஆகியவற்றைப் பெருக்குவதும் கல்வியின் நோக்கம் எனலாம்.

சமூக வளர்ச்சியை உறுதிப்படுத்துவது கல்வியின் நோக்கங்களுள் ஒன்றாகவேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதுண்டு. இத்தொடர்பில் சமூகம் என்பது அதை ஆக்கும் மனிதர்களிலேயே தங்கியுள்ளது என்பதும் எவ்விதத்திலும் அவர்களைக் கடந்ததல்ல என்பதும் நினைவூட்டப்பாலது. கல்வி ஒரு சமூகச்செயல் என்று கொள்வதானால்,

அது தனிப்பட்டவர்கள் தனிப்பட்டவர் களுடன் தனிப்பட்டவர்கள்மீது மேற்கொள் ளும் செயலாகும் என்பதை மறத்தல் கூடாது. இச்செயல்மூலம் ஒரு மனிதனைச் சமூக இயல்புள்ளவனாக ஆக்குவதுடன், தனி மனிதனுக்கு மேன்மைக் கோலத்தைக் காட்டி, உயர்ந்த இலட்சியங்களில் ஈடு பாடுள்ளவனாக்கி, ஆளுமைப்படுத்துவதும் அதன் நோக்கமாகும்.

இவ்வகையினவாக வகுக்கப்படும் கல் விப் பயன்களைச் சிறிது விரிவாக நோக்கு தல் ஏற்புடையதாகும். அப்பயன்களைப் பாகுபடுத்திப் பார்க்குமிடத்து, பொது நோக்குகளையும் தனி நோக்குகளையும் நாம் மயக்கிக்கொள்ளக்கூடாது. பொதுப் பான்மை என நாம் கொள்பவை மக்க ளினத்துக்கே பொதுவானவை. ஏனையவை தனிப்பட்டோரது விருப்பு வெறுப்புக்களுக் கேற்ப அமைவன. எனவே அவற்றைத் தொகுக்கவோ அல்லது பகுக்கவோ முயலு தல் வீண் முயற்சியாகிவிடும். நாம் பாகு படுத்திப் பார்க்கக்கூடியவை பொது நோக்குகளேயாம்.

## அறிவுவிருத்தியும் உளப்பயிற்சியும்:-

பாரம்பரிய முறைப்படி முன்னோர் கைக்கொண்ட நோக்கங்களே கல்வியின் நோக்கங்களாக வழிவழி விளங்கவேண்டும் என்பது ஒரு சாராருடைய கருத்தாகும். அறிவை வளர்ப்பதே கல்வியின் நோக்க மாகும் எனக்கொண்டு அதற்கு முன்னோர் எமக்களித்துள்ள தேடருஞ் செல்வங்களைப் பரப்பவேண்டும் என்பதும் வற்புறுத்தப் படுவதுண்டு. அறிவு வளர்ச்சியை அடிப் படையாகக்கொண்ட இப்பண்பாட்டு வளர்ச்சியும் அதன் பரவுதலும் கல்வியின் பயனாக அமையவேண்டும் என அத்தகை யோர் கூறுவர். அறிவுத்துறை அனைத்தை யும் கற்கவோ அல்லது கற்பிக்கவோ முனை வது சாத்தியமாகக்கூடியதல்ல என்றும், எதையும் தனித்தனி கற்றுப் பயன்படுத்து வதற்கு உதவக்கூடிய உளப்பயிற்சியையே பெரிதாகக் கொள்ளவேண்டும் என்று பிறி தொரு சாரார் கூறுவர். இக்கருத்துடை யோரில் 'யோன் லொக்', 'ரூசோ' போன் றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## முழுவாழ்வுப் பயன் :-

ஒரு மனிதன் முழுமையான நிறைவு பெற்ற வாழ்க்கை வாழ்வதற்குக் கல்வி உதவவேண்டும் என்பது இன்னொரு கருத்து. இப்பயனுக்கு முதலிடம் கொடுத்தவர் 'ஹெர்பேர்ட் ஸ்பென்சர்' என்னும் ஆங்கி லேய சமூக அறிவியல் ஞானி. கல்வியின் பயன் ஒருவனோ அல்லது ஒருத்தியோ தன் னைக் காப்பாற்றிக்கொள்ளவும், வாழ்க் கையை நடத்தவும், தலைமுறையினரைப் பெற்றெடுத்து வளர்த்துத் திண்ணியராக்க வும், சமூகத்தோடு ஒட்டி ஒழுகவும், அர சியலில் பங்கெடுக்கவும், கலை இலக்கியம் முதலியவற்றைச் சுவைக்கவும் உதவுவதாக அமையவேண்டும் என்பது அவருடைய எண்ணம். இது கல்வியின் எல்லாக் கோணங் களையும் தழுவியதாலும், இதனைப் புற உருவிலன்றிக் கருத்தளவிற் காணமுடியாது. அத்துடன் இதற்கேற்ற கலைத்திட்டம் ஒன்றை வகுப்பதும் இலகுவானதன்று

## அறமும் ஒழுக்கமும் :-

மனிதனைத் தீயவழிகளிலிருந்து விலக்கி நல்வழியில் கொண்டுசெல்வதும் கல்வியின் பயனாகும். இவ் அறவழிப் பயனும் ஒழுக் கத்தை ஓம்பலும் ஒன்றோடொன்று இணைந் தவை. மனிதனிடத்தில் இயல்பாகவே அறி வுத்தன்மை, விலங்குத்தன்மை என இரண்டு தன்மைகள் காணப்படும். விலங்குத்தன்மை மேலோங்கும்போது அவன் எவருக்கும் நன்மை செய்யாதவனாய் தீமையே உரு வெடுத்தவனாகக் காணப்படுகிறான். நன்மை செய்யப் பிறந்த மனிதன் அதை விடுத்துத் தீமை செய்வதைத் தடுக்கவல்லது கல்வியே யாகும். இவ்வொழுக்கத்தைப் பேணும் பயன் கல்வியின் சிறப்பம்சம் என்பதை ஹெர்பேர்ட் என்ற மேலைநாட்டறிஞரும் வற்புறுத்தியுள்ளார். கீழைத்தேயத்தாராகிய எம்மிடையே இது முக்கியமானதொன்றா கப் பண்டுதொட்டுப் போற்றப்பட்டு வந் துள்ளது. ''நெஞ்சத்து நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையாற், கல்வி யழகே யழகு'' என்னும் நாலடியார் கூற்றும்,

> ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்.

என்ற வள்ளுவர் வாக்கும் எம்மவர் ஒழுக்

சத்தை எவ்வளவுக்குப் போற்றினர் என்பதைக் காட்டுகின்றன. ஒழுக்கத்தைப் பேணுவதைப் பெரிதாகக்கொண்டதால் இந்நாட்களில் பள்ளிக்கூடங்களில் அதற்கெனப் பாட நேரம் ஒதுக்குவதும் வழக்கமாகிவிட்டது.

## சமூகப்பயன்

சமூகத்தில் சேர்ந்துவாழும் தன்மையுடையவன் மனிதன். பிறரோடு சேர்ந்து, பிறருக்குச் சுமையாயிராது, தனது சூழ்நிலையை உணர்ந்து அதற்கேற்பத் தனது வாழ்க்கையையும் வகுத்துக்கொள்ளும் ஆற்றலுடையவனுக மனிதன் இருக்கவேண்டும். தன்னலம் கருதி வாழ்பவர்கள், தன்னலத்தை முற்றும் அடக்கித் துறவியாகின்றவர்கள் இவ்விரு வகையினருக்கும் இடைப்பட்ட தனக்கென வாழத் தகைமையுடைய பண்பாளனுக மனிதனை வாழச்செய்வதும் கல்வியின் நோக்கமாகும். ''ஊரோடொத்து வாழ்'' என்னும் முதுமொழி எமது மூதாதையர் சமூகத்தோடு இணைந்த வாழ்வை எங்ஙனம் போற்றினர் என்பதைக் காட்டுகிறது. இச் சமூகப் பண்பும் அறிவியற் கல்வியும் இணையும்போது மனிதன் வாழ்வோடு வாழ்வதை நாம் காணலாம்.

இதுமட்டுமல்லாமல் கல்வி சமூக இயக்கத்தின் சாதனமாகவும், சமூக முன்னேற்றத்துக்கு உதவுவதாகவும் சமூகப்படியில் தாழ்நிலையில் உள்ளோரை உயர்நிலைக்குக் கொண்டுவருவதாகவும் செயற்படுவதையும், நாம் கருத்திற்கொள்வது பொருந்தும்.

## குடிமைப்பயன் :-

உடலோம்பல், உளவளர்ச்சி, பண்பாட்டுநிலை ஆகியவற்றில் முன்னேற்றமடைந்து முழு மனிதனுக விளங்குபவனே சிறந்த குடிமகனுகின்றான். அத்தகைய ஒருவனே தனது நாட்டாட்சியில் இடம்பெறத் தக்கவன். இக்குடிமைப்பயனை வற்புறுத்துபவர்களது மதம், கல்வியும் இதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துவர். இக்கருத்து ஆதிகாலத்தில் கிரேக்கர்களிடையே வற்புறுத்தப்பட்டது. பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் ஆகியோருடைய கல்விக்கருத்துக்களில் இவ்வலியுறுத்தலையே நாம் காணக்கூடியதாயிருக்கிறது. குடியாட்சிமுறை பெருவழக்காயுள்ள இக் காலத்தில் இக்கருத்தை வலியுறுத்துவது பொருத்தமுடையதேயாகும். நாட்டாட்சியில் தேர்தல் முதலிய துறைகளில் தனது பங்கை நிறைவேற்றவும், தனதும் தன் நாட்டினதும் நன்மையில் விழிப்பாயிருக்கவும் வேண்டியது ஒரு நன்மகனது கடமை. இதற்கு அவனிடத்தே குடிமைப்பண்பு ஓங்கவேண்டும். எனினும் பிளேட்டோ வகுத்த கல்வியில் குடிமைப்பண்பு எல்லோருக்கும் உரியதாகக் காட்டப்படவில்லை. அடிமை வகுப்பினர் எனப் பிரிக்கப்பட்டோர்க்குக் கல்வி பெரிதாக இடம்பெறவில்லை. எனவே, அவர்களிடையே குடிமைப் பண்பை வளர்த்தல் என்பதும் எழவில்லை. ஆனல் ஆண்டான் அடிமைப் பாகுபாடே முற்றுக ஒதுக்கப்படும் இக்காலத்தில் குடிமைப்பண்பு எல்லோருக்கும் உரிய ஒன்றுகும். குடிமையியல் என்று ஒரு தனித்துறையே பள்ளிக்கூடங்களில் புகுத்தப்பட்டமைக்கும் இதுவே காரணமாகும். எனினும், அதை மட்டும் நம்பியிராது, பல துறைகளிலும் பொதுத்தரம் உயர்ந்த குடிமக்களாக, குறுகிய மனப்பான்மையை விடுத்த ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்ற மனேநிலையை உடையோராய் மாணவ சமுதாயம் வளர்ச்சிபெறக் கல்வியும் பயனளிக்கவேண்டும் என்பதை ஏற்கவே வேண்டும்.

## மறுமைப்பயன் :-

இம்மையில் உயர்வெய்தும் பயனை மட்டும் பெரிதாகக் கொள்ளாமல், மறுமைக்கேற்பத் தன் புலன்களையடக்கித் தன்னைத்தான் உணர்ந்துகொள்வதே மனிதனுடைய உயர்ந்த இலட்சியமாக – சிறப்பாகக் கீழைத்தேசங்களிலே கொள்ளப்பட்டுள்ளது. நம் முன்னேர்கள் கல்வியை இதற்குக் கருவியாகக் கொண்டனர். ''அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்'' என்றும், ''மாந்தர் மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு'' என்றும் வரும் மேற்கோள்கள் இதனைக் காட்டுகின்றன. நான்மணிக்கடிகை இதனைத் தெளிவாகக் கூறுகின்றது :-

> கற்பக் கழிமடம் அஃகும் மடம் அஃகப்
> புற்கந்தீர்ந்து இவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்தால்

தத்துவமான நெறிபடரும் அந்நெறி
இப்பாலுலகின் இசைநிற்கு - உப்பால்
உயர்ந்த உலகம் புகும்.
(நான்மணிக்கடிகை 30)

கல்வியைத் துணைக்கொண்டு இறைவனை உணரவும் வழிகண்டனர் நம்மவர், ஈண்டு, வள்ளுவர்

கற்றதனாலாய பயனென்கொள் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

என்று கூறியதும், ''கற்ற கல்வியினும் இனியான்'' என்று கடவுள் குறிக்கப்படுவதும் நோக்கற்பாலன. உலகம் போற்றும் உத்தமராய் வாழ்ந்த மகாத்மா காந்தியும் கல்வியின் இறுதி நோக்கம் ''அழியா உண்மையை (கடவுளை) அறிவதே'' என்று கூறியுள்ளார்.

## பிழைக்கும் வழி :-

''பசிவந்திடப் பத்தும் பறந்திடும்'' என்பது பண்டுதொட்டு எம்மிடையே பரவி வந்துள்ள கருத்து. இப்பசிப்பிணியைப் போக்கி மனிதன் வாழ வழி வகுக்கவேண்டும் என்பதும் கல்வியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. கல்வியானது அறிவு, பண்பு ஆகியவற்றை வளர்ப்பதோடு வாழ்க்கைக்கு வழிகாட்டவும் வேண்டும். எனினும், வாழ்க்கைக்கு வழி என்பதைமட்டும் தனி நோக்கமாகக் கொண்டால் கல்விக்குரிய பெருமையைக் குறைப்பதாகச் சிலர் கருதலாம். ஆனால் மனிதனுக்கு வாழ வழி தெரியாவிடின் அவனுக்கு அறிவினாலும், பண்பாட்டினாலும் ஏது பயன் என்று வேறு சிலர் குறுக்கிடலாம். இவையெல்லாம் கருத்திற்கொள்ளப்பட்டாலே கல்வியின் நோக்கம் நிறைவுபெற்றதாகும். இக்காலத்தைய கல்வி முறைகளில் 'பொதுக்கல்வி' 'தொழிற் கல்வி' முதலியன இவற்றைக் கருத்திற் கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இவ்விதமான நோக்கங்களையெல்லாம் ஒரு வரையறைக்குட்படுத்துவது எளிதாக நடக்கக்கூடியதன்று. மேல்வாரியாகப் பார்க்கும்போது அவற்றுட்சில ஒன்றோடொன்று முரண்பட்டவைபோலத் தோற்றும். உ+ம் தாராளக்கல்வி-தொழிற்கல்வி, தனித்துவம்-ஒரு முகம், சமூக வளர்ச்சி - தனி வாழ்வு உண்மையில் அப்படியாக முரண்பாடு ஏற்படவேண்டியதில்லை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலக்கை அடைய முற்படுபவை. ஒவ்வொரு கால, இட தேவையைப் பொறுத்து இவற்றுள் ஒன்றோ அல்லது பலவோ வலியுறுத்தப்படலாம். எனினும் வலியுறுத்தப்படுவன மட்டுமே முக்கியமானவை என்று கொள்ளக்கூடாது. மேற் கூறப்பட்ட அம்சங்களை இணைத்து ஒருங்கே செயல்படுத்தும்போதே செம்மையான பயன் கிடைக்கின்றது.

இவற்றைக் கணிப்பிற்கொண்டு நமது நாடு, நமது சமூகம் ஆகியவற்றுக்குப் பயன் படக்கூடிய கல்வியை அளிக்க நாம் முனைய வேண்டும். அறிஞர் உவைற்ஹெட் கூறியது போல ''தேக்கக் கருத்துக்களைப் புகட்டும் கல்வி உபயோகமற்றது மட்டுமல்ல; எல்லாவற்றையும்விட அதிகக் கேடு விளைவிக்க வல்லது''. உபயோகம், சோதனை, புதிய சேர்க்கைகள் ஆகியவற்றுக்கு இடமின்றி வெறுமனே மூளையில் நிரப்பப்படும் எண்ணங்களையே அவர் ''தேக்கக் கருத்துக்கள்'' என்று குறிப்பிடுகிறார். கடந்த காலத்தைப் பற்றிய அறிவு நிகழ்காலத்தில் எமக்கு உதவும் பயனையளிப்பதோடு எதிர்காலத்துக்கும் எம்மை ஆயத்தப்படுத்த உதவ வேண்டும். அத்தகைய அறிவைப் பயன் படுத்தும் கலையைப் புகட்டுவதே கல்வி.

# புதிய பாடத்திட்டமும் இடைநிலைப் பருவக் கல்வியும்

**கலாநிதி சோ. செல்வநாயகம்**
*சிரேஷ்ட புவியியல் விரிவுரையாளர்*
*இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை வளாகம்.*

**1972** ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து புதிய கல்வி முறைமை இடைநிலைப் பருவநிலையில் பின்பற்றப்பட்டுவருகின்றது. புதிய கல்வித் திட்டம் ஏலவே நடைமுறையிலிருந்த கல்வி ஒழுங்குகளை ஓரளவிற்குத் தழுவி அமைந்துள்ளபொழுதும் புதிய முறைகளையும் சீர்திருத்தங்களையும் அது கொண்டுள்ளது என்று கூறலாம். கல்வித்துறையில் உலக நிறுவனங்களும் முன்னேற்றமடைந்த நாடுகளும் பின்பற்றிவரும் நடைமுறைகள், சீர்திருத்தங்கள் என்பனவும் புதிய கல்வித் திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன என்று கருத இடமுண்டு. கல்விச் சீர்திருத்தங்கள் புதிய ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையிலேயே அமைதல் வேண்டும். அவ்வாறு அமையும் கல்விமுறையே நிலையான பயனை அளிக்கவல்லதாயிருக்கும். ஆனால், கல்வித் திட்டம் பொருத்தமானதாய் அமையினும் அதனால் ஏற்படும் பயன் அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைப் பொறுத்தே அமைகின்றது. நடைமுறைப்படுத்தப்படுவதற்குத் தேவையான சாதனங்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வசதி, புதிய பாடநெறிகளைப் போதிப்பதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தொடர்ந்து அவதானித்து மேற்கொள்ளப்படும் தீர்வுகள் முதலியன யாவும் புதிய கல்வி முறைமை வெற்றியளிப்பதற்கு இன்றியமையாதனவாகும்.

புதிய கல்விமுறைமை 1972ஆம் ஆண்டு ஜனவரியில் 6ஆம் தரத்தில் புகுத்தப்பட்டுள்ளது. முறையே 1973, 1974, 1975ஆம் ஆண்டுகளில் 7, 8, 9 ஆந் தரங்களில் புதிய திட்டக்கல்வி இடம்பெறும். 1975 ஆம் ஆண்டு இறுதியில் இதுகாலவரை நடைமுறையிலிருந்த பொதுக்கல்வித் தராதரப் பத்திரத் தேர்வுக்குப் பதிலாக தேசிய பொதுக்கல்வித் தராதரப் பத்திரத் தேர்வு இடம்பெறவுள்ளது.

புதிய கல்வித் திட்டத்திற்கு அமைய இடைநிலைப்பருவ வகுப்புகளில் பின்வரும் பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

1. முதல் மொழி.
2. இரண்டாம் மொழி.
3. அழகியற் கல்வி. (கவின் கலை)
4. கணிதம்.
5. விஞ்ஞானம்.
6. சுகாதாரமும் உடற்பயிற்சிக் கல்வியும்.
7. சமூகக் கல்வி.
8. சமயம்.
9. தொழில் முன்னிலைப் பாடநெறி I.
10. தொழில் முன்னிலைப் பாடநெறி II

பாடவிதானங்கள், போதனை நேரங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சமயம், முதல் மொழி, இரண்டாம் மொழி, கணிதம், சுகாதாரமும் உடற்பயிற்சிக் கல்வியும் எனவரும் பாடங்களில் அதிக மாற்றம் செய்யப்படவில்லை. விஞ்ஞானம், சமூகக் கல்வி

ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் செய்யப்படவில்லை. விஞ்ஞான பாடநேரம் சிறிது கூட்டப்பட்டுள்ளபொழுதும் சமூகக் கல்வி நேரத்தில் மாற்றம் இல்லை. அழகியற் கல்வியில் சித்திரம், நடனம், சங்கீதம் ஆகியவற்றினுள் ஒன்று போதிக்கப்படலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்தில் தொழில் முன்னிலைப் பாடநெறி I, II ஆகியவற்றிற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் ஏற்றமுறையில் தொழில் முன்னிலைப்பாடநெறிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. விவசாயம், மரவேலை, உலோகவேலை, தையல், மனையியல் குறிப்பிட்ட சில கைத்தொழில்கள் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. தொழில் முன்னிலைப் பாடநெறி மூலம் நாட்டின் வளத்தை விருத்தி செய்வதற்கு ஏற்ற கல்வி முறையை விருத்தி செய்வதும், செயன்முறை சார்ந்த அடிப்படை அறிவை வளர்ப்பதும் முக்கியமாகக் கொள்ளப்பட்டன. தொழில் முன்னிலைப் பாடநெறிகள் இரண்டினைத் தெரிவுசெய்யும் சுதந்திரம் பாடசாலைகளுக்கு உண்டு. பாடசாலை அமைந்திருக்கும் சூழ்நிலையும் சமூக நிலைமைகளையும் பொறுத்து பொருத்தமான இரண்டு பாடநெறிகள் தெரிவுசெய்யப்படலாம்.

புதிய பாடத்திட்டத்தில் பொதுக்கல்வி ஒழுங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்காலவரை நடைமுறையிலிருந்த பொதுத் தராதரக் கல்வித் திட்டத்திலும் பொதுவான கல்வி நெறியே அடிப்படையாகவிருந்தது. அழகியற் கல்வி சார்பான பாடங்கள், தொழில் வகைகள் சார்பான சில பாடங்கள் ஆகியன அப்பொழுது வசதியுள்ள சில பாடசாலைகளில் மட்டுமே போதிக்கப்பட்டு வந்தன. அப்பாடசாலைகளிலும் மேற்குறித்த பாடங்களுங்கு ஒதுக்கப்பட்ட நேரங்கள் பயனுள்ள முறையில் உபயோகிக்கப்படவில்லை. பெரும்பாலும் முக்கியமற்ற பாடங்களாக அவை கருதப்பட்டமையே இதற்குக் காரணமாகும். இதனல் அப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் கற்றுவரும் மாணவரும் போதிய ஊக்கம் கொண்டவர்களாக இருக்கவில்லை.

புதிய பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பத்துப் பாடங்கள் பெரும்பாலும் தேர்வை இலக்காக வைத்துப் போதிக்கப்படுதல் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது. இப்பாடங்களுக்குரிய விடயங்களை அவ்வவ் வகுப்புக்களில் கற்பித்து முடிப்பதும் அவசியம் என்று கருதப்படுகின்றது. கற்பிக்கும் பகுதிகளைப் பற்றி ஒழுங்கான குறிப்புகள் வைத்திருப்பதும், படிப்பித்தவற்றைப் பெற்றூர் கவனத்திற்குக் கொண்டுவருவதும் மாணவரை ஒழுங்கான முறையில் நடாத்திச் செல்ல உதவியாகவிருக்கும் எனவும் கருதப்படுகின்றது.

புதிய பாடத்திட்டம் இக்காலத் தேவைகளுக்கு ஏற்ற பொதுக் கல்வியை வலியுறுத்தி நிற்பதோடு, உயர்கல்விக்கு இன்றியமையாத முதல் மொழி, இரண்டாம் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி முதலான பாடநெறிகளையும், செம்மையான வாழ்க்கைக்கு இன்றியமையாத சமயம், அழகியற் கல்வி ஆகிய பாடநெறிகளையும், இடைநிலைத் தொழில்நுட்ப அறிவை ஓரளவிற்கு இளமை நிலையிலிருந்தே பெற்றுச் சுதந்திரமாகத் தொழில் முறைகளில் ஈடுபடும் வாய்ப்பை அளிக்கவல்ல தொழில் முன்னிலைப் பாடநெறிகளையும் ஒருங்கிணைத்துத் தேர்வினை இலக்காகக் கொண்டமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கல்வித் திட்டம் என்ற அடிப்படையில் பார்க்கும்பொழுது புதிய பாடத்திட்டம் விரும்பத்தக்க ஒரு முறை என்பது சொல்லாமலே அமையும். ஆனல் நடைமுறையில் பல குறைபாடுகளை நாம் காணுகின்ருேம். கணிதம், விஞ்ஞானம், இரண்டாம் மொழி, தொழில் முன்னிலைப் பாடநெறிகள் முதலானவற்றைப் போதிக்கவல்ல பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினல் புதிய கல்வித்திட்டம் சிறந்த முறையில் நடைமுறையில் பின்பற்ற முடியாததாயிருக்கின்றது. புதிய உபகரணங்கள், கருவிகள், முதலியன இல்லாத காரணத்தினல் செயன்முறை சார்ந்த பாடநெறிகளைப் போதிப்பது பிரச்சினையாகவுள்ளது. இதனல் சில பாடசாலைகளில் ஆசிரியர் வசதி உள்ளபொழுதும் ஆர்வத்தோடு புதிய பாடநெறிகளைப் போதிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. மாணவர்களும் இப்பாடங்களில் அக்கறை

காட்டுவது குறைவாகவிருக்கின்றது. இத்தகைய குறைபாடுகளை உடனடியாகக் கவனித்து ஆவன செய்தல் அவசியமாகும். ஒவ்வொரு பாடசாலையிலும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எவ்வெவ் பாடங்கள் போதிக்கப்படுகின்றன என்பதனை அவதானித்து அப்பாடங்களைப் போதிக்கப் பயிற்சியுடைய ஆசிரியர்கள் உள்ளனரா என்பதனையும் தேவையான உபகரணங்கள், கருவிகள் முதலியன உள்ளனவா என்பதனையும் அறிந்து இயன்ற அளவுக்கு அக்குறைபாடுகளை நீக்கக் கல்விப் பகுதியினர் முயல வேண்டும். இத்தகைய குறைபாடுகள் நீடிக்குமானால் 1975ஆம் ஆண்டு இறுதியில் தேசிய பொதுக் கல்வித் தராதரப் பத்திரத் தேர்வில் பெருந் தொகையான மாணவர் பாதிக்கப்படலாம். முன்னைய நிலையில் உத்தியோகத்திற்காக மாணவர் கற்றுவரும் நிலையும் இல்லாது, புதிய முறையில் தொழில் முன்னிலைப் பாடநெறிகள் உட்பட்ட பொதுக் கல்வியினைப் பெறும் நிலையும் இல்லாது அல்லற்பட நேரலாம். எனவே கல்விப் பகுதியினர் இடைநிலைப் பருவக் கல்வியில் மிகக் கூடிய கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். உத்தியோக நோக்கத்திற்காகப் பெருந்தொகையான மாணவர் கல்வி கற்கப் புகுந்ததனால் ஏற்பட்ட விளைவுகளைத் தவிர்க்குமுகமாக ஏற்படுத்தப்பட்ட புதிய கல்வித்திட்டம் முன்னரிலும் பார்க்கப் பாதகமான விளைவுகளை உண்டாக்காதவாறு பார்த்துக்கொள்வது கல்விப் பகுதியினரதும் ஆசிரியர்களதும் மாணவர்களதும் பொறுப்பாகும்.

★


தரம்மிக்க பலசரக்கு மளிகைப் பொருட்களை வாடிக்கையாளருக்கு
மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவான விலைக்கும்
நீண்ட காலமாக அளித்துவரும்
ஒரே ஸ்தாபனம்

**கணேசன் ஸ்டோர்ஸ்.**

அத்துடன்,

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், பொங்கல் வாழ்த்துக்கள், தீபாவளி சித்திரை வாழ்த்துக்கள், தினபதி வெளியீடுகள், மாத சஞ்சிகைகள், கீதா, நம்நாடு ஆகிய பத்திரிகைகளின் ஏக விநியோகத்தர்.

நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும்
சிறந்த ஸ்தாபனம்

● ● ● **கணேசன் ஸ்டோர்ஸ்** ● ● ●

**11, 13 மத்திய வீதி, மட்டக்களப்பு**

# நமது கல்விமுறையும் சமுதாயமும்

**சி. சிவசேகரம்**
*விரிவுரையாளர்*
*எந்திர வியற்பீடம், இலங்கைப் பல்கலைக்கழக வளாகம், பேராதனை.*

நமது நாட்டின் கல்விமுறை நமது தேசிய தேவைகளை அனுசரித்து ஏற்படுத்தப்பட்டவொன்றுவென்பது தர்க்கத்திற்குரிய ஒரு விஷயமல்ல. பிரித்தானிய காலனித்துவம் தனது காலனித்துவ நிர்வாக இயந்தியத்தின் தேவைகளை நிறைவு செய்யுமுகமாக தன் நிர்வாகச் சுமையைப் பொறுப்பேற்றதற்கானவொரு உள்ளூர் நிர்வாக வர்க்கத்தைச் சிருஷ்டிக்கும் தேவையை நன்குணர்ந்திருந்தது. இதன் அடிப்படையில் தன் காலனிகள் ஒவ்வொன்றிலும் அவ்வக் காலனிகளது நிலைமையை அனுசரித்து இத்தகைய வர்க்கத்தை ஏற்படுத்தியது. இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இந்த நிர்வாக வர்க்கம் உள்நாட்டிலேயே தெரிந்தெடுக்கப்பட்டதொன்றாக இருந்தது. இது குறிப்பிட்ட தேசிய சிறுபான்மை இனத்தினரின் மத்தியிலே தன் பெருமையைக் கொண்டிருந்ததுகூட ஒரு தற்செயலான சம்பவமல்ல. இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாக வர்க்கத்திற்கு அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கான பயிற்சியை அளிக்குமுகமாகவே கல்வி பயிற்றப்பட்டது. இக்கல்வியில் ஆரம்ப காலத்தில் எதுவிதமான தொழில்நுட்பப் பயிற்சிகூட இல்லாதது குறிப்பிடத்தக்கது. பின்னைய நிலையில் பயிற்றப்பட்ட தொழிற்துறைப் படிப்புக்களிலும் நடைமுறைத் தொழில்நுட்பத்தினைவிட நிர்வாகமே பிரதான அம்சமாகத் திகழ்ந்தது. எனவே ''(சின்ன) துரைமாரை'' உற்பத்திசெய்யும் ஓர் இயந்திரமாகவே நமது கல்விமுறை அமைந்திருந்தது எனலாம்.

நாடு சுதந்திரமடைந்தபோதும் சலுகை படைத்த இந்த நிர்வாக வர்க்கத்தின் உயர்மட்டத்தினர் தமது வர்க்க ரீதியான கண்ணோட்டத்தை மாற்றவேண்டிய அவசிய மேற்படவில்லை. இதே நிர்வாக யந்திரத்தின் கீழ்மட்டங்களில் இருந்தோர் தமக்கும் அதிக சலுகைகளை வேண்டி அதே நிர்வாக யந்திரத்தின் உச்சப்படிகளை நோக்கி இயங்கினர். இந்த நிர்வாக சேவைகளில் உள்ளவர்களது வசதியான வாழ்வு உழைப்பில் ஈடுபட்டிருந்த பல தரத்திலுள்ளவர்களையும் கவர்ந்திழுத்ததுகூட சமுதாயத்தில் இயல்பான ஒன்றே.

ஒரு தனி நபர் நிர்வாக யந்திரத்தில் ஓர் அங்கமாகும். எனவே கல்வியானது குறிக்கோளைச் சாதிப்பதற்கான ஒரு கருவியாக மாறியதுடன் கல்வியினது குறிக்கோள் பொதுவாகவே உத்தியோகமாக இருந்தது. எனவே மனிதனுக்குத் தன் உற்பத்தி வலிமையை உயர்த்துவதற்கு உதவும் ஒரு கருவியாகவோ, சமுதாயம்பற்றிய ஒரு சரியான கண்ணோட்டத்தைப் பெற உதவும் ஒரு சாதனமாகவோ சமுதாயத்தை மாற்றியமைக்கும் பணியில் ஒரு ஆயுதமாகவோ காலனித்துவமுறை ஏற்படுத்திய கல்விமுறை இருந்திருக்குமென நாம் எதிர்பார்க்கமுடியாது. இக்கல்விமுறை இலவசக் கல்விமூலம் பரவலாக்கப்பட்டதும் அதன் தொடர் விளைவுகள் நிர்வாக சேவைகளை நோக்கிப் பயிற்றப்பட்ட ஆயிரம் அல்ல லட்சக்கணக்கான இளைஞர்களை சிருஷ்டித்து 'படித்தோர் வேலையின்மை' என்னும் ஒரு பிரச்சனையினை பூதாகரமான அளவில் ஏற்படுத்தியது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகிய இந்த நிலவரத்தில் மக்களது அறியாமை இருளை அகற்றும் இலவசக் கல்வியை யாரும் தவறென்று கூற

முன்வருவது நிபந்தனையற்ற கண்டனத்திற்குரியது. ஆனால் நிர்வாக சேவைகளை ஒரு வசதிபடைத்த வர்க்கத்தைப் பேணும் ஒன்றாக வைத்துக்கொண்டு, அதற்கே உரிய முறையில் கல்வி முறையையும் வைத்துக்கொண்டு அதன்கீழ் அளிக்கப்படும் கல்வியால் வேறெதனைத்தான் உருவாக்க முடியும்? கல்வி இன்றும்கூட ஒரு பச்சைப்படையான வர்த்தக முதலீடாகக் கருதப்படுவதை நம் மாற் காணமுடிகிறது. நமது கல்வி முறையின் சில முக்கிய குணம்சங்கள் பின்வருமாறு :-

i. உடலுழைப்பைத் தாழ்த்தியும் புத்தி ஜீவிகளது "பேனா உந்துதலை" உயர்த்தியும் மதிப்பிடல்.

ii. படித்தவர்கள் தம் கைகளால் உழைப்பதை ஏன் வீட்டு வேலைகளைச் செய்வதைக்கூடக் கேவலமாக எண்ணுதல்.

iii. "ஏட்டுக்கல்வி மனிதனை உயர்த்துகிறது", "அறிவு அறிவிற்காகவே" என்பனபோன்ற கோஷங்களின் கீழ் முடிந்தவரை நேரடி உற்பத்தியினின்று தம்மை ஒதுக்குதல்.

iv. அத்தாட்சிப் பத்திரங்கள் மூலம் படிப்பை அளவிடல்.

v. முக்கியமாக ஞாபகசக்தியை அடிப்படையாகக் கொண்டே பரீட்சைகளை அறிவின் அளவுகோலாகக் கொள்ளுதல்.

vi. சமுதாய ரீதியான உற்பத்திக்குதவும் உழைப்பையும் ஆராய்வையும் விட ஏட்டுப்படிப்புச் சாதனைகளைப் பிரதானமாகக் கருதல்.

இன்னும் இவைபோன்று......

சுருக்கமாகச் சொன்னால் புல்லுருவிகளை உயர்த்தியும் உழைப்பவர்களைத் தாழ்த்தியும் வைக்கும் கருவியாகவே கல்விமுறை தொழிற்பட்டுள்ளது. தொழில்நுட்பக்கல்விகளில்கூட மேற்கூறிய மனோபாவங்கள் அகற்றப்படவில்லை. பல எஞ்சினியர்கள் தம் கைகளைக் கறைபடுத்த விரும்புவதில்லை. பல வைத்தியர்கள் கீழ்மட்ட வைத்தியத் தொழிலிலுள்ளவர்களது வேலைகளைச் செய்ய விரும்புவதில்லை. என்பன யாவுமே நமது கல்விமுறையின் நிஜமான பிரதிபலிப்புக்கள் தான்.

நமது கல்விமுறை ஏற்படுத்திய படித்தவர்கள் வேலையின்மையை அடிப்படைக் காரணமாகக் கொண்டே அது விமர்சிக்கப்பட்டுக் கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்றையக் கல்விமுறையில் தொழிற்பயிற்சி ஒரு புதிய அம்சமாகும். இது கொள்கையளவில் வரவேற்றற்குரியதே ஆயினும் நடைமுறையில் இது பழைய முறையினது குறைபாடுகளை அகற்றுமா?

நிர்வாகப் புல்லுருவி வர்க்கம் உழைப்பில் ஈடுபட்டுள்ள மிகப்பெரும்பான்மை வெகுஜனங்களைவிட வசதியாகவும், கூடிய வருமானத்துடனும் அரசியற் செல்வாக்குடனும் உள்ளவரை தேசிய உற்பத்திக்கு மிகச் சிறுபங்கையே அளிக்கும் நகரம் கிராமத்தையும் தோட்டப்பகுதியையும் ஆதிக்கம் செலுத்தும்வரை இன்றைய சமுதாய அமைப்பில் பொதிந்துள்ள வர்க்க நலன்களையுடைய நிர்வாக வர்க்கமும், நகர உயர் நடுத்தர வர்க்கமும், பிற்போக்கு சக்திகளதும் அந்நிய ஏகாதிபத்தியத்தினதும் கருவிகளாகச் செயற்பட்டு அரசியல் ஆதிக்கம் செலுத்தும்வரை கல்வியின் குறிக்கோளை மாற்றமுடியுமா? நாட்டின் தேசிய நலன்கட்கு விரோதமான அந்நிய ஏகாதிபத்திய வசதிகளும் அவர்களது எடுபிடிகளும் நமது நாட்டின் மீது செலுத்தும் ஆதிக்கத்தை அகற்றி நமது நாட்டின் அரசியல் ஆதிக்கத்தை உற்பத்தியின் நாயகர்களான உழைக்கும் வெகுஜனங்களது கைக்குக் கொண்டு வரும்வரை கல்வியால் உழைப்புக்கோ, உற்பத்திக்கோ சமுதாய உயர்வுக்கோ பூரணமாக உதவமுடியாது. ஆனால் உலகம் இன்று வேகமாக மாறிவருகிறது. ஏகாதிபத்திய விரோத சக்திகளது உலுப்புதலில் இன்று ஏகாதிபத்திய சக்திகளது சொந்த மண்ணே நடுங்குகிறது. இதன் எதிரொலிகளை இலங்கையிலும் கேட்கிறோம். இந்த நெருக்கடி இலங்கையின் சமுதாய அமைப்பைக் காலப் போக்கில் மாற்றாமல் இருக்கமுடியாது. அப்போது கல்விமுறை மாத்திரம் மாறாமல் இருக்கமுடியுமா?

# நல்லவை செய்வோம்

பாடுபடும் பாட்டாளி மக்கள் தம்மின்
பசித்துயரைப் போக்காது காலந் தள்ளல்
ஏடறிந்த எங்களுக்கு நல்ல தல்ல
எடுத்தெறிவோம் சோம்பல் தனை இப்பொழுதே
காடெல்லாம் வெட்டி நல்ல கழனியாக்கி
கடுமுழைப்பால் வியர்வையினைச் சிந்தி உள்ள
மேடெல்லாம் பயிர்விளைத்து **நன்மை** செய்வோம்
மேதினியில் எம்நாட்டை உயர்த்திவைப்போம்.

சாதிவெறிக் கூக்சலிட்டுச் சண்டை போட்டு
சரியான சமயநெறி புரிந்தி டாது
வாதுசெய முனைகின்ற மனிதர் தம்மை
வழிகாட்டி **நல்லவை**நாம் நாளுஞ் செய்தால்
ஆதிசிவன் பெற்றுவிட்ட சைவந் தன்னை
அடியொற்றி வாழ்கின்ற மக்க ளெல்லாம்
பீதியின்றி வாழ்ந்திடுவர் பிரிவு பேசார்
பெருமை கொள்ளும் இந்நாடு உண்மையம்மா!

சிங்களவர் செந்தமிழர் என்று இந்த
சிறியநம் ஈழமதைத் துண்டு போட்டு
பங்கமதைச் செய்யாமல் பாச மோடு
படித்தநற் கருத்ததனை மனதி லெண்ணி
பொங்குகின்ற மகிழ்வோடு **நல்லவை நாம்**
புரிந்து விட்டால் இந்நாட்டின் சிறுமைநீங்கி
மங்களமாய் வாழ்ந்திடுவர் மக்க ளெல்லாம்
மதிப்புடனே இந்நாடு விளங்கு மன்றோ !

நாட்டினது வருவாயில் பெரிய பங்கை
நன்மையினை நோக்காது பெட்டி யுள்ளே
பூட்டிவைக்கும் கொடியோரின் செயல் களைந்து
புதியவழி அவருக்கு நாமுஞ் சொல்லி
நாட்டினது நன்மைக்காய் உழைக்க வைக்கும்
**நல்லவற்றை** நாமொன்றாய்ச் செய்வோ மென்றால்
ஏட்டிலுள்ள திட்டங்கள் எல்லாம் தீரும்
இந்நாட்டின் வறுமையது ஓடிச் சேரும்.

**நல்லவைதாம்** செய்திடுவோம் நாளும் நாங்கள்
நமதுமனச் சாட்சிக்கு மாறு இன்றி
அல்லவைகள் களைந்திடுவோம் அன்பு கொள்வோம்
ஆணவத்தை விட்டொழிப்போம் அகந்தை மாய்ப்போம்
இல்லையென்ற சொல்லதனை இல்லை யென்று
இப்பொழுதே ஆக்கிடுவோம் இணைவோ மொன்றாய்
சொல்லினிலே உண்மையது கொள்வோம் நாட்டைச்
சொர்க்கமது ஆக்கிடுவோம் சோரோம் நில்லோம்.

வெண்பா

இங்கிருந்த செல்வத்தால் சோறூட்டுப் பஞ்சமதை
தங்குதடை ஏதுமின்றித் தீர்த்துவைத்தோம் - எங்களுக்கு
இல்லையென்று ஆச்சுதிப்போ ஏற்றவழி கண்டுடனே
நல்லவைதாம் செய்திடுவோம் நயந்து.

**க. கனகசிங்கம்,**
(தமிழ்ப்பித்தன்)
விடுகையாண்டு 1973/74.

[1974ம் ஆண்டு இலக்கிய மன்றம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதல்பரிசில் பெற்ற கவிதை].

# ஆரம்பக் கல்வியின்
## இசையும் அசைவும்

ஆரம்பக்கல்வியில் பல புரட்சிகரமான மாற்றங்கள் உலகம் எங்கும் நடைபெற்றுவருகின்றன. இம்மாற்றங்கள் நமது நாட்டிலும் பிரதிபலிக்கின்றன. பெரும்பாலும் குழந்தைகளின் இயல்புகளையும் கற்கும் தன்மைகளையும் ஆராய்ந்தவர்களின் முடிபுகளை அடிப்படையாகக் கொண்டே இந்த மாற்றங்கள் நடைமுறைப் படுத்தப் படுகின்றன.

குழந்தைகளின் மொழித்திறனையும் கணித எண்ணக் கருக்களையும், அழகியற் தன்மைகளையும் ஆக்கத்தினையும் சூழலை அடிப்படையாகக் கொண்டு விருத்தி செய்வதற்கு ஆரம்பக்கல்வி முயல்கிறது. அழகியற் தன்மைகளை விருத்தி செய்வதற்கு ''இசையும் அசைவும்'' ஏற்ற ஒரு சாதனமாகக் கையாளப்படுகிறது.

குழந்தைகளுக்கு அனுபவமுள்ள, நடத்தல், பாய்தல், ஓடுதல், துள்ளுதல் முதலிய அசைவுகளை இசையுடன் இணைந்து இயக்க வைப்பதையே முதற்படியாகக் கருதுகிறோம். காதால் கேட்டு, அவர்கள் கேட்பதற்கேற்ப இயங்குவது ஒரு அடிப்படைத் திறனாகும். இங்கு ஒவ்வொருவரும் தமது அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்றவண்ணம் இயங்குதல் வேண்டும். பெரும்பாலும் முதிர்ந்தவர்களின் முன்மாதிரி இங்கே முக்கியமல்ல. இப்படியான அசைவுகளிலிருந்தே உயர்ந்த திறன்களுக்கு வழிப்படுத்துகிறோம்.

குழந்தைகளின் அசைவுகள் அவர்களது அனுபவத்தையும் எண்ணக் கருக்களையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். முதிர்ந்தவர்களின் முன்மாதிரிக்கு அசைந்தால் இந்த அசைவுகள் அவர்களுக்கு ஒரு சுமையாக இருக்கும். சுமையாக இருந்தால் அங்கு அழகியல் உணர்ச்சி தடைப்படும். எனவே குழந்தைகள் சுதந்திரமாக அசைவது முக்கியமாகும். முதிர்ந்தவர்களின் கட்டுப்பாட்டுக்கு அசையும் குழந்தைகளின் தனித்தன்மையும் ஆக்கத்திறனும் விருத்தியடையாது போகலாம்.

குழந்தைகளின் ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கு சுதந்திரம் முக்கியமாகும். ஆக்கத்திறனைத் தடைப்படுத்துவது பயமாகும். குழந்தைகள் மத்தியில் பயத்தைப் போக்கி ஆக்கத்திறனை விருத்திசெய்ய இசையும் அசைவும் மிகவும் உதவுகிறது. குறிப்பாக இசையிலும் நடனத்திலும் ஆக்கத்திறனை விருத்திசெய்ய இசையும் அசைவும் அடித்தளமாக அமைகிறது. குழந்தைகளின் கல்வி மகிழ்ச்சிகரமானதான அலுப்புத் தட்டாததாக அமையவேண்டும். இதற்கு இசையும் அசைவும் நன்கு பயன்படுகிறது. குழந்தைகளை மகிழ்ச்சியாக்க உயர்தரமான இசைக்கருவி வேண்டும் என்பதல்ல. சாதாரண பொருள்களைக்கொண்டு செய்த கருவிகளே போதும். இக்கருவிகளை குழந்தைகள் பயமின்றிக் கையாளவேண்டும. இப்படியான செயல்மூலம் சூழலில் கிடைக்கும் பொருட்களை ஆக்கப்பணிக்கு பயன்படுத்தவும் குழந்தைகள் தூண்டப்படுகின்றனர்.

**செல்வி பாலேஸ்வரி செல்லத்தம்பி**
விடுகையாண்டு

# ''இலங்கைத் தமிழ்த் திரைப்படங்கள்''

திரைப்படம் மக்கள் மனதில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு பலம்மிகுந்த சாதனமாகும். இலங்கைத் தமிழ் திரைப்படங்களைப் பொறுத்தவரையில், அவை எண்ணிக்கையில் மிகக்குறைவாக இருப்பதனுல் மேற்கூறிய பாதிப்பை ஏற்படுத்தினவா என்பதை அறிய முடியவில்லை. ஆனுலும் வெளிவந்த அந்த ஒருசில தமிழ்த்திரைப்படங்களின் போக்கு, தரம் முதலியவற்றை ஆராய்ந்து கூறமுடியும்.

பொதுவாக எமது ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள் தொழில்நுட்பரீதியில் பின் தங்கிய நிலையிலிருந்தாலும் ஒருசில படங்கள் தரமான கதையமைப்பில் முன்னணியில் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

இன்றுவரை பதின்மூன்று ஈழத்துத் தமிழ்த்திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் 16 மி. மீட்டர் படங்கள் மூன்று; சிங்களப்படங்களிலிருந்து மொழி மாற்றம் செய்யப்பட்டவை இரண்டு. சாதாரண படஒகளாக எட்டுப்படங்கள் வெளிவந்துள்ளன. ''சமுதாயம்'', ''புரட்சி'', ''பாசநிலா'' மூன்றும் 16 மி. மீட்டர் படங்களாகும். ''நான்கு லட்சம்'', ''கவியுககாலம்'' இரண்டும் டப் செய்யப்பட்ட படங்களாகும். ''தோட்டக்காரி'', கடமையின் எல்லை'' ''டாக்சி டிறைவர்'', ''நிர்மலா'', ''மஞ்சள் குங்குமம்'', ''வெண் சங்கு'', ''குத்துவிளக்கு'', ''மீனவப் பெண்'' இவ்வெட்டுப்படங்களும் சாதாரண படங்களாக அதாவது 35 மி. மீற்றர் படங்களாக வெளிவந்தன. இலங்கையின் இருபத்தெட்டு வருடகாலத் திரைப்படச் சரித்திரத்தில் கந்தட 10, 12 ஆண்டுக் காலத்தில்தான் இத்தமிழ்த்திரைப்படங்கள் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஈழ நாட்டில் ''சினிமா'' என்ற கலைத்தொழிலை ஆரம்பித்துவைத்த பெருமை தமிழர்களையே சாரும். ஆனுல் ஏனே தமிழ்சினிமா முன்னேற்றமடையவில்லை?

திரு. எஸ். எம். நாயகம் என்பார், இந்த நாட்டின் சிங்களப்படத்துறையை உருவாக்கி வைத்தவர்களில் முன்னிலை வகிக்கிருர். இதற்கு நன்றிக்கடனுகவோ என்னவோ ஈழநாட்டின் தமிழ் திரைப்படத் துறையை ஒரு சிங்கள மகன்தான் ஆரம்பித்துவைத்தார். அவர்தான், திரு. ஹென்றி ஆரியவன்ச ஆவார். பிறமொழிப்படங்களை மொழிமாற்றம் செய்தும், சிங்களக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்காமலும், ஆரம்பித்த சிங்களச் சினிமா இன்று ஒரு தராதர நிலையை அடைந்து, தனது கலாச்சாரத்தைப் பிரதிபலித்து தங்கப்பதக்கம் பெறுமளவுக்கு தரமான படங்கள் தயாராகி சர்வ தேசப்புகழைக்கூட அடைந்திருக்கின்றன. இவற்றுடன் ஒப்புநோக்கும்பொழுது ஈழத்துத் தமிழ் திரைப்படங்களின் நிலைமட்டுமல்ல, இந்தியத் தமிழ்த் திரைப்படங்களின் நிலைகூட மிக வேதனைக்குரியதாகும்.

தமிழகத் திரைப்படங்களைப்போன்று ஆடல், பாடல், நடனம் இன்னேரன்ன பல கலப்படங்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டவையே இங்கு தயாரான பல தமிழ்த் திரைப்படங்கள் இந்திய தமிழ்த் திரைப் படங்களைத் தழுவித் தயாரிக்கப்பட்ட பல சிங்களப்படங்கள் வெற்றியடைகின்றன. ஆனுல் அதே திரைப்படங்களைப் பின்பற்றி எடுக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்த் திரைப் படங்கள் தோல்வியடைவதன் காரணமென்ன? இந்திய தமிழ்த் திரைப்படங்களைப் போன்று எமது தமிழ் திரைப்படங்கள் பெரும் பணச்செலவில் நட்சத்திர மதிப்

புடன் தயாரிக்கமுடியாமல் போனதே தோல்விக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

அண்மையில் வெளிவந்த எமது நாட்டுப் படைப்பான ''குத்துவிளக்கு'' திரைப்படம் யாழ்ப்பாணத்தில் நூறு நாட்கள் ஓடியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அது ஒரு யதார்த்தப் படைப்பு என்று சிலர் கூறுகின்றனர். அதை ஏற்றுக்கொண்டாலும் அப்படம் பணவசூலில் வெற்றி பெற்றதா என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதாகும். எந்தத் திரைப்படமும் பணவசூலில் வெற்றிபெற்றாலன்றி திரைப்படத் தொழில் வளரப் போவதில்லை.

இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களைப் பற்றி பல குறைகள் கூறப்படுகின்றன. திரைப்படம் தெளிவாக இருப்பதில்லை; படப்பிடிப்புச் சீராக இல்லை. படத்தொகுப்பு முறையாக இல்லை. நடிகர்கள் திரைப்படத்திற்கு ஏற்ற முகவெட்டும் உடலமைப்பும் உள்ளவர்களாக இருப்பதில்லை. வசனங்கள் தெளிவாகக் கேட்பதில்லை. இப்படியான தொழில்நுட்பக் குறைபாடுகள் இருப்பது உண்மையே. அடுத்தடுத்து வரும் திரைப்படங்களில் இக்குறைபாடுகள் நீக்கப்பட்டு வருகின்றன என்பதும் உண்மையே. அடுத்தகுறை, தயாரிப்பாளர்களே நடிகர்களாகவும் பாடகர்களாகவும் தோன்றுவதால் நல்ல நடிகர்களும், பாடகர்களும் தவிர்க்கப்படுகின்றார்கள், என்ற குறையும் கூறப்படுகின்றது. தயாரிப்பாளருக்குத் தெரிந்தவர்களுக்கும் நண்பர்களுக்குமே நடிக்கச் சந்தர்ப்பம் கொடுப்பதும் குறைபாடுகளில் ஒன்றாகும். தொழில்நுட்பக் குறைபாடுகளுக்குத் தயாரிப்பாளர்கள் காரணமில்லாவிட்டாலும், மற்றக் குறைபாடுகளுக்கு தயாரிப்பாளர்களே காரணமாவார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ''இலங்கைப்படம் தானே அதில் என்ன இருக்கப் போகிறது'' என்று கூறும் தேசாபிமானம் சிறிதுமற்ற இரசிகர்களின் மனப்பான்மையே எமது தமிழ்த்திரைப்பட வளர்ச்சிக்குப் பெரும் குறையாக இருக்கிறது. ''இந்திய நாட்டுத் தமிழ் சஞ்சிகைகள் நிறுத்தப்பட்டதும் நான் சஞ்சிகைகள் படிப்பதையே நிறுத்திவிட்டேன்'' என்று கூறிய சிலரைப் போல், அந்தக் கிணற்றுத் தவளைகளைப் போல், சினிமா ரசிகர்களிலும் பலர், அதாவது அந்நிய மோகங்கொண்ட பல இலங்கையர் இங்கு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசத்துரோகிகளின் மனப்பான்மை மாறினாலொழிய எமது தமிழ்த்திரையுலகம் வளரப்போவதில்லை. இதை ஒவ்வொரு இலங்கையனும் உணர்ந்திருக்கவேண்டும்.

# எமது திரைப்படங்கள்

## ''தோட்டக்காரி''

*1963*ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை, இலங்கைத் தமிழ்மக்கள் மறக்கமுடியாத நாளாகும். வரலாற்றுப் பெருமைமிக்க நாளாகும். அன்றுதான் எமது தாய்த் திருநாட்டின் முதலாவது தமிழ்ப்படமான கணபதி பிக்சர்சாரின் ''தோட்டக்காரி'' திரையிடப்பட்டது. பி. எஸ். கிருஷ்ணகுமார் நெறிப்படுத்திய இப்படம் பி. எஸ். முத்துவேல் அவர்களால் தயாரிக்கப்பட்டது. இலங்கையில் பல இடங்களில் ஒரே நாளில் திரையிடப்பட்டது. பல ரசிகர்களின் பாராட்டையும் பெற்ற இப்படத்தில் எஸ். என். தனரெத்தினமும் ஜெயஸ்ரீயும் முக்கிய பாத்திரத்தில் நடித்தார்கள்.

## ''கடமையின் எல்லை''

இரண்டாவது படமாக கலாபவன பிலிம்ஸ்சாரின் ''கடமையின் எல்லை'' வெளிவந்தது. இத்திரைப்படம், ஆங்கிலமகாகவி ஷேக்ஸ்பியரின் ''ஹம்லட்'' என்ற சரித்திரக் கதையைக் கொண்டதாகும். இப்படத்தை காலம்சென்ற பி. எம். வேதநாயகம் என்பார் இயக்கினார். இப்படத்தில் பிரபல நாடகக் கலைஞர் ஏ. ரகுநாதன், ரவீந்திரன், தேவன் அழகக்கோன் ஆகியோர் நடித்துச் சிறப்பித்தார்கள்.

## ''டாக்ஸி டிரைவர்''

பலரைக் கவர்ந்த ஜனரஞ்சகப்படமான ''டாக்ஸி டிரைவர்'' மூன்றாவது படமாக

வெளிவந்தது. தங்கமணி பிக்சர் சார்பில் மாலினிதேவி தயாரித்த இப்படத்தை, சுண்டுக்குளி சோமசேகரன் நெறிப்படுத்தினர். சோமசேகரன் ஒலிப்பதிவு எஞ்சினியரிங் பட்டம் பெற்றவர். ஈழத்தின் பல சிங்கள, தமிழ் படங்களுக்கு ஒலிப்பதிவு எஞ்சினியராகக் கடமையாற்றியிருக்கிறர். இவ்வனுபவங்களே ''டாக்ஸி டிரைவரை'' சிறந்த முறையில் நெறிப்படுத்த உதவியது என்று கூறலாம். இப்படத்தில் ராஜேஸ்வரன், யோகாதில்லைநாதன், தேவன் அழகக்கோன், சந்திரகலா ஆகியோர் நடித்தனர்.

## ''நிர்மலா''

நாலாவது படமாக நிர்மலா வெளிவந்தாள். இவள், இன்றும் பலரின் உள்ளங்களிலும் நிறைந்திருக்கிருள் என்று கூறலாம். இப்படத்தின் ஜனரஞ்சகமான கதையமைப்பே அவ்வாறு மக்கள் மனதில் நிறைந்திருக்கக் காரணமாகும். இப்படத்தில் இடம்பெற்ற பாடல்களும் தென்னிந்தியச் சினிமாப் பாடல்களுக்கு நிகராக இருந்தன. ''தான் தோன்றிக் கவிராயர் (சில்லையூர் செல்வராசன்) இயற்றிய பாடல்களுக்கு திருகோணமலை பத்மநாதன் இனிமையாக இசையமைத்தார். இப்படத்தில் இடம் பெற்ற லோபஸ் பாடிய ''கண்மணி ஆடவா காதலைச் சூடவா'' என்ற பாடல் அனேகரின் பாராட்டைப்பெற்று இன்றும் பலரின் உதடுகளிலும் தவழ்ந்துகொண்டிருக்கிறது. இலங்கையில் தயாரிக்கப்பட்டு வெளிவந்த தமிழ் படங்களில் இப்படத்தில் இடம்பெற்ற பாடல்களே சிறந்தன என்பதும் புகழ்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. ''கடமையின் எல்லை'' படத்தைத் தயாரித்த கலாபவன பிலிம்ஸ்சாரே ''நிர்மலா'' வையும் தயாரித்தார்கள். பலநாடகங்களைத் தயாரித்தும் நடித்தும் அனுபவமுள்ள ஏ. ரகுநாதன் தயாரிப்பு நிர்வாகத்தைக் கவனிக்க எஸ். அருமைநாயகம் இப்படத்தை இயக்கினர். தங்கவடிவேல், சந்திரகலா, தேவன் அழகக்கோன், சின்னையா முதலியோர் இப்படத்தில் நடித்துச் சிறப்பித்தனர்.

## ''மஞ்சள் குங்குமம்''


கீதாலயம் பிலிம்ஸ்சார் கிங்ஸ்லி எஸ். செல்லையாவின் ''மஞ்சள் குங்குமத்தை'' தயாரித்து, ஐந்தாவது இலங்கைப் படமாக 1970ம் ஆண்டு ஆரம்பத்தில் திரையிட்டார்கள். சிங்களத் திரையுலகில் புகழ்பெற்ற இயக்குனரான எம். பி. பாலன் இப்படத்திற்கான கதை வசனத்தை எழுதியதுடன் திறமையுடன் நெறிப்படுத்தினர். உதய குமார், ஹெலன்குமாரி, எம். பி. பாலன் முதலியோர் இப்படத்தில் நடித்தனர்.

## ''வெண்சங்கு''

சிங்களத்திரையுலகில் அனுபவம் மிக்கவரான டபிள்யூ. எம். எஸ். தம்புவின் ''வெண்சங்கு'' திரைப்படம் ஆருவது படமாகத் திரையிடப்பட்டது. 1970ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இப்படம் இலங்கையில் பல இடங்களில் திரையிடப்பட்டது. அராலி புவனேந்திரன், குமாரி ராஜம் லக்ஸ் வீரமணி முதலியோர் இப்படத்தில் நடித்தனர். தயாரிப்பாளர் தம்புவே இப்படத்தை இயக்கினர்.

## ''குத்துவிளக்கு''

வி. எஸ். ரி. பிலிம்ஸ்சாரின் குத்துவிளக்கு திரைப்படம் யாழ்ப்பாணச் சூழ்நிலையை வைத்து தயாரிக்கப்பட்டு ஈழத்தின் ஏழாவது தமிழ்ப்படமாக வெளிவந்தது. இது ஒரு யதார்த்த கதை அமைப்புள்ள சிறந்த படம் என்று பல இரசிகர்களாலும், விமர்சகர்களாலும் சிறப்பித்துக் கூறப்பட்டது. மலையாளப்படங்களில் காணப்படுகின்ற யதார்த்தப் பண்பு இப்படத்திலும் காணக்கூடியதாகவிருந்தது. இப்படம் வெளிவந்தபின் இலங்கையிலும் சிறந்த, தரமான படங்களைத் தயாரிக்க முடியும் என்ற எண்ணம் பலரிடம் உருவாகியது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ் படங்களுள் இதுவே அதிக நாட்கள் ஓடிய படமுமாகும். யாழ்ப்பாணத்தில் இப்படம் நூறு நாட்களுக்குமேல் ஓடி வெற்றி பெற்றிருக்கின்றது. கட்டிடக்கலைஞர் எஸ். துரைராஜா தயாரித்த இப்படத்தின் கதையை அவரே எழுதியுள்ளார். எஸ். மகேந்திரன் இப்படத்தை நெறிப்படுத்தினர். இப்படத்தின் ஆரம்பத்தில் இடம் பெற்றிருக்கின்ற ஈழத்து இரத்தினம் இயற்றி ஆர். முத்துசாமி இசையமைத்து சங்கீத பூசணம் எஸ். குணசீலநாதன் பாடிய



அதிபர், விரிவுரையாளர்களுடன் முதலாம் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள்.

''ஈழத்திருநாடே என் தாயகமே'' என்ற பாடல் தேசபக்தியை உண்டாக்கும் வகையில் அமைந்திருக்கின்றது. ஆனந்தன், ஜெயகாந் ஆகியோருடன் திரைக்கு ஏற்ற நல்ல முகவெட்டுடைய நடிகை லீலா நாராரணனும் திறம்பட நடித்துள்ளார்.

## ''மீனவப்பெண்''

எட்டாவது படமாக எம். எஸ். எம். புரடக்ஷன்ஸ்சாரின் ''மீனவப்பெண்'' திரைப்படம் வெளிவந்தது. மீராமுதலிப் தயாரித்த இப்படத்தை பி. எஸ். கிருஷ்ண குமார் நெறிப்படுத்தினுர். இவரே ஈழத்தின் முதலாவது படமான ''தோட்டக்காரி''யையும் நெறிப்படுத்தியவராவார். தேவன் அழகக்கோன், ராஜலக்சுமி நடித்த இப் படம் 1973ம் ஆண்டு பிற்பகுதியில் வெளியிடப்பட்டது.

1963ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வெளிவந்த தமிழ் படங்கள் இவை எட்டும்தான். இத்துடன், ''நான்கு லட்சமும்'', 1974 புத்தாண்டில் வெளிவந்த அர்ஜீனுவின் ''கலியுககாலம்'' திரைப்படத்தையும் சேர்த்துப் பத்துப்படங்களாகின்றன. ''சமுதாயம்'', ''புரட்சி'', ''பாச நிலா'' போன்ற 16 மி. மீற்றர் படங்களையும் சேர்த்தால் பதின்மூன்று படங்களாகின்றன. இவற்றின் வளர்ச்சி பரவலான திறமைகள் நிச்சயம் எமது கலைஞர்களின் நிலையை உயர்த்தும். நிச்சயம் நல்ல திரைப் படங்கள் தயாரிக்கலாம் என்ற எண்ணமும் உருவாகியுள்ளது.

மேலும் இப்பொழுது மலையகச் சூழ் நிலையை வைத்து தெளிவத்தை ஜோசேப்பின் கதை வசனத்தில் ''புதிய காற்று'' என்னும் திரைப்படமும், பொலிகன் நிறுவனத்தினரின் ''வானவில்'' என்ற திரைப் படமும் வளர்ந்துவருகின்றன. இவைகளுடன் இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்புகளும் உருவாகின்றன என்ற செய்தி மேலும் எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. இவ்வாறு எமது தமிழ்ச்சினிமா முன்னேற்றத்தில் அடிஎடுத்துவைக்கின்றது. ஒளிமயமான எதிர்காலம் மிக அண்மையில் எம்மை நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

இலங்கைத் தமிழ்ப்பட வளர்ச்சிக்கு தயாரிப்பாளர்கள் முன்பு கூறப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து படங்களைத் தயாரித்தால் நிச்சயம் எமது தமிழ் திரைப்படங்கள் முன்னேறும் என்று கூறலாம். சிங்கள வெற்றிப்படங்களைத் தயாரிக்கும் தமிழர்களான, ஜோ. தேவானந்தன், ஜே. செல்வரெத்தினம், எஸ். பி. சாமி, ருபின் தம்பு, கே. குணரெத்தினம், ஹுசையின் முகமது போன்ருேர் சிறந்த தமிழ்ப் படங்களைத் தயாரிக்க முன்வரவேண்டும். இலங்கையில் உள்ள திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் உதவியும் நமக்கு நன்கு கிடைக்கவுள்ளது. அதே வேளையில் எமது இரசிகர்களும் எமது நாட்டுத் திரைப்படம் என்ற தேசாபிமானத்தை மனதில் வைத்து வளர்த்து வரும் திரைப்படவுலகுக்கு ஊக்கம் கொடுத்தால் எமது நாட்டுத் தமிழ்ச் சினிமாத் துறை நன்கு முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

**தம்பிஐயா தேவதாஸ்,**
(விடுகை வருடம்)

# வளம் பெறுவோம்


நாடு செழித்திட நாமும் உழைத்திட
நல்ல வளம் பெறுவோம்

1. யாரேசிலர் உழைக்க யாரோபலர் பிழைக்க
யாரிதனை நீதி யென்பர் - தினம்
ஏரேபிடித் துழைக்கும் ஏழை விவசாயி
என்றும் உயர்வதில்லை வாழ்வில் - விவசாயப்
போரே சிறந்ததெனப் புறப்படுவீர் இவைமறந்து
புத்துலகம் காணலாம் வாரீர் - என்றும்
ஏரே பிடித்திடுவோம் ஏற்றம் கண்டிடுவோம்
ஈழம் உயர்ந்திடவே நாளும்

2. பஞ்சமும் நோயும் பகையும் வறுமையும்
பாரினில் இல்லாமற் செய்வோம் - என்றும்
அஞ்சுதல் வேண்டா எத்தொழில் செயவெனும்
அறிவினில் திடங் கொள்வோம் - துயில்
கொஞ்சமும் வேண்டா நாடு செழித்திட
குருதி சிந்தி உழைப்போம் - என்ற
விஞ்சும் அறிவின் துணைகொண்டு நாடு
மேன்மை பெற உழைப்போம்.

3. எல்லோரும் உழைப்போம் என்னுளும் பிழைப்போம்
என்றநல் லெண்ணங் கொள்வோம் - தொழில்
இல்லாதார் தம்மை இல்லாமல் ஆக்கி
விவசாய ஈடுபாட்டை வளர்ப்போம் - நாட்டின்
நல்லோராய்த் திகழ்ந்து வல்லோராய் வாழ்வோம்
நாடு செழித்து விடும் - தொழில்
வல்லோரைக் கொண்டு நம்மீழ நாட்டினை
வளம் பெறச் செய்திடுவோம்.

**இ. சின்னு**
**(ஸ்ரீதேவகாந்தன்)**
விடுகை வருடம்.



அதிபர் விரிவுரையாளர்களுடன் 1974 ஆம் ஆண்டு பயிற்சிபெற்று வெளியேறும் ஆசிரிய மாணவர்கள்.

# நீங்காத நினைவுகள்

நினைக்க நினைக்க நினைவுகள் இனிக்கின்றன. எண்ணி எண்ணிப்பார்க்க இதயம் புளகாங்கிதம் அடைகிறது. அந்த மூன்று நாட்களிலும் பெற்ற அனுபவம் மீண்டும் எப்போ பெறுவோமென நெஞ்சம் ஏங்கித் தவிக்கின்றது. கலாசாலையில் சாரணர் பயிற்சி வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது ஒரு நாள் எங்கள் கலாசாலைச் சாரண ராளர் திரு. A. V. பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. எஸ். இராசதுரை அவர் களும் எங்களுக்கு ஓர் இன்பமான செய்தி கூறப்போவதாகக் கூறினர். உடனே நாங் கள் அவர்கள் மேலே கூறப்போவதை அவ தானித்தோம்.

பின்னர் திரு. பாலா அவர்கள் ''உங் கள் எல்லோரையும் ஒரு சிறந்த சாரணர் பாசறைப் பயிற்சிக்காக 74-4-3 தொடக்கம் 74-4-7 வரை பீட்றூ தேசிய சாரணர் பயிற்சி முகாமுக்கு அழைத்துச் சென்று பயிற்சியளிக்கப் போகின்றோம்'' என்றார்.

இதைக் கேட்டதும் நாங்கள் அவர்க ளுக்கு நன்றி கூறுமுகமாக ''ஹுப், ஹுப்'' என்று கோஷமிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தோம்.

அத்தோடு கலாசாலை சரித்திரமே கண் டறியாத முதலாவது வெளிப்பாசறைக்கு நாங்கள் ஆயத்தமானோம்.

அன்று புதன்கிழமை, எமது முதலாம் தவணைப் பரீட்சையின் கடைசிப் பாடமாகிய ஆங்கில மொழியை எழுதி விட்டு மாலை 1-30 மணி உதயதேவி புகை வண்டியில் நானுஓயா செல்வதற்கு எல்லா ஆயத்தங் களையும் தடபுடலாகச் செய்தோம்.

எல்லோர் மனதிலும் புதியதைக் காணப் போகும் துடிப்பு. ஒவ்வொருவரும் தாம், தாம் பாசறைக்கு எடுத்துச் செல்லும் சாமான்களை அங்குமிங்கும் எடுத்துக் கொண்டு அல்லோல கல்லோலப்படும் நிலை, காணவே ஓர் இன்பம்.

1-30 மணியளவில் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களும் எமது சாரணராளர் திரு. எஸ். எஸ். இராசதுரை அவர்களும் மட்டக்களப்பு புகையிரத நிலையம் நோக்கி ஒருவர் பின் ஒருவராக நடந்து செல்கின் றோம். அங்கே எமது புகையிரதப் பிரயாணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு புகையிரத நிலை யத்துள் சென்று கூட்டமாக நின்றுகொண் டிருந்தோம்.

சிறிது நேரத்தில் எங்கள் அன்பு விரி வுரையாளர் திரு. எஸ். சுந்தரலிங்கம் அவர் கள் ஓடிவந்து எங்களைப் பார்த்து ஆனந்தம் பொங்க ''மகிழ்ச்சியுடன் சென்று நலமுடன் திரும்பி வாருங்கள்'' என்று வாழ்த்துக் கூறி னார்.

எங்கள் அதிபர் திரு. E. C. வேலாயுத பிள்ளை அவர்கள் இங்கு நடைபெறும் நிகழ்ச் சிகளையெல்லாம் மகிழ்ச்சியுடனும் அமைதி யுடனும் நோக்குகின்றார்.

இதற்கிடையில் புகையிரதம் புறப்படப் போகும் சைகையாக புகையிரத நிலையமணி ஒலிக்கின்றது. நான் புகையிரதத்திலிருந்து இறங்கி ஓடிவந்து, அதிபரின் முன்வந்து நின்று, கலாசாலைச் சாரணப் படைத் தலை வன் எனும் கடமையில் அவரது இடக்கை

யைப் பற்றிக் குலுக்கி 'நன்றி' என்கின் றேன். அவரும் மகிழ்ச்சியுடன் கையை இறு கப் பற்றிக் குலுக்குகின்றார்.

புகையிரதம் புறப்படுகின்றது. எம்மை வழியனுப்பவந்த அதிபர், விரிவுரையாளர், முதலாம் வருட ஆசிரிய சகோதரர்களின் கைகள் அசைகின்றன. கண்களில் ஆனந்த வெள்ளம் பெருகுகின்றது. இவ்வாறு வண்டி யும் கனதூரம் சென்றுவிட்டது.

சுவாத்தியங்கள் மாறுகின்றன. குளிர் வாடை எமது உடலையும் உள்ளத்தையும் குளிர்விக்கின்றது. இருந்தும் இதமான இன் பப் பீட்ரூ நினைவுகள் எம் உடலையும் உள் ளத்தையும் சூடாக்கி இன்பமூட்டுகின்றன. பிரயாணம் தொடர்கின்றது.

மறுநாட் காலை 4 மணியளவில் நானு ஓயா எனும் புகையிரத நிலையத்தை அடைந் தோம். அப்பாடா! குளிர்காற்று எம்மை மரக்கட்டைகளாக்கிவிட்டது. எல்லோரும் கம்பளி உடைகளையும் தலைப்பாகையையும் அணிந்து கொண்டோம். நிலையத்திலேயே எமது காலைக் கடன்களை முடித்துக் கோப்பி யும் தயார் செய்து பருகினோம்.

இப்போது எமது உடைகளுடன் பேருந்து வண்டி நிலையம் நோக்கி ஒருவர் பின் ஒருவ ராகப் புறப்படுகிறோம். அங்கே நுவரெலியா செல்லும் பேருந்தில் ஏறி காலை 8 மணிக்கு நுவரெலியாவை அடைந்தோம்.

நுவரெலியாவில் சென்று இறங்கியதும் எமது பாசறைப்பதி அவர்கள் எம்மை வர வேற்று உணவுச்சாலைக்கு அழைத்துச் சென் றார். அங்கே நாங்கள் எமது காலை உணவை உண்டோம்.

பாசறைப் பதியைக் கண்டதும் நாங் கள் மகிழ்ச்சியும் ஆனந்தமும் கொண்டோம். காரணம் எமது பாசறைப் பதி வேறு யாரு மல்ல எமது கலாசாலை விரிவுரையாளர் திரு. A. V. பாலசுப்பிரமணியம் அவர்களே.

மு. ப. 9 மணியளவில் நுவரெலியாவி லிருந்து ஹைபொரஸ்ட் செல்லும் பேருந் தில் ஏறி பீட்றூ தேயிலைத் தொழிற்சாலை யருகில் இறங்கினோம். அங்கிருந்து 2 மைல் தொலைவிலுள்ள எமது பீட்றூ பாசறை நோக்கி நடக்கின்றோம்.

மலைகளில் உருண்டும், ஓடியும், பெட்டி படுக்கைகளை உருளவிட்டும், தவழ்ந்தும் செல்கின்றோம். இதைக் கடைசியில் செல் கின்ற நான் கண்டுகளித்து அதேவழியில் அதேமுறையில் நானும் தொடர்கின்றேன்.

சிறிது தூரத்தில் சாரணச் சின்ன மொன்று தெரிகின்றது. உடனே எல்லோ ரும் பாசறை நெருங்கிவிட்ட குதூகலிப்பில் விரைவாகப் பாசறை நோக்கி நடக்கின் றோம். அப்போது ஸ்ரீ தேவகாந்தனும் நண்பர்களும்

''பாசறையைப் பாருங்கடா
சாரணர் கும்மாளம் கேளுங்கடா''

என்று பாடுவது கேட்கின்றது. பாசறையை அடைந்து உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு உடை மாற்றிப் பகல் உணவு தயாரித்துண்டு பலகைகளில் களைப்பாறச் சாய்ந்துகிடக்கின்றோம்.

பி. ப. 2 மணி சீள்கைக்குரல் கேட் கின்றது. உடனே எல்லோரும் சாரணச் சீருடை அணிந்து குரல் ஒலித்த திக்கை நோக்கி ஓடுகின்றோம். அங்கே எமது பாச றைப்பதி சீருடையுடன் கொடிக்கம்பத்தின் அருகில் எமக்காகக் காத்து நிற்கின்றார். எல்லோரும் ஓடிச்சென்று கம்பத்தைச் சுற் றிக் குதிரை லாட வடிவில் நிற்கின்றோம்.

படைத்தலைவனைக் கொடி குலைக்கக் கட் டளை இட்டதும் நான் எனது இடத்தி லிருந்து அணிநடையாகச் சென்று கொடிக் கம்பத்தருகில் நிற்கின்றேன். அமைதியாக வும் பக்தியாகவும் இறைவனை வேண்டி மெதுவாகக் கொடியைக் குலைத்தபோது அதிலிருந்து மஞ்சள், சிவப்பு வண்ணப் பூக் கள் ''மங்களமாகட்டும்'' என்பதுபோலப் பொழிந்தன. எல்லோரும் மகிழ்ச்சியுடன் கொடி மரியாதை செய்தோம். அத்தோடு தமிழ் ஆசிரியர் கலாசாலைச் சரித்திரந்தி லேயே முதன்முதல் மீட்றூ சாரணர் முகாம்

சென்ற முதற்குழு எனும் அழியாப் புகழை நாங்கள் பெற்றுவிட்டோம்.

எமது பாசறைப்பதி, எமது சாரணராளர் ஆகியோர் எமக்கு வாழ்த்துக் கூறினர். இவ்வாறு இரவு 8 மணியாகிவிட்டது. கடமையணி உணவு சமைத்து எம்மை அழைத்தது. எல்லோரும் ஒன்றாகச் சென்று ஒன்றாக அமர்ந்து உணவு உண்டோம்.

இரவு 9 மணியளவில் எல்லோரும் கூடிச் சாரணர் பாட்டுக்கள் பாடி மகிழ்ந்து இரவு 10-30 மணியளவில் முதல்நாள் பாசறைப் பயிற்சியை முடித்து இரவைக் கழிக்கக் கூடாரம் நோக்கிப் புறப்பட்டோம்.

மறுநாள் காலை 6 மணிக்கு எல்லோரும் எழுந்து உடற்பயிற்சி செய்தோம். இது சாரண உடற்பயிற்சியல்ல. இது விசேடமானதும், விநோதமானதும், சாரணர்களுக்கென எமது சாரணத் தந்தை பேடன் பவல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதுமாகும்.

மு. பகல் 9 மணியளவில் எமது கடமைகளை முடித்து எல்லோரும் ஒன்றாய் இருந்து மீட்றூ பாசறையின் ஞாபகார்த்தமாக அங்கே புகைப்படம் ஒன்று எடுத்தோம்.

எல்லோரும் வானத்தினூடே கால் நடைப் பயணம் (Hike) செல்ல ஆயத்தமாகின்றோம். இதுவே எமது மீட்றூ நிகழ்ச்சிகளில் விசேடமானதும், முக்கியமானதும் மகிழ்ச்சிகரமானதுமாகும்.

பயணத்தின் முன் பாசறைப்பதி எமக்கிட்ட கட்டளை ''மனிதர்களைக் காணக் கூடாது, கண்டாலும் அவர்கள் கண்ணில் படாது மறைந்து செல்லவேண்டும். வன சகோதரர்களுக்கு (மிருகம்) துன்பம் செய்யக்கூடாது, செல்லும் வழி பிறர் அறியக் கூடாது'' என்பதேயாம்.

இத்தனை அறிவுரைகளுடன் நாங்கள் ஒருவர்பின் ஒருவராகக் கைகளில் கத்தியுடனும், சாரணர் தண்டத்துடனும், மருந்து வகைகளுடனும் ஒற்றையடிப் பாதையில் ஒயிலாக நடக்கின்றோம்.

சிறிது தூரம் நடந்ததும் பெரிய அடர்ந்த மரங்களும செடிகளும் நிறைந்த காட்டினுள் புகுந்தோம். அங்கு வளைந்து, வளைந்து மெல்லெனப் பாயும் ஆற்றின் அழகும் அதன் அமைதியான ஓட்டத்தின் போக்கும் கண்ணுக்கு விருந்தாக அமைந்தது.

எமது பாசறைப்பதி கதைத்துக் கொண்டே முன்னால் உள்ள செடி, கொடிகளையும் அகற்றிப் பாதையைத் தடைசெய்யும் முட்களையும் அகற்றிக்கொண்டு முன்னேறுகிறார். திடீரென அவர் குரல் ஒலிக்கவில்லை. எல்லோரும் முன்னே எட்டிப்பார்க்கின்றோம். அங்கே உருளுகின்றார் பாசறைப்பதி பள்ளத்தை நோக்கிச் சாரண சீருடையுடனும் தண்டத்துடனும். எல்லோருக்கும் ஒரே சிரிப்பு அதேவேளையில் பரிதாபமாகவும் இருந்தது. சற்று நேரத்தில் பாசறைப்பதி சிரித்த முகத்துடன் எழுந்து ''இது எல்லாம் இங்கு சகஜம்'' என்று கூறித் தனது உடையிலும் உடம்பிலும் ஒட்டுண்ட மண்ணைத் தட்டுகின்றார்.

பிரயாணம் தொடர்கின்றது. நான் எல்லோரையும் முன்னால் விட்டுப் பின்னே எமது உணவுப் பண்டங்களைச் சுமந்து கொண்டும், எல்லோரையும் பாதுகாத்துக் கொண்டும் விநோத நகைச்சுவைக் கதைகளைக் கூறிக்கொண்டும் செல்கின்றேன். இவ்வாறு செல்கின்றபொழுது ஒரு சிறிய ஓடையைக் கடக்கும் நிலை. எல்லோரும் கடந்துவிட்டனர். நான் கடக்கும்பொழுது கல்வழுக்கி ''தொப்'' என ஓடையில் சுமந்துசென்ற பொருட்களுடன் மல்லாந்து விழுந்தேன் மற்றவர்கள் காணும் முன் எழ முயற்சித்து மீண்டும் வழுக்கிவிழ, கடிகாரமும் உடைய, முன்னால் சென்றவர் திரும்பிப்பார்க்க அங்கே ஒரே குதூகலம்தான். சிறிட பேடனும் விழுந்தான் எனும் செய்தி முன்னால் சென்றவர்களுக்குத் தந்திபோல் அனுப்பப்படுகின்றது.

இப்படியான சுவையான நிகழ்ச்சிகளுடனும், அனுபவங்களுடனும் எமது கால் நடைப் பிரயாணத்தைத் தொடர்கின்றோம், இடையிடையே களைப்புத்தீரத் தேநீர் தயாரித்துக் குடிக்கின்றோம். அழகிய பிரமாண்டமான நீர்வீழ்ச்சிகள், பாரிய மரங்கள், இன்பமான இயற்கைக் காட்சிகள் இவைகளைக் கண்டுகளித்தும், மழையில் நனைந்

தும், வெயிலில் உலர்ந்தும், மேட்டில் ஏறியும், பள்ளத்தில் விழுந்தும்; தாவியும், பாய்ந்தும் பிரயாணத்தைத் தொடர்கின்றோம்.

பலருக்குக் கை, காலெல்லாம் முட்கள் பதம் பார்த்துவிட்டன. சிலருக்கு இரத்தம் சொட்டியது. ஆனால் சாரணியம் இவ்விரத்தங்களில் பாய்ச்சப்பட்டிருந்த காரணத்தால் இவை எதையும் எவரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஒரே பாட்டு, குஷி, கும்மாளம்!!

களைப்பினால் கால்களோ இயங்க மறுக்கின்றன. பொழுதோ ஏறிக்கொண்டே போகின்றது. பகலவனோ சுட்டு எரிக்கின்றான். நெஞ்சமோ சோர்கின்றது. ஆனால் இவை எல்லாவற்றையும் மிஞ்சிய பசிக் கொடுமை எமது கால்களின் வேகத்தைப் பன்மடங்கு கூட்டி விரைவுபடுத்தி எம்மை விரைவாகப் பாசறைக்கு இட்டுச்செல்கின்றன.

குன்று, குழி, குறுகிய வழி, எல்லாம் கடந்து பி. பகல் 2 மணிக்கு பாசறை வருகின்றோம். வந்தும் வராததுமாய்ப் பசி பிடுங்க ஆவலுடன் பகலுணவை உண்டு களைப்பு மிகுதியால் அமைதியாகக் கூடாரத்துள் சென்று துயில்கின்றோம். ஆழ்ந்த நித்திரை, யாரோ தட்டுவதை உணர்ந்து விழிக்கின்றேன். அங்கே பாசறைப்பதி, சாரணியம் சம்பந்தமான படக்காட்சிக்குச் செல்ல பி. பகல் 6 மணிக்குத் தயாராகும் படி கூறுகின்றார்.

நித்திரை மயக்கம் கண்ணைச் சுழற்றுகின்றது. மழையோ சோவெனக் கொட்டுகின்றது, குளிர் வாட்டுகின்றது. அத்தோடு கட்டளையை மீறமுடியாத இக்கட்டான நிலை. உண்மையிலேயே அது ஒரு சாரணப் பண்புச் சோதனையே!!

மனதில் திட்டிக்கொண்டு படக்காட்சிக்குச் செல்கின்றோம். அங்கே படக்காட்சியின்போது எமது பாசறைப்பதி தமிழில் அருமையான விளக்கம் தந்தார். பி. பகல் 9 மணியளவில் படக்காட்சி முடிந்துவந்து இரவுணவை உண்டோம்.

மணி இரவு 10. சாரணர் வாழ்க்கையில் புனிதமானதும், மகிழ்ச்சியானதும், மகத்தானதுமான பாசறைத் தீ விழா நடக்கின்றது. இது:

1. சாரணர் தம்மை உருக்கி உலகுக்கு ஒளிவீசும் விளக்காக விளங்க வேண்டும்.
2. தீயதை எரித்து நல்ல ஒளி உண்டாக்கவேண்டும்.
3. ஒன்று சேர்ந்து ஒளி உண்டாக்க வேண்டும்.

எனும் உயர் இலட்சியங்களுடன் நடத்தப்படும் மனதைத் தொடும் ஒரு மங்களகரமான நிகழ்ச்சியாகும்.

மறுநாள் திகதி 6. எமது பாசறை வாசத்தின் கடைசி நாள். மனதில் வீடு செல்லும் களிப்பு, பீட்றூ பாசறைப் பிரிவின் தவிப்பு, இனி எப்போ வருவோம் எனும் இன்பத் துடிப்பு, எண்ணத்திலும், சிந்தனையிலும் இனமறியாப் பதட்டம்.

வானத்தை நோக்குகிறேன். அது வெளிறிப் பொலிவிழந்து தலைவனைப் பிரிந்த தலைவி போல் எங்கும் இருண்டுகிடக்கின்றது. மரங்கள் சோர்ந்த நிலையில் அசையாது நிற்கின்றன. பீட்றூத்தாய் எமது பிரிவாற்றாது கண்ணீர் சொரிவதுபோல் தருக்களிலுள்ள இலைகளிலிருந்து பனித்துளி சொட்டுச் சொட்டாக வடிகின்றது. இவைதானே உலக வாழ்வின் உண்மை நிலை.

வழமைபோல் எமது காலைக் கடமைகள் நடந்தன. காலை 9 மணியளவில் கடமைகள் முடித்து அன்றைய நிகழ்ச்சியான சிரமதான வேலையில் ஈடுபடுகின்றோம.

சிரமதான வேலைமட்டுமல்ல இது. நாங்கள் பீட்றூ பாசறையில் வாழ்ந்தோம் எனும் ஞாபகச் சின்னமாக நாம் விட்டுச் செல்லும் அடையாளமாக அங்கே வளர்ந்து வானோங்கி உயரும் "யூகலிப்ரஸ்" என்னும் ஒருவகை மரக்கன்றுகளை நாட்டும் நற்பணியாகவும் அமைந்தது.

நாங்கள் சென்றுவிடுவோம், கால ஓட்டத்தில் கண்மூடிவிடுவோம், இத்தோடு எம் பெயர் மறைந்துவிடும். ஆனால் நாங்கள் நாட்டிய இந்த மரங்கள் நேரே வளர்ந்து, உயர்ந்துசென்று என்றும் எம் பெயர் ஓங்கச்செய்யும். பலபேருக்கு நிழல்கொடுத்து எம் ஆன்மா சாந்தியடையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. ஆவலுடன் 500 கன்றுகளைப் போட்டி போட்டுக்கொண்டு நடுகின்றோம்.

களைப்பு இல்லை, சலிப்பு இல்லை, சேவையொன்றே பெரிதென நினைத்து மதித்து இன்பமாகத் தொழிற்படுகின்றோம். கன்றுகளை நாட்டிவிட்டு பி.பகல் 2 மணியளவில் எல்லோரும் ஒருங்கே இருந்து கடைசிமுறையாக அங்கே பகல் உணவு உண்கின்றோம்.

பி. பகல் 3 மணி பீட்றூ மாதாவின் பிரிவு வைபவ ஆரம்பம். எல்லோரும் அமைதியாக ஒரு வாகனத்தில் ஏறினோம், கடைசிமுறையாக பீட்றூ மாதாவை ஒருமுறை எட்டி நோக்குகின்றோம். அது நிற்கும் தனிநிலை மனதை என்னவோ செய்கின்றது. வாகனம் ஓடுகின்றது. பீட்றூ மெதுவாக மறையத் தொடங்குகிறது. இவ்வேளை

''வருவேன் வருவேன் - நான்
மீண்டும் மீண்டும் வருவேன்
நாணலினால் ஒரு குடிசையமைத்து
வாழ்ந்திடவே வருவேன்''

எனும் கீதத்தை மனமுருக ஒல்லோரும் பீட்றூ மாதாவை நோக்கிப் பாடுகின்றோம்.

பிரயாணம் தொடர்கிறது. பாசறை மறைகிறது. கண்கள் மயங்குகின்றன. உள்ளம் மீண்டும் காணத்துடிக்கின்றது. கடமை அழைத்துச் செல்கின்றது. மறைகின்றோம் ஆனால் நாங்கள் பாடிய ''வருவேன்'' பாடல் நிச்சயம் பீட்றூ மாதாவுக்குக் கேட்டுக்கொண்டே இருக்கும்.

ஆம் நாம் நிச்சயமாக மீண்டும், மீண்டும் பீட்றூ மாதாவைக் காணவருவோம். குடிசைகள் அமைத்து இன்பமுடன் வாழ்ந்து மகிழ்ந்திட வருவோம். எங்கள் சாரணீயச் சின்னமே! இன்பப் பீட்றூவே!! நீ என்றும் எம்மை அன்புகாட்டி, நேசக்கரம் நீட்டி வரவேற்பாய் என நம்புகின்றோம்.

எம் இறுதி மூச்சுகூட உனமடியில் இருக்கும்பொழுது சென்றுவிட்டால் நிச்சயம் நாம் வாழ்வில் பயனடைந்தவாரவோம்.

நீ வளரவேண்டும், எம் சாரணீயம் தழைக்கவேண்டும். உலகமே சாரணீயமாக மாறவேண்டும. அப்பொழுதுதான் மனித இனம் மகிழ்வுடன் வாழும். உன் வளர்ச்சிக்கு என்றும் நாம் பாடுபடுவோம்.

மீண்டும் வருவோம் இந்நிலையிலல்ல நற்சாரணீயப் பயிற்சியாளனாகவும், எம் அன்பு சாரணச் சிறுவர்களுடனும் ஒன்றாக வருகின்றோம். விடைபெறுகின்றோம். எங்கள் இன்பப் பீட்றூ மாதாவே.

''வருவேன் வருவேன் - நான்
மீண்டும் மீண்டும் வருவேன்
நாணலினால் ஒரு குடிசையமைத்து
வாழ்ந்திடவே வருவேன்.

(வருவேன்)

—முற்றும்—

**மு. சம்பந்தர்,** (சாரணர் படைத் தலைவர்)
(இறுதி வருடம்)

# அன்புடைய காதலிக்கு

அன்புடைய காதலிக்கு
அத்தான் எழுதுவது
புண்பட்ட மனத்தோடு
பொன்னரசன் எழுதுகிறேன்.

கல்லூரி வகுப்பறையில்
கருங்குழலாய் நாமிருவர்
சொல்லாடி ஒன்ருகச்
சுகித்து இருந்ததெல்லாம்.

சினிமாத் தியேட்டரிலே
தேன்மொழியே நாமிருவர்
கனிந்தமொழி கட்டவிழ்த்துக்
காதல் புரிந்ததெல்லாம்.

வண்ணப் புதுச்சிலேயே
மாந்தோப்பில் நாமமர்ந்து
பண்ணிசைத்து ஒன்ருகப்
பாடி மகிழ்ந்ததெல்லாம்.

தென்னை மரத் தோப்பினிலே
தேன்மலரே நாமமர்ந்து
அன்னை அழைக்கமட்டும்
ஆடி மகிழ்ந்ததெல்லாம்.

வேர்க்கும் உடலோடு
வேட்கையெழ நாமிருவா
'பார்க்'கினிலே சந்தித்துப்
பகர்ந்த மொழிகளெல்லாம்.

தாமரைக் குளத்தருகில்
தன்னிலவே நாமிருவர்
காமன் கணைபட்டுக்
காதலில் திளைத்ததெல்லாம்.

நீலத்திரைக் கடலில்
நெடுநேரம் படகுவிட்டுக்
கோலத் தமிழ் பேசிக்
கொஞ்சிக் கிடந்ததெல்லாம்.


நேற்று நடந்ததென
நிம்மதியாய் மறந்துவிட்டு
மாற்ருன் கரம்பற்ற
மனந்துணிந்த தெப்படியோ?

புதுமலரே நீயென்னைப்
புழுதியிலே தள்ளிவிட்டாய்
இது தகுமோ என்றெண்ணி
ஏங்குகிறேன் நானிங்கு.

கனிமொழியே என்கடிதம்
கண்டவுடன் பதிலெழுது
இனிய பதில் கிடைக்குமென்று
எதிர்பார்த்து ஏங்குகிறேன்.

— முற்றும் —

**வே. தங்கராசா ("ராஜா")**
இறுதியாண்டு 1973/74.



தமிழ் ஆசிரிய கலாசாலைகளின் வரலாற்றில் முதன் முறையாக
பீதுறுத் தேசியப் பயிற்சி முகாமில் பயிற்சிபெற்ற

**கலாசாலைச் சாரணர் படை**

# ஊமை நினைவுகள்

அவளைக் காணும்போதெல்லாம் அவன் உள்ளம் ஏங்கித் துடித்தது. தென்றலில் ஆடும் அல்லிக்கொடியென, மென்பாதம் தூக்கிவைத்து அவள் நடந்துவரும்போது அவன் கண்கள் இமைப்பதையே மறந்து இருக்கும். இளமைத் துடிப்புப் பொங்கிஎழ, மனதில் அரித்தெழும் எண்ணங்களை அடக்கி விட முடியாமல் தவிப்பான். சமுதாயத்தின் உடைவு, நெழிவுகளை; ஓட்டை, ஒடிசல்களை எல்லாம் அடைத்துவிடத் துடிக்கும் அவனால்; தன் மனப்புயலை; மனதில் ஏற்பட்ட வெடிப்பை, ஓட்டையை மட்டும் அடைத்து விட முடியாமல் இருந்தது.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவன் மனமன்றத்தில் சுமையாகி நசிந்துகிடக்கும் நினைவு அலைகள், அவன் கண்முன்னே, அவள் தோன்றும்போதெல்லாம் விஸ்வரூபமெடுத்து ஆடத்தொடங்கிவிடும்.

மட்டுமாநகரின் கலைக்கோயிலாகக் காட்சிதரும் கல்லடிப் பாலத்தின் இரும்புப் பாளங்கள், அதன்கீழே அலைமோதி எழும் கடல்நீர் நுரை கக்கும் இனிய காட்சி; அங்கும் இங்குமாக மின்மினிபோல் குப்பி விளக்குகளுடன் அலைந்து திரியும் மீனவர்களின் வள்ளங்கள், ஓசை எழுப்பி நீரின் வயிற்றைக் கிழித்துச்செல்லும் இயந்திரப் படகுகள், நீண்ட முடியும், தொடை தெரியும் இறுக்கமான சட்டை அணிந்து செல்லும் இளவட்டங்களின் நாகரீக கோலங்கள், தமக்கே உரித்தான மினி உடையில் காட்சி தரும் காரிகையர்கள் எதிலுமே அவன் மனம் செல்லவில்லை.

அவன் மட்டக்களப்பிற்கு வந்து ஒரு வருடத்தின் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டான். அவன் சுற்றாத தெருக்கள், ரசிக்காத காட்சிகள், பார்க்காத சினிமாப் படங்கள், உருசிக்காத உணவுகள், பழகாத நண்பர்கள் இல்லை. ஆனாலும் அவை எல்லாம் ஏதோ ஒரு பகட்டான வாழ்க்கையாகத்தான்பட்டது. தன்னை தான் வாழும் மாணவர் சமூகத்தோடு இணைந்துவாழும் ஒருவனுக்க நடித்த நடிப்பென்றே நினைத்தான். ஒதுங்கி வாழ்வதால் மற்றவர்கள் தன்னை ஒருமாதிரியாக மதிப்பார்களே என்பதற்காக அவன் எடுத்த பகீரதப் பிரயத்தனங்கள் என்றே எண்ணினான்.

அவன் விரும்பியும் விரும்பாமலும் எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறான். அவை எல்லாம் அவனது நெஞ்சத் தாமரை மலரை மலரச் செய்யவில்லை. இந்தக் காலத்து நாகரீக தினிசுகளை அடியோடு வெறுக்கும் அவனால் இத்தனை ஆடம்பரமான வாழ்க்கை வாழும் மாணவர் மத்தியில் எப்படி வாழமுடிந்தது என்பது அவனுக்கே புரியாத புதிர்.

பௌர்ணமிச் சந்திரனின் ஒளியில் தங்கப் பாளங்களாகக் காட்சிதரும் அந்தக் கல்லடிக் கடல் நீரையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கரங்கள் மட்டும் நடைபாதையின் கம்பிகளைத் தழுவியிருந்ததே தவிர எண்ண அலைகள் மோதிச் சிதறிக்கொண்டிருந்தன.

அவன் உள்ளத்து ஊமை நினைவுகள் கொழுந்துவிடத் துடித்தபோது அவனால் நிம்மதியாக இயற்கையின் எழிலை இரசிக்க முடியவில்லை. முன்னூறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் அவனது குக்கிராமத்துப் பனங்கூடல்களும் அதன் ஓரங்களிலே நிரையோடியிருக்கும் புல்வெளிகளும் அடுத்துக்

காணப்படும் சின்னஞ்சிறிய மழைகாலத்துக் கடலும்தான் அவன் கண்முன்னே தெரிந்தது. இடுப்பிலே குடம் வைத்துத் தண்ணீர் எடுத்துச்செல்லும் கன்னியர் கூட்டத்தில் ஒருத்தியாக அவள் செல்லும்போது, வேப்பங்குச்சியை பற்களிடையே கடித்து உராசிக் கொண்டு ஓரக்கண்களால் கதைபேசி மகிழும் அவனுக்கு பயிற்சிக் கல்லூரியும் மட்டுமா நகரமும் சிறைக்கூடமாகியது.

அவன் உள்ளத்தில் அரும்பிவிட்ட அலர் இன்னும் மலர்ந்து மணம் வீசாவிட்டாலும் அது கூம்பியிருப்பதிலேயே இன்பம் கண்டான். அவளின் முல்லை விரிப்பில் முறுவலிப்பானே தவிர வேறு ஏதும் பேசும் சக்தியற்று இருந்தான். ஊரிலே பலவித கதைகள் அடிபட்டாலும் அவன் தன் நிலையிலிருந்து கொஞ்சமேனும் இறங்கவில்லை. வெறும் பாலுணர்வை மட்டும் முக்கியத்துவப் படுத்துவதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. உள்ளத்துப் புணர்வை முன்வைக்கும் அவனுக்கு அவளுடன் பேசிப் பழகும் சந்தர்ப்பம் அருகியே கிடந்தது.

சமூகம் அவனைச் சித்திரவதை செய்தது. கௌரவம் அந்தஸ்த்து என்ற போலிக் காரணங்கள் அவன் தொண்டையை நெரித்தபோது உத்தியோகத்தையே உதறிவிட நினைத்தான். யாழ்ப்பாணச் சமூகம் கொடுக்கும் உயரிய மதிப்பு வாய்ந்த பட்டம் பதவிகள் அவன் மனதை அரித்துக் கொட்டின.

சீதனம் என்ற பூதம் தன் வாயைத் திறந்து அவனை விழுங்கத் துடித்தபோது அவன் பலமான அடிகொடித்து தப்பிவந்தான். இப்போது அது தங்கையின் வாழ்விலே புகுந்து தொல்லை கொடுத்தது. தங்கைமேல் உயிரையே வைத்திருக்கும் அவனால் அவளின் திருமணத்தை நடத்திவைக்க முடியாமல் இருந்தது.

தங்கை சாந்தி படித்தவள். ஆடம்பரத்தில் அதிக அக்கறை இல்லாதவள். குடும்ப நிலைமைக்கேற்ப தன் தேவைகளையும் சுருக்கிக்கொண்டாள். உள்ளத்தில் எழும் பருவ உணர்ச்சிகளை வெளி எழாமல் அடக்கி காதல் பசிக்கு இரையாகாமல் தப்பிவந்தாள். அவள் பெயருக்குப் பொருத்தமானவள் என்பது பலரதும் அபிப்பிராயம்.

தன்மேல் உயிரையே வைத்திருக்கும் அண்ணனின் வாழ்வு உயரவேண்டும் என்ற அவளின் பிரார்த்தனை முடிவற்றதாக இருந்தது. வசந்திமீது அண்ணன் வைத்திருக்கும் அன்பு மலர்ந்து மணம் வீசவேண்டும் என்பது அவளது அவா.

சாந்தியும் வசந்தியும் சிறுவயது முதல் ஒரே வகுப்பில் படித்தவர்கள். ஒருவரை ஒருவர் விட்டுப்பிரியாத பிணைப்புள்ளவர்கள். இதனால் வசந்தி தன் அண்ணனை விரும்புவதை அவள் மனதால் ஆசீர்வதித்தாள். இதை நாசுக்காகச் சொல்லியும் வைத்தாள்.

ஆனால் அவன் நிலையோ பாலத்தில் செல்லும் வாகனம்போல் இருந்தது. உள்ளம் 'கட கட' என்று அடித்துக்கொண்டிருந்தது. தங்கையின் திருமணத்தை முடிக்க சீதனம் வேண்டும். குறைந்தது பத்தாயிரமாவது வேண்டும். வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இந்த நேரத்தில் இவ்வளவு பெரிய தொகைக்கு எங்கே போவது?

அவன் கண்கள் பனித்தன. அந்த நீர்த் துளிகளினூடே சாந்தி, வசந்தி, யாருக்காகத் தன்னை அர்ப்பணிப்பது? அவனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. சீதனத்தை எதிர்க்கும் அவனால் வசந்தியிடம் சீதனம் கேட்கமுடியுமா? அதற்கும் அவளிடம் பணம் ஏது?

கோல நிலவு தன்பாட்டில் சிரித்தது. நுரைக்கும் கடலை வெறித்துப்பார்த்தான். அலைகள் சத்தம்போட்டுச் சிரித்தன. வள்ளங்களைப் பார்த்தான். குப்பி விளக்குகள் எல்லாம் பற்களாகத் தெரிந்தன.

''ஓ! எல்லாரும் என் எதிரிகளே!''

அவன் இரைந்தான். அந்த ஒலி மதில்களில் மோதி தெறித்து அவன் முகத்தை முத்தமிட்டன.

''சொந்தம், பந்தம், பாசம் எல்லாம் பணமிருந்தால் நாடிவரும். இல்லையென்றால்

சாந்தியின் வாழ்வு மலராமல் இருக்க நியாயம் இல்லை. போதும் இனி எனக்கு வாழ்வே வேண்டாம். இச்சமூகம் அழிந்தேபோகட்டும்''. அவன் தன்னைமறந்தே ஓலமிட்டான்.

"டேய் பயித்தியம் ஏனடா உளறுறுய்?"

அவன் கரங்களைப் பிடித்து உலுக்கினுன் ராசு. அந்த அன்பான ஸ்பரிச உணர்வில் திரும்பிய சோமு 'ராசு' தன் கண்களையே நம்பாமல் பார்த்தான். மீண்டும் மீண்டும் பார்த்தான். நீ......

''ஏன் - எப்படி இங்கு வந்தேன் என் சிருயா?''

அவன் பதில் கூருமலேயே தலையை அசைத்தான்.

''டேய் பயந்தான் கொள்ளி உனது பிரச்சனைக்கு முடிவு காணத்தான் வந்தேன். உன் நண்பன் தேவன் என்னை இங்கு அழைத்துவந்தான்'' என்று தான் வந்த நோக்கத்தை உடைத்தான் ராசு.

''ராசு ஏற்கனவே பல அம்புக்காயம் பட்டுவிட்டேன்''.

''அதற்கு மருந்து கொண்டுவந்திருக்கிறேன்''.

''அப்படியென்ருல்?''

''நீ விரும்பினுல் உன் தங்கையின் வாழ்வை மலரச்செய்கின்றேன். நீ!''

நான்

சாந்தியை.........

ராசு.........

சோமு ராசுவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். காற்று ஜில் என்று வந்து அவர்களின் உடலைத் தழுவிக்கொண்டிருந்தது.

(யாவும் கற்பனையே)

மு. இரத்தினம்,
(முதலாமாண்டு)


**SAHIB'S SILK HOUSE**

**சாஹிப்ஸ் சில்க் ஹவுஸ்**

Telephone : 342.

தரம் தெரிந்து வாங்குவோரின் நன்மதிப்புக்குரிய ஸ்தாபனம்

**சாஹிப்ஸ்**

**SAHIB'S** 125, North Coast Road,
TRINCOMALEE.

# உள்ளத்தால் பொய்யா தொழுகின்......

மாக்களிலிருந்தும் தனித்து மானிடப் பிறவியைப் பெற்ற பகுத்தறிவாளனுகிய மனிதன் இப்படித்தான் வாழவேண்டுமென்ற ஒரு நியதியில் வழுவாது ஒழுக வேண்டுமென்று கருதப்படுகின்முன். இதனுற்ருன் அவனுக்கு என்று ஒரு மதம் - ஒரு கோட்பாடு - ஒரு மரபு - ஒரு வழிமுறை தோன்றியிருக்கலாமென்று ஆராய்ந்து கண்ட முடிவே மதமும் மதக் கோட்பாடுகளும் என்று கூறினுல் மிகையாகாது. மதக் கோட்பாட்டின்படி வாழ்பவன் ''மனத்துக்கண் மாசிலன்'' ஆக வாழ்கிருன்.

மனம் ஒரு துலாக்கோல். மனம் கூறும் சாட்சியே உயர்ந்த ஒழுக்க நெறியாகும். கொலேகாரனுக இருப்பினும் சரி - கொள்ளேக்காரனுக இருப்பினும் சரி அவனது மனம் அச் செயல்களின் விளேவுகளேக் கூருமல் இருக்காது. மனச்சாட்சிக்கு - மனம் கூறிய உண்மைக்குப் புறம்பாக அவன் செயல் அமையும்போது உள்ளத்தால் பொய்த்து வாழ்பவனுக இருக்கின்றுன். மற்றவர்கள்முன் நடைப்பிணமாக வாழ்கின்முன். ஒளிபடைத்த கண், உறுதி கொண்ட நெஞ்சம், தெளிவு பெற்ற மதி, ஏறுபோன்ற நடை அவன் மாட்டு இல்லாது போய்விடுகின்றன. பொய் பேசாதிருத்தலே உள்ளத்தால் பொய்யாதொழுகுதல் என்று கருதமுடியாது. மனச்சாட்சிக்கு மாருகச் செய்யும் பஞ்சமா பாதகமும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் உட்பகையின் பாற்பட்ட செயல்களும் நல்ல வேடந்தன்னில் மறைந்து அல்லவை செய்யும் பண்புகளும் உள்ளத்தால் பொய்யா தொழுகாமையையே குறிக்கும்.

தன்னுடைய உள்ளம் அறிந்துசெய்யும் குற்றத்தின் பாற்பட்டவையாக இருக்கும் போது அவனுடைய உயர்ந்த வேடத்தில் யாது பயன் உளது என்று ''வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன் நெஞ்சம் தானறி குற்றப்படின்'' என்னும் குறள்மூலம் வள்ளுவர் வினவுகிருர். 'மனத்துக்கண் மாசிலன்' ஆதலே மேலானதாகும் என்று விடையும் கூறுகின்ருர்.

காந்தியைப் போற்றுகிருேம், யேசுவையும் புத்தரையும் போற்றுகிருேம். ஏன்? உள்ளத்தால் பொய்யா தொழுகி வாழ் வாங்கு வாழ்ந்து காட்டிய அவர்களது மேலான வாழ்வைப் போற்றுகிருேம்.

அரிச்சந்திர புராணமும் இராமாயணமும், பாரதமும் உள்ளத்தால் பொய்யா தொழுகிய வாழ்க்கையைத்தான் நமக்குப் புகட்டுகின்றன.

இராமன் கைகேயின் மாளிகைக்கு தசரதனைக் காண வருகின்ருன். ''நீ காடேகவும் பரதன் நாடாளவும் தந்தை பணித்தார்'' என்று கைகேயி கூறுகின்ருள். ஆனுல் பொய்யாது வாழும் வாழ்வை மேற்கொண்ட இராமன் ''தந்தையுரையில்லா திருப்பினும் தங்கள் உரை மறுப்பனே என்று உண்மையை வெளிக்கொணர்ந்து கூறுகின்றது. அவன் உள்ளத்தில் பொய் இல்லே. நாவி

லும் பொய்யில்லே. அதுபோல் இராமன் செயலிலும் பொய்யில்லே. இதனுல் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இராமன் தெய்வமாக இருக்கின்றுன்.

மநுநீதிச் சோழன் வாழ்ந்த - கடைப்பிடித்த நெறியைப் பாருங்கள்! மகன் ஒரு ஆவின் கன்றைக் கொன்றுன் என்று அறிந்து தனது ஒரே ஒரு மகனேயே கொல்ல தானே செல்கின்றுன். தனக்கொரு நீதி பிறர்க்கொரு நீதி என்று வாழாது வாழ்ந்த வாழ்க்கையால் இன்று நாம் மநுநீதி சோழனேப் போற்றுகின்றேம்.

மாணிக்கவாசகரும்,

''உள்ளம் பொய்தான் தவிர்த்து
உன்னேப்போற்றி......''

என்று கூறுகிறுர். பொய்மை தவிர்ந்த உள்ளமே இறைவனே நினேக்க உகந்தது என்கின்றுர். இராமலிங்க வள்ளலார் சற்றுத் துணிவுடன் ''உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என்று இறைவனே வேண்டுகின்றுர். உள்ளத்தால் பொய்யாது தமயந்தியிடம் தேவர்கள்பால் சுயம்வரத்துக்கு முன் தூது சென்ற நளன். தானும் சுயம்வரத்துக்கு வந்தவன் என்பதையும் பொருட்படுத்தாது தேவர்களுக்காக பரிந்து பேசியதன் பொருட்டு பல வரங்களேப் பெறுகின்றுன். அவ்வரங்கள் ஆபத்து வேளேகளில் அவனேக் காப்பாற்றுகின்றன.

ஆன்றேர்களும் சான்றேர்களும் ஞானிகளும் யோகிகளும் கூறிய தருமநெறிக்கு முரணுக வாழாது வாழும் வாழ்வே பொய்யாது வாழும் வாழ்வாகும். இவ்வாழ்வைக் கைக்கொண்டு ஒழுகுபவனேத்தான். நாம்மகான் என்றும் மகாத்மா என்றும் போற்றுகின்றேம். இதைத்தான் வள்ளுவர்

''உள்ளத்தால் பெய்யா தொழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்று கூறுகின்றுர். மனம் வாக்குச் செயல் இம் மூன்றும் பொய்யாதிருந்து வாழ்பவர்கள் உலகத்தார் யாவராலும் போற்றப்படுகின்றுர்கள் கர்த்தர் என்றும், பகவான் என்றும், ஞானி என்றும், நாயன்மார் என்றும் போற்றக்கூடியதாக உலகத்தால் உள்ளத்துள் எல்லாம் நிறைந்து வாழ்கின்றுர்கள்.

**மண்டூர் எஸ். தில்லேநாதன்,**
(இறுதி ஆண்டு)

தவறுகளே ஒத்துக்கொள்ளும் தைரியமும், அவைகளே விரைவில் திருத்திக்கொள்வதற்கான பலமும்தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த அம்சம். —லெனின்.

முள் நிறைந்த செடியிலேதான் வனப்பும் வாசனேயும் தருகின்ற ரோஜாப் புஷ்பம் மலர்கின்றது. அதுபோலவே சொல்லொணு துயரங்களுக்கும். தாங்கமுடியாத எதிர்ப்புக்களுக்கும் மத்தியிலேதான் உண்மை பூத்து மலர்கிறது. —மகாத்மா காந்தி.

அளவற்ற பெருமை, அளவில்லாத் தூய்மை, முடிவில்லா முயற்சி. இவைகளே நல்ல காரியங்களில் வெற்றி பெறும் இரகசியங்களாம். —ஷேக்ஸ்பியர்.

# சூழற்ருெழிற்பாடு

1. சூழலெனும் பொதுப்பாடம் சொல்லக் கேளீர்
சுற்றவுள்ள அலகுகளோ பத்து மொன்றும்
ஆழமுடைக் கருத்துக் கொள் நோக்கம் மூன்றும்
''அறிவு'' ''திறன்'' ''மனப்பாங்கு'' வளர்த்தலாகும்
சூழுமனப் பாங்கெட்டுச் செயல்த்திறன்கள்
சுளேயாக ஏழு, முழுப் பாடம் ''நன்கு
வாழும்முறை'' மும்மூன்று வழிகள் ரெண்டு
வரும் அவதான மும்னுபவமுமாமே.

2. விரிவாக அகன்று செல்லும் சூழற்பாடம்,
விரிக்கின்ற பாடவிதானத்தைப் பாரீர்,
உரிமையுடை வீடும் அங்கு வாழுவோரும,
உணவு, உடை, வலு, சத்தி, வேறில்லாமை,
திரியுமெங்கள் சூழல், எம் சமூகம், மற்றும்,
எமக்குதவுவோர், போக்குவரத்துச் செய்தி,
பெரிய எங்கள் பூமி, அதன் சுற்றம் மேலும்
தினச்செய்தியோடு ''பதிஞென்று'' கண்டீர்.

3. ஒன்றிணேந்த பாடத்தின் சிறப்புச் சொன்ஞல்
''ஒழுங்கான பாட வரம்புகளேத் தாண்டும்''
''நன்ருகப் பிள்ளேகட்கு விளங்குகின்ற
நல்ல செயற் பாடுகளேக் கொடுத்துவைக்கும்''
இன்றவர்கள் வாழ ''சூழல்'' நேரேகாட்டி
இயற்கையுடன் இணேத்ததொரு தொடர்பு சேர்க்கும்''
நன்றமைந்த ''மூன்றுதரும்'' நாட்டம் வைக்கும்,
''நலிந்த உளவிருத்திக்கும் முழுமை நல்கும்''.

4. ''அவதானத்'' தொகு ''விஞ எழுப்பல்'' ''ஆய்தல்''
அதிலுள்ள ''பிரச்சனேயைத் தாஞய்த் தீர்த்தல்'',
நவமான ''முடிவுகளேத் தொகுத்தெடுத்தல்''
நறுக்காக ''வாய் மூலம் விளக்கம் சொல்லல்''
எவருக்கும் விளங்குதற்கு ''எழுத்துமூலம்
எடுத்தவற்றைப் பதிவு செய்தல்'' என்பதேழும்,
உவப்பான ''விஞ்ஞானச் செயல்களோடு''
உயர் ''செயற் திறன் மதிப்பீடா''குங் கண்டீர்.

5. ''ஆர்வமொ''டு ''தனித்துவமு''ம் ''முயற்சி'' மற்றும்,
அமைவாகத் ''தர்க்கித்த முடிவை ஏற்றல்''
யார் கருத்தும் கேட்பதன்றித் தன் கருத்தை
யதார்த்தமுடன் ''சுய விமரிசனம் கொடுத்தல்''
பேர் பெறுதலில்லாத பொறுப்புணர்ச்சி,
பெற்றோருடைத் ''திறமையுடன் செயலில் செய்தல்''
''ஆரோடும் சேர்ந்துழைத்தல்'' ''சூழல் காத்தல்''
அட்டமிவை ''மனப்பாங்கு மதிப்பீட''ம்மா.

6. ''நியமமற்ற கற்பித்தல்'' ''மா + ஆ நட்பு''
நீண்ட ''செயற்திட்டமுறை'' ''திட்டம் தீட்டல்''
உயர்வான ''பதிவு செய்தல்'' ''தியாக சிந்தை'',
''உண்மைகளைத் தாமாகக் காணுஞ் செய்கை''
அயர் வின்றிக் ''குழுவாயும் தனித்தும் செய்தல்''
அவற்றோடு ஆசிரியர் ''சூழல் தேர்தல்''
உயர்வான ''ஒன்றிணைந்த புதிய பாடம்''
உவப்பாக நடத்துதற்கு ''ஒன்பதா''மே.

7. கல்வியில் வாறமைந்தமைக்கு எடுத்துக்காட்டாய்க்
கல்வியியல் வல்லுநர்கள் ஏராளம் பேர்,
சொல்வதெனில் குறிப்பாக ''ரூசோ'' ''டூயி'',
சூரர் ''புரோபல்'' ''பெஸ்ட லோசி'' கண்டோம்,
கல்வியுளவியலாளர் ''புரூனர்'' ''ஸ்கின்னர்''
கன செயல்களின் ஆசான் ''பியாஜே'' மற்றும்,
நல்ல கல்வியாமிந்தச் ''சூழல்'' சொல்லி
நாடறிந்த ''வுளூம்'' போன்றோர் போற்றுவோமால்.

**பொன். சிவாநந்தன்.**
(விடுகையாண்டு)

---

பல்வலி உள்ளவன் பல்வலி இல்லாதவனை சுகவாசி என நினைக்கிறான். இதே கதைதான், பணக்காரனைப்பற்றி ஏழை நினைப்பதும். —பெர்னாட்ஷா

கற்பை இழந்தவள் அழகையும் இழக்கிறாள்; தாய்மையையும் இழக்கிறாள். —திரு. வி. க

---

# குந்தியின் மடியில் கர்ணன்

[ஓரங்க நாடகம்]

இடம்: **போர்க்களம்.**

பாத்திரங்கள்: **கர்ணன், குந்தி, அருச்சுணன், கிருஷ்ணன், துரியோதனன்.**

[அமரில் காண்டீபனுல் கர்ணன் கொலையுண்டு கிடக்கின்ருன். குந்தி தேவி ஓடிவந்து அவனின் தலையை மடிமீது வைத்துப் புலம்புகின்ருள். அருச்சுணன் அலறுகின்ருன். பாரதத்துக்கு வித்தான கண்ணன் உண்மையை விளக்கிச் சமாதானம் கூறுகின்ருன். இறுதியில் அரவக் கொடியோன் வந்து தனது மரியாதையைச் செலுத்திச் சூழுரைக்கின்ருன்.]

**குந்தி:—** ஐயோ! மகனே கர்ணு இந்தக் கோலத்திலா உன்னை நான் மடிமீது வைக்க வேண்டும். உயிர் போக்க வரம் பெற்ற இந்தக் கொடியவளைப் பார்க்கக் கூடாதென்று போய் விட்டாயா. மகனே என் செல்வ மகனே கர்ணு.

**அருச்சுணன்:-** (தலையை கர்ணனின் பிணத்தின்மீது மோதிக்கொண்டு) அண்ணு! நீங்கள் கொடுத்த நாகாஸ்திரத்திற்கு தப்பிய நேரத்தில் எவ்வளவு சந்தோசம் அடைந்தேன். அண்ணனென்று அறிந்திருந்தால். மார்பிலே தாங்கி நான் இறந்து உங்களை வாழ வைத்திருப்பேனே வண்டுகள மொய்த்து தேனுண்ணும் வெண்டாமலர் சரங் கொண்ட மார்பிலே எண்ணற்ற கணைகளை அடுத்து அடுத்து ஏவினேனே, கூரிய பாணங்கள் என்னையே கெடுப்பதறியாது உங்களைத் தாங்குவதாகச் சந்தோஷப் பட்டேனே, ஐயோ அண்ணு இனி எப் பிறப்பில் உங்களைக் காண்பேன். உங்களுக்குத் தம்பியாக இருந்து பணி புரிவேன். நான் உனது தம்பியென்று தெரிந்தால் ஆயுதம் எடுத்து போர் செய்ய மாட்டேன். என நினைத்து அம்மாவைக் கட்டி விட்டாயா? ஐயோ அண்ணு அண்ணனின் வாழ்நாளை மடியச் செய்கிருேம் என்று தெரியாது சஞ்சரீகக் கணைவிட்டு உங்களைக் கொன்றேன். கொடும்பாவியாகிய நான் கொலை செய்தேன். கண்ணு இதனுல் உனக்கென்ன இலாபம். பாவ புண்ணியம் பார்க்கவில்லை. தன் கையைக் கொண்டு தன் கண்ணைக் குத்திக் கொள்ளச் செய்ததுபோல், எங்கள் அண்ணனை எங்களைக் கொண்டே முடித்து விட்டாயே. ஐயோ அண்ணு

**கிருஷ்ணன்:—** அண்ணனைக் குறித்து அனுதாபப் படுகிறீர்கள். கர்ணனுக்குக் காலன் நான்தானென்று குற்றம் சுமத்துகிறீர்கள். உங்கள் எந்தக் குற்றச் சாட்டையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டியவன். இயற்கையிலே நல்ல சுபாவமும், கருணை உள்ளமும், தர்ம சிந்தனையும் கொண்டவன் கர்ணன். உலகத்துக்கெல்லாம் ஒளியூட்டி மக்களுக்கு வழி காட்டுகின்ற மாபெரும் சக்தி பொருந்திய அந்தப் பெருந்தகை சூரிய பகவானின் சேயின் பெருமையை உங்களை விட நானறிவேன். ஆனுல் அவன் சேர்ந்த இடம் அவனுக்கேற்ற இடமல்ல. என்ற காரணத்தால் அவனை யாம் என்னிடம் அழைத்து விட்டோம். அதனுல் எவருக்கும் கிடைக்க முடியாத பெருமைக்கு கர்ணன் ஆளானதுடன் அவனின் வருகையால் எனது கீர்த்தியும் ஓங்கி விட்டது. கர்ணனை எவராலும் அழித்துவிட முடியாது. அவனது ஆவி ஏற்கனவே சேரவேண்டிய இடத்தில் சேர்ந்து விட்டது. நான் தான் கொன்றேன் நான் தான் கொன்றேன் என்று புலம்புவது அர்த்தமற்றது. அருச்சுணனின் சஞ்ச

ரீகக் கணை கர்ணனின் கட்டையைத் தீண்டியதே தவிர ஆவியைத் தாக்க வில்லை. ஆகவே உங்கள் சகாயன் இந்தக் கண்ணன் கூறுகின்றேன். கர்ணனை அழைத்துக் கொண்ட தர்மதூதன் யாம் கூறுகின்றோம் நீங்கள் கவலைப்பட வேண்டாம் நடப்பதெல்லாம் நன்மைக்கே.

[துரியோதனன் வேகமாக வருதல்]

**துரியோதனன் ;-** வீரக் கழல் அணிந்து வில் பிடித்து மாற்றானை வதஞ்செய்த வணங்காமுடி உன்னைக் காப்பாற்றுவேன் என்று வெஞ்சினங் கூறி வந்த வீரனே. கர்ணனே எனது வலது கரமே என்னை விட்டுப் போய் விட்டாயா. மரணத்தாலும் என்னை உன்னிடத்தில் இருந்து பிரிக்க முடியாது. என்று அடிக்கடி கூறுவாயே அதை நான் இனி எப்பொழுது காண்பேன் ஐயோ கர்ணா இறகொடிந்த பறவையாக்கி விட்டு நீ போய் விட்டாயா வீரனே எவர்க்கும் அஞ்சாத சிங்கமே என்னருமை தோழனே ரணகளம் சென்று மாற்றான் படை துவம்சம் செய்து ஜெயபேரிகை முழங்க வெற்றியோடு திரும்புவாய். வெற்றித் திலகமிட்டு திஷ்டி கழித்து சிந்தை குளிர வரவேற்று ஆலிங்கணம் செய்ய காத்திருந்த என்னை ஆவி பிரிந்த கட்டையை தழுவ நிஷ்டூரம் பண்ணி விட்டனரே பகைவர். கர்ணா எனக்கு உற்ற துணையாய் இருந்து இறுதியில் உயிரும் கொடுத்த உத்தமனே உன்னைக் கெடுத்தவரை நிட்டூரம் செய்து பழி வாங்காமல் நான் இறக்கப் போவதில்லை கர்ணா மன நிறைவோடு உனது உயிர் நண்பன் வணங்கா முடியின் இறுதி மரியாதையை ஏற்றுக்கொள்.

[திரை]

**ஐ. சிவசுந்தரம்,**
(விடுகை வருடம்)

# கவனம்

அன்றும் இன்றும் என்றும் எதிலும் எவ்விடத்திலும் இன்றியமையாததொன்று கவனம். மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஒன்றாக இணைந்து இயங்குவது இது. பண்டு பிரிந்து வாழ்ந்த மக்கள் கொடிய காட்டு விலங்குகளிலிருந்து தப்புவதற்காக கூடி வாழ்வதில் கவனம் கொண்டனர். ஒருவரின் கருத்தை மற்றவர்க்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எவ்வாறு அறிவிக்கலாம் என்பதில் தம் கவனத்தை செலுத்தினார்கள்; சிறந்த வழியாக மொழி பிறந்தது. காட்டில் அலைந்து திரிந்து பறவைகளையும் மிருகங்களையும் வேட்டையாடியும் காய்கனி கிழங்குகளை தேடியும் உண்டு காலங்கழித்து வந்தார்கள். அவ்வுணவுகள் போதிய அளவு ஒழுங்காகக் கிடைக்காமையால் அவர்களது கவனம் உணவுற்பத்தியில் சென்றது; உழவுத் தொழில் பிறந்தது. பச்சையாக உண்ட மனிதன் பதம் படுத்தி உண்பதில் இச்சை கொண்டான்; சமயற்கலை பிறந்தது. ஓடித் திரிந்த மக்கள் ஓரிடத்திலிருந்து வாழ

நேரிட்டது; குகை வாழ்வு குடிசை வாழ்வாயிற்று. இலைகுழைகளையும மரபட்டைகளையும் மிருகங்களின் தோல்களையுங் கொண்டு தன் மானத்தை காத்த மனிதனின் கவனம் திசை திரும்பியது; நெசவுத் தொழில் பிறந்தது.

ஆற்றங்கரைகள் மாற்றம் பெற்று ஏற்றமுற்றன. பயிர்கள் வளர்ந்தன. பண்ணைகள் தோன்றின. காடுகள் நாடுகளாயின. நாடுகள் நகரங்களாயின. குடிசைகள் கூடகோபுரங்களாகவும் மாட மாளிகைகளாகவும் மாறின. மனிதன் அன்று இயற்கையில் கிடைத்த மிருகங்களைக் கொண்டு இடர் மிகுந்த வழிகளில் சவாரி செய்தான். இன்று சிறந்த சாலைகளில் விரைந்தோடும் சொகுசான செயற்கை வாகனங்களில் சுகமாகப் பிரயாணஞ் செய்கிருன். விரிந்த கடல் மீது தன் பரந்த கவனத்தைச் செலுத்தினுன். கடல் வயிற்றைக் கிழித்து விரைந்து சென்று தேச தேசாந்தரங்களை இணைக்கும் மாளிகை போன்ற சகல சௌகரியங்களும் கொண்ட இயந்திர கப்பல் உண்டானது. பறவையின் மீது கவனம் செலுத்திய இறைட் சகோதரர்கள் பவனத்தை ஊடறுத்துக் கொண்டு விண்ணில் விரைந்தேகும் விமானத்தைக் கண்டு பிடித்தனர். கொதி நீராவியின் சக்தியை அவதானித்த ஜோர்ஜ் ஸ்ரீபன்சன் நீராவியியந்திரத்தைக் கண்டு பிடித்தார். போக்குவரத்தில் போற்றத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. நீரின் அலைகளில் சென்ற மார்க்கோனியின் கவனம் வானொலியைக் கண்டு பிடிக்க காரணமாயிற்று.

இவ்வாறு பல நல்லோரின் கவனம் பாரிலுள்ள எல்லோரையும் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கின்றது. கவலையை ஒழிக்கவும் பொழுதை பிரயோசனமாகக் கழிக்கவும் அறிவை அளிக்கவும் திரைப்படங்கள், வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிகள் போன்றன மனித குலத்திற்கு கவனம் அளித்த பரிசுகள், இவை மாத்திரமன்றி காலத்தைக் கணிக்க கடிகாரம், தகைமையைத் தெரிந்திட கொம்பியூட்டர் போன்ற எண்ணற்ற கருவிகளையும் கவனம் புவனத்திற்குக் கொடுத்துள்ளது. நல்லோர் கவனம் நற் செயலிலும் தீயோர் கவனம் தீச் செயலிலும் சென்றமையால் திருப்பங்கள் பல ஏற்பட்டன. கூனியின் கவனம் நாடாள வேண்டிய இராமனை காடாள வைத்தது. மாயக் கண்ணனின் கவனம் கும்பகர்ணனின் மதியை மயக்கி நித்திய தத்துவத்தை நித்திரை தத்துவமாக்கிவிட்டது. துஷ்ட துரியோதனுதியோரின் கவனம் பாண்டவரை பெரும் பாடு படுத்திவிட்டது. விசுவாமித்திரரின் கவனம் உண்மையின் உறைவிடமான அரிச்சந்திரன் மீது பட்டது. அதனுல் அவன் நாடு, நகர், மனைவி, மக்கள் அனைத்தையும் இழந்து இன்னல்களுக்காளாகிறுன். எனினும் தன் கவனத்தை வாய்மையில் செலுத்தி வெற்றி கண்டு என்றும் புகழுடன் திகழ்கின்முன். வெள்ளையனின் கவனம் வேறு நாடுகளைப் பிடித்தது; காந்தியின் கவனம் மீண்டும் அதைப் பறித்தது. ஆன்றோர் கவனம் பல சான்றோர்களைத் தோற்றுவித்தது. இவ்வாருக கவனம் வரலாற்றையே வரைந்துள்ளது.

''யாகாவாராயினும் நாகாக்க
காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''

என்ருர் வள்ளுவர். அழிவும் ஆக்கமும் சொல்லாலும் செயலாலும் வருவதால் அவற்றில் தவறு நேராது கவனமாயிருத்தல் அவசியம்.

பண்டு உழவில் கவனம் செலுத்திய நம் நாடு உணவில் தன்னிறைவு கண்டது. வெளிநாட்டாரின் வரவு அதனை வேறு வழியில் திருப்பியது. பாதிக் கவனம் பணப்பயிர்களிலும் மீதி கவனம் நிர்வாகத்திலும் நின்றது. கழனிகளெல்லாம் காடுகளாக மாறின. இதனுல் நாம் உணவிற்காக வெளிநாட்டாரிடம் கையேந்தி நிற்கிருேம். இவ்விழி நிலையை போக்கும் நோக்கோடு இன்று நாம் எம் கவனத்தை உணவுற்பத்தியில் செலுத்துகிருேம்.

காட்டில் விலங்கு நிலையில் வாழ்ந்த மனிதனை விண்வெளியைக் கடந்து கோள்களுக்குச் சென்று ஆராய்ச்சி செய்து வெற்றி காணச் செய்தது விஞ்ஞானிகளின் கவனம். மனித குலம் உலகில் தோன்றிய நாள் முதல் இன்றுவரை இன்னல்கள் பலவற்றைக் கடந்து பல பலத்துறைகளிலே பற்பல வசதிகளைப் படைத்துக்கொடுத்தது ஆய்வாளரின் கவனம். இவர்களின் கவனம் தீய வழியில் திரும்புமாஞல் உலகமே கணப்பொழுதில் அழிந்துவிடும். கவனம் மனித சிந்தனையைத்

தூண்டி அவனது அறிவைப் பிரகாசிக்கச் செய்கிறது. இதன் விளைவால் கைத்தொழில், கமத்தொழில், மருத்துவம், போர், போக்கு, வரத்து போன்ற துறைகளில் பல உண்மைகளையும் கண்டு பிடிப்புகளையும் காண முடிகின்றது. ஓடும் நீர், வீசுங்காற்று, கேட்கும் ஒலி போன்ற இயற்கை சக்திகளில் செலுத்திய கவனத்தினுல் பயன்படத்தக்க வேலைகள் பல செய்விக்கப்படுகின்றன. இவையே வெப்பசக்தி, ஒளிசக்தி, மின்சக்தி போன்ற பல சக்திகளாம். அணுசக்தியும் இப்போது ஆக்கப்பாதையில் உபயோகிக்கப்படுகிறது. ஆயிரமாயிரம் மக்கள் சேர்ந்தும் பல நாட்களில் செய்யமுடியாத செயல்களை சிலரின் உதவியுடன் இச்சக்திகள் சில நாட்களில் திறமையாக செய்து முடிக்கின்றன. இவையாவற்றையும் திரட்டிப் பார்க்கும்போது மனித சிந்தனையின் திட்பநுட்பங்களுக்குக் கவனமே காரணமாகின்றது.

அஞ்ஞான மனிதனை விஞ்ஞானியாக மட்டுமல்லாது மெய்ஞானியாக மாற்றுவதிலும் கவனம் பெரும்பங்கு கொண்டுளது. ஆரவாரத்துடன் அடியார் புடைசூழ ஆணவச் செருக்குடன் சென்ற பெரியார் உமாபதி சிவாச்சாரியார் மீது சிறுவன் மெய்கண்டதேவர் செலுத்திய கவனம் அவரை மெய்ஞானியாக்கிவிட்டது. மருதவாணர் தாயிடம் கொடுத்துச் சென்ற பேழையைப் பெற்று திறந்து அதனுள் இருந்த ஓலையை விரித்த திருவெண்காடர்,

''காதற்ற ஊசியும் வராது காணுன் கடைவழிக்கே'' என்ற வாசகத்தைக் கவனித்தார். கோடீஸ்வரரான அவர் உலகப் பற்றை துறந்து மெய்ஞானியானுர். கவனக் குறைவினுல் கடவுள் இல்லையென்று கூறும் நாஸ்திகர்களும் நம்மிடையே இருக்கிறுர்கள். பாரில் நிறைந்துள்ள காற்றையோ நெருப்பிலுள்ள சூட்டையோ பார்த்தறிய முடியாமையினுல் அவை இல்லையென்று இயம்பிடலாமா? பாண்டத்தை வனைந்தவன் குயவன். இப்பரந்தவுலகை வனைந்தவன் யாரோ? அவனே இறைவன்.

> ''அகரவுயிர்போல் அறிவாகி யெங்கும்
> நிகரிலிறை நிற்கும் நிறைந்து''

என்று உமாபதிசிவம் இறைவனின் வியாபகத்தை விபரிக்கின்றுர். இவ்வாறு எங்கும் நிறைந்து நிற்கும் இறைவனை மெய்ஞானிகளின் அகக்கண்களினுலன்றி அஞ்ஞானிகளின் புறக்கண்களினுல் அறியமுடியாது. இதுபோன்ற உண்மைகளை பண்பட்ட உள்ளத்தோடு கவனித்தாலன்றி புரியாது.

இவ்வுலகில் நட்பில்லா வாழ்வு உப்பில்லா உணவிற்குச் சமன். நட்பை பெறுவதிலும் கவனமாயிருத்தல் வேண்டும். ஆய்ந்தோய்ந்து பாராது கொள்ளும் நட்பு ஆபத்தைத் தரவல்லது. அகிலம் சிறக்க அரசின் கவனம் குடிகளிலும் வல்லவனின் கவனம் நல்லவற்றிலும் பெற்ருேரின் கவனம் பிள்ளைகளிலும் பள்ளியின் கவனம் கல்வியிலும் உழவனின் கவனம் பயிரிலும் செல்லவேண்டும். கவனம் குறைந்தால் பள்ளியில் சிறந்த கல்வியையும் போரில் வெற்றியையும் உழைப்பில் ஊதியத்தையும் ஒழுக்கத்தில் உயர்ச்சியையும் அடக்கத்தில் ஆண்மையையும் பொறுமையில் பெருமையையும் வறுமையில் செம்மையையும் வாழ்வில் இன்பத்தையும் இழந்து கதிகலங்கி மதிமயங்கி நெறிதவறி நிலைகுலைந்து நிற்கநேரிடும். ஆகவே இன்றைய நிலையில் கவனம் நல்வழிகளில் செலுத்தப்படுமானுல் மனித நாகரீகத்தின் வியத்தகு வளர்ச்சிக்கு சிறந்த தோழனுகவும் தீய வழிகளில் திரும்புமானுல் அனைத்தையும் அழித்தொழிக்கும் பயங்கர காலனுகவும் மாறும் என்பதில் ஐயமில்லை.

**கு. செல்வேந்திரத் தேவர்,**
(இறுதி வருடம்)

# வாணி விழாவில் பாடப்பட்ட கவிதை

## வாணி துணை

ஆயகலை உணர்விக்கும் அம்மா உந்தன்
அரும் பதங்கள் தஞ்சமென மைந்தன் வந்தேன்
சேய் எனது கவிதைதனில் பிழைபொறுப்பாய்
செந்தமிழ்த்தாய் உன் பதங்கள் சரணம் அம்மா.

## கவிதைத் தலைப்பு

''ஆதலினால் வென்றாள் என் அன்பு''

## பொருள்: விஞ்ஞானமும் சமயமும்

1. காதலினால் உலகம் உய்யும் களிப்போமென்றேன்
கனக மயில் முன்வந்து இறைவன் பக்திக்
காதலது வேண்டுமெனக் கடிதுரைத்தாள்
ஏனடி நீ வீண்பிதற்றல் பேசுகின்றாய்
எழிலான விஞ்ஞானயுகத்தி லின்று
ஏவுகணை ராக்கெட்டில் சந்திரனை
எட்டிவிட்ட கால மிதை அறிந்திடாமல்
வீணான கதை பேசல் தகுமோசொல்வாய்.

2. எழில் நகையை முகமதியில் காட்டி எந்தன்
இனியவளும் கூறுகின்றாள் அத்தான் அந்த
எழில் வானில் உலவு விஞ்ஞானி கூட
இறையருளை பெற்றதனால் தானே ஆங்கும்
இனிதான வெற்றியோடு வந்தான் என்றாள்
இறையருளை என்னென்று இயம்ப வென்று
கனியிதழில் நருஞ்சுவையில் கலந்த பாஷை
காதில் விழ கூறுகின்றேன் கேளும் பெண்ணே.

3. ஏனடி நீ கற்பனையில் இறைவனென்று
எந்நாளும் கற்பூரம் சாத்துகின்றாய்
இயற்கையிலே உலகமது தோன்றிற்றென்ன
இயம்பியவன் விஞ்ஞானி டார்வின் அன்றோ
இத்தனையும் அறிந்திருந்தும் ஏனோ கண்ணே
இக்கால பஞ்சமதை புரிந்திடாமல்
இறைவனுக்கு வீண் செலவு செய்யுகின்றாய்
என் அன்பே நீதிருந்த மாட்டாயோ தான்.

4. பழந்தமிழர் பண்பாட்டை மறந்த தேனோ
பைந்தமிழர் பக்தியோடு காதல் வீரம்
பலகலையும் கொண்டவர்கள் வாழ்ந்ததாலே
பார்புகழ வாழ்ந்தகதை மறந்ததேனோ
பக்தியோடு அற்புதங்கள் பலவும் செய்த
பாவலர்கள் நாவலர்கள் நாயன்மார்கள்
பலர் வாழ்ந்த தமிழ்ப் பண்பை ஏனோ அத்தான்
பகருகிறீர் இழிவுபட என உரைத்தாள்.

5. ஈதென்ன வீண்கதைகள் பேசுகின்றாய்
இக்காலம் விஞ்ஞான காலமன்றோ
இதயத்தை மாற்றுகின்ற வைத்தியங்கள்
இருந்தபடி தொழில் புரிய இயந்திரங்கள்

இயம்புதற்கு விடைபகர கொம்பியூட்டர்கள்
எத்தனேயோ தூரமதில் நடப்பதெல்லாம்
எடுத்தியம்ப வானெலிகள் டெலிவிசன்கள்
இத்தனேயும் இயற்கையிலே வந்ததோ சொல்.

6. வானெலியும் டெலிவிஸனும் ஞான மென்முள்
வகுப்பதற்கு அறிவுக்கல்வி வேண்டுமன்றே
கல்விதனே உலகினுக்குத் தருவதற்கு
கலேமகளின் கடாட்சமது வேண்டு மன்றே
கல்வியே விஞ்ஞானக் கருத்துகட்கும்
கருவாக அமைவதை நீர் அறியீரோ ஏன்?
கனியிதழில் மொழிபகர்ந்தாள் காதல் நல்லாள்
காதலியின் அமுதமொழி கேட்டு நின்றேன்.

7. அகிலமதை அழித்தொழிக்கும் ஆயுதங்கள்
ஆக்குகின்ற விஞ்ஞானம் நன்றே அத்தான்
அதனேயுமே மிஞ்சுகின்ற கண்டம் தாவும்
ஏவுகணே ஆக்குகின்ற உலகழிவு
எங்களுக்கு நல்லதோ; தெய்வபக்தி
திடமுடனே கொண்டுவிட்டால் சிந்தை தன்னில்
சின மில்லா சிறப்பெய்தும் வாழ்வில் என்றும்
சீராகப் பார்த்திடுவீர் அத்தான் என்முள்.

8. மாதரசே கோழி இன்றி முட்டை தன்னே
மந்திரம் போல் விஞ்ஞானம் பொரிக்க வைக்கும்
அடுப்பின்றி நெருப்பின்றி உணவு தன்னே
ஆக்குதற்கு ஆதவனின் சூடு போதும்
அன்புக்கு ஓர்பிள்ளே வேண்டு மென்ன
அரசமரம் ஆலயங்கள் சுற்றிச் சுற்றி
அழுது வந்த நிலேமையது இன்று மாறி
ஹார்மோனே ஊசி பாச்சி பெறலாம் பிள்ளே

9. கோழி இன்றி முட்டைதனே பொரிக்கவைக்கும்
கோளாறு மிக்க விஞ்ஞானி தன்னே
கோழி தனே உருவாக்கச் சொல்லும் அத்தான்
அவர்களுக்குக் கூடுமோ என்பதையும்
ஆதவனின் பேரொளியில் சமைப்போர் இங்கு
ஆதவன் போல் இன்னுமொன்றை செய்குவாரோ
வீண்வாதம் பேசுவதில் பயனென்றில்லே
விஞ்ஞானம் அதன் கருவே இயற்கையாகும்.

10. விஞ்ஞானம எத்தனேதான் உயர்ந்த போதும்
மெய்ஞானப் பொருளன்றி வேறென்றில்லே
அஞ்ஞானம் பேசுகின்ற அறிவிலிக்கும்
அஞ்சுகமே உன்மொழிதான் சரியே என்றேன்
எஞ்ஞான்றும் இயற்கையிலே கடவுளுண்டு
இத்தனேக்கும் சக்தியது அடிப்படையாம்
அது கேட்டு சிரித்திட்டாள் எந்தன் கன்னி
ஆதலினுல் வென்முள் என் அன்புஉள்ளம்.

**இர. ரெங்கராஜன்,**
(இரண்டாம் வருடம்)

# THE TEACHER OF ENGLISH LANGUAGE

AND

# HIS EASY APPROACH TO IT.

ENGLISH – the international language needs no intorduction of its importance since a speaker of this lingua - franca receives the honour of being a citizen of the world. Under the colonial rule in Ceylon, English was a language for profession. It was the sole prerogative of a privileged few. Only the wealthy children had the opportunity of receiving English education.

A new scheme introduced recently in the education system of Sri Lanka has brought a remarkable change and English is being given importance. The making of English a compulsory second language in the School Curriculam offers equality of educational opportunity for all.

English during the British rule was learnt for the purpose of seeking a job. It was also regarded as an optional language by many. English as an optional subject, and a key to advancement in position, never proved so fruitful. Instead, a few persons of some financial standing were able to obtain priority in the English education. Rural children suffered the panks of discrimination. For them, English was a subject beyond their reach.

To bridge this gap, the State declaring English a compulsory secondary language at the secondary education level was welcome. Compulsory education affords ample oppertunities to everyone to follow the same system of education.

Urban or rural, rich or poor, children of all classes and creeds have been placed on par to learn English from Grade VI onwards from 1972. Thus the process leads the children to sit the National Certificate of Education Examination with no discrimination. The same Syllabus is followed in every school or institution. The candidates answer the common paper. There is equality of opportunity in Education.

"Compulsory" and "equality" are the two vital factors which require much thought of all educationists concerned in the teaching of English. If then, what steps are being taken to improve the learning of this language! How could Ceylon achieve this end? Nation which speaks english and considers it as its language for its common use, common vehicle of expression do not face problems. But ours is a country where Sinhalese and Tamil are the dialects spoken by the majority. Only a very small frac-

tion of the population has a fair knowledge of English. Therefore the question arises how this introduction could be of success?

Hence we pause for a while to think wisely how the child learns the mother tongue. Does it require much effort by the teaching staff? Why not we apply the same process, methods and patterns to teach English too. Presently, all educationists profess the view that experiene is education. This philosophy could be applied to teaching of English as well.

While examining the child, we find that the normal sequence of learning of the child in the home has the following characteristics:-

1. The child observes and listens to others when they speak.
2. Speech follows listening and observation.
3. Speech by imitating others.
4. There is constant repetition.
5. Natural motivation because the child has to learn to fulfil its needs.
6. There is free expression.

The foregoing situation prevalent at home should be created in a school or classroom. There too a teacher is baffled with another problem. A child by the time it comes to school knows some words and sentences in its mother tongue. It thinks in that medium, understands and expresses in the same mother tongue.

It is not the aim that Ceylonese should speak English as Englishmen do, but understanding is the goal. The most fundamental aim of teaching English as a compulsory second language would be achieved if the learner is able to gather informatton in English with a view to enriching his knowledge. It is a must to understand written words, read an unvoiced communication, maintain acceptable standards of pronunciation and the child should be able to write atleast simple grammatical English. Our object should be to train pupils in the four skills of:- (1) understanding. (2) Speaking. (3) Reading. (4) Writing. we teach whose mother tongue is not English are engaged in this task. Our speech organs become accustomed to make the sounds of our mother tongue. These naturally differ in some important respects from the sounds of the other languages, It requires much physical practice and patience to acquire preficiency in the sounds of a foreign language.

A teacher's position is that a person teaching when he is meditating between another person and his world. To mediate is to be instrumental in another person experieneing of his world and in his search for meaning. The special aspect of the mediating function may be:-

1. Participating with an individual or group in clarifying or otherwise improving guidliness for selecting opportunities for experience.

2. Serving as a model in interpersonal transactions, or otherwise fostering educative interaction among peers and pupils of other age groups.

3. Helping an individual or group to use time, space, equipment and materials.

The teacher is both a creator and one who expects creativity in others. He is a guide, a modernizer, an example, searcher, counseler, creator, an authority, an inspirer of vision, doer of routine, breaker of camp, story - teller and actor,

facer of reality and an evaluater. The teacher has abundance of opportunities to be creative in the way he deals with all of these changing conditions. The products of the teacher's creativity is "opportunities" for individuals and groups to experience and learn. He also plans ideas encouraging untapped human resourecs to come to their own in human relations. The teacher should be new to himself. He is sourrounded by rawness, new informations, new inventions and new problems. An English teacher, bearing in mind his position as said before, should adapt himself to the changing situation and execute his mission.


The best way forseen could be by natural method. He then should follow the mother-tongue precess and abopt a practicable method in transporting the children to this language experience. It is anticipated that a child in such a natural situation would learn anything. If them, can a Ceylonese child find an english environment? This is possible when a child is put in the english home. Even in doing so, the child which had already accumulated the mother tongue will be muddling up the motivation. The child also will be induced, at a preliminary stage in the atmosphere of its mother-tongue. Instead of using a class-room, a well planned english onvironment with a few westernized species, a chalk, a black or colour-board, the English teacher may set himself on a task experimenting this project method by establishing a co-operative tuck-shop, a home, a garden, a post-office, a railway station, etc. He may not contact the real thing itself at certain stages. Yet he can represent vividly some kind of vacarious teaching materials. It will be quite confusing the students to use several concepts presented at once. They should be built up in sequence based on the natural structure and learning ability.

Labeling articles could help both the teacher and the child a great deal. The child observing a referent may form a concept and develop a sensory immage. He perecives the object and its name and forms a concept. The teacher also speaks out the words found in the newly set up class-room which the children would imitate. This is done without any strain on the child.

The most effective kind of motivation is that which develops within a child when he begins to get a vision of real thrill and excitement. A dramatic performance by a teacher would ensure this quality in a child. Colourful drawing and handling such articles may enhance a childs experimenting ability.

All the time, the children should be allowed very free from interference. The teacher may only help a child when it makes errors in speech, deeds and performance. He should not create an impression in the child's mind that he corrects it. In learning experience, a teacher would be successful when a student opens his senses, so to speak and lets it "IN". There the child is receptive. The more receptive he is the more he learns.

**M. ARUMUGAM,**
(Final Year.)




*1974*ஆம் ஆண்டு கலாசாலையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் விளையாட்டு வீரனாகத் தெரிவுசெய்யப்பட்ட

**திரு. தருமலிங்கம் கோவிந்தசாமி**



*1974*ஆம் ஆண்டு கலாசாலையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்ட

**செல்வி க. தம்பிராசா**



1974 ஆம் ஆண்டு நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில்
முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கலைமகள் இல்லத்தவர்கள்

# இலங்கை - கல்வி வரலாறு

பண்டைக் காலத்தில் குரு சீடன் பரம்பரையாகவே கல்வி போதிக்கப்பட்டு வந்தது. குறிப்பிட்ட சில நூல்களையும், ஆசிரியரினால் ஒப்படைக்கப்படும் சில விடயங்களையும் திருப்பி ஒப்புவித்தலே கல்வியாகக் கருதப்பட்ட காலம் அது. பள்ளிக் கூடங்களோ, பல்கலைக் கழகங்களோ பட்டம் அளிப்பதற்கு இருக்கவில்லை. திண்ணைகளில் ஆசிரியர் ஒருவரைச் சுற்றி அமர்ந்திருந்தே மாணவர்கள் கல்விகற்றனர். தாய் மொழியிலுள்ள இலக்கணங்களை நன்கு கற்பித்தபின்னரே இலக்கியங்களையும், சமய நூல்களையும் மாணவர்களுக்கு கற்பித்தனர். சுருங்கக் கூறின், மொழியோடு மதமும் கற்பிக்கப்பட்டு வந்தது. இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழரசர்கள் தமிழையும் சைவத்தையும், பௌத்த மன்னர்கள் சிங்களத்தையும், பௌத்தத்தையும் போதிக்க உதவினர். ஆனால் போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர், இந்நிலையில் பெருத்த மாறுதல் நிகழ்ந்ததென்று தான் கூறவேண்டும்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை பௌத்த குருமாரே சமயத்தையும், கல்வியையும் போதித்துவந்தனர். ஆனால் தருமபாலன் கிறிஸ்தவனானபின் அம்மதமே அரசாங்க மதமாயிற்று. பௌத்த கோவிலுக்குரிய வருமானம் பறிக்கப்பட்டதனால் கோயிலை ஒட்டியிருந்த கல்வி நிலையங்கள் சோர்வுற்றன. பௌத்த கோயில் வருமானத்தைப் பெற்ற கிறிஸ்தவ குருமார் கல்விப்பணியில் ஈடுபட்டனர்.

இலங்கையில் மதபிரசாரம் செய்த பிரான்சிஸ் சபைக் குருமார் கோட்டை இராச்சியத்தில் கோவில்களுக்கருகில் பாடசாலைகளை நிறுவினர். யாழ்ப்பாணத்தில் 25 பாடசாலைகள் இருந்தன. இப்பாடசாலைகளில் கிறிஸ்தவ சமயம், வாசிப்பு, எழுத்து, இசை, இலத்தீன், நற்பழக்கம் என்பன போதிக்கப்பட்டன. இங்கு கிறிஸ்தவ சமயப் பிள்ளைகளே கல்வி கற்றனர். கல்வி நிலையங்களுக்கு அரசாங்க ஆதரவு கிடைத்தது. பௌத்தரின் சமய நிறுவனங்களைப் பறித்து இவற்றுக்குக் கொடுத்தமையால் பொதுமக்கள் ஆத்திரமடைந்து பல தொல்லைகளைக் கொடுத்தனர்.

அந்தக் காலத்தில் கல்வி வளர்த்தவர்கள் மிசனரிமாரே. கல்வி போதிக்கும் பிரதான ஆசிரியர்களாகவும் இவர்களே இருந்தனர். இலங்கையில் இளவரசர்களுக்கும் இவர்களே ஆசிரியர்களாக இருந்தார்கள். இவ்விளவரசர்கள் பெற்ற கல்வி ஆரம்பத்தில் மிசனரிமார் நடாத்திய கல்லூரிகளில் படிப்பிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கமைந்தவாறே இருந்தது. அவை போர்த்துக்கேய மொழியை எழுத வாசிக்க அறிதல், எண்கணிதம், பாட்டு, இலத்தீன், நற்பழக்கங்கள், கிறிஸ்தவ சமயம் ஆகியன போர்த்துக்கேய மொழியில் எல்லோரும் சித்தியடைதல் வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்பட்டு இருந்தது.

மிசனரிமார் அரச குடும்பத்தினருக்கு அளித்த கல்வி ஐரோப்பிய அரச குடும்பக் குழந்தைகட்கு அளிக்கப்பட்ட கல்வியைப் போன்றே இருந்தது. எல்லாப் பாடசாலைகளிலும் கிறிஸ்தவ சமயமே போதிக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயத்தைப் படிப்பிப்பதில் மிசனரிமார் முழுமூச்சாக ஈடுபட்டனர். குழந்தைகட்கு எழுத்திலும் நல்லொழுக்கத்திலும் மற்றைய கலைகளிலும் சிறந்த பயிற்சி அளித்தனர். அவர்கள் கல்லூரி மூன்று கல்விப்பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி மாணவர் வாசிக்கவும்,

எழுதவும், பாடவும கற்றுக்கொடுக்கும் ஆரம்பப் பாடசாலையாகும். இரண்டாம் பகுதி வயது கூடியவரும் அறிவுக் கூர்மையுடையவருமான மாணவருக்கான இலத்தீன் பாடக் கல்லூரியாகும். இக்கல்லூரி குருமாராக வரவிரும்பியவருக்கான தொரு முக்கிய இடமாக அமைந்திருந்தது. ஆனல் இதில் வேறு மாணவர்களும் படித்தனர். மூன்ருவது பகுதி குருத்துவ மாணவருக்கான சமய சித்தாந்த பள்ளியாகும். பாடப் போதனைகள் இலத்தீன் மொழிமூலம் நடைபெற்றன. சமய பாடத்திற்கு அடுத்த பாடமாக படிப்பு இலகுவாகவும், இன்பகரமாகவும் இருப்பதற்காக சமய பாடல்கள் சிலவற்றை ஞானகீதங்களாகப் படிப்பித்தனர். இப்பாடம் படிப்பிப்பதன் நோக்கம் கிறிஸ்தவ தோத்திரப் பாடல்களை கோயிலில் இனிமையாகப் பாடுவதற்காகப் பயிற்றுதலை ஆகும். இஃது ஒரு சமய நோக்குடைய சபையாக இருந்தாலும் மாணவரின் முழு வாழ்க்கையும் உருவாக்குவதுடன் தொடர்புடையதாக இருந்தது.

கிராமப்புறங்களில் இருவகையான கல்வித்திட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் ஒன்று சமயபாடப் போதனையை முழு நோக்கமாகக்கொண்டது. மற்றையது எழுத்துக் கல்விப் போதனை அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. குருமார் சமயக் கல்வியை ஆண் பெண் ஆகிய எல்லாக் குழந்தைகட்கும் போதித்தனர். இவ்வகுப்புகள் கோயில்களிலே நடைபெற்றன. எழுத்துக் கல்விப் போதனையோ பாடசாலையில் மிகக் குறைந்த தொகையான குழந்தைகட்கே அளிக்கப்பட்டது.

மிசனரிக் கல்லூரிகளில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு போர்த்துக்கேய மொழி கற்பிக்கப்பட்டு வந்ததுமன்றி அந்த மொழியே போதிக்கும் மொழியாகவும் அமைந்தது. இலங்கைப் பெற்றோர்களும் போர்த்துக்கேய மொழியை தங்கள் பிள்ளைகள் படிப்பதில் மகிழ்ச்சியுற்றனர். ஏனெனில் போர்த்துக்கேய மொழி அரச மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் இருந்தமையால் போர்த்துக்கேய மொழி அறிவு, ஆட்சியாளரிடம் சிறந்த உத்தியோகங்களைப் பெறவும் வியாபாரத்தில் முக்கிய இடம் பெறவும் செல்வாக்குள்ள தொடர்பினுல் பெருநிலை எய்தவும் வாய்ப்பளித்தது. கரையோரங்களில் வாழ்ந்தவர்கள் போர்த்துக்கேய மொழியைக் கற்றனர். மிசனரிமார் தேசிய மொழிகளைக் கற்கும் முயற்சியைத் தீவிரமாக மேற்கொண்டார்கள். தங்கள் மதப்பிரசாரத்திற்காக அவர்கள் தேசிய மொழிகளைக் கற்ருரேயன்றி நாட்டின் பண்பாடு, மொழி, இலக்கியம் என்பவற்றில் கொண்டிருந்த அபிமானத்தாலன்று. மொழிகளைப் பேசக் கற்கும்போதும், நூல்களை எழுதும்போதும் இலக்கணங்களையும் அகராதிகளையும் வகுக்கும்போதும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கமே உள்ளத்தில் மேலோங்கி நின்றது. எனவே மதப்பிரசார நோக்கத்தினுல் உந்தப்பட்டு தேசீய மொழிகளில் கவனம் செலுத்தினர். போர்த்துக்கேயர் காலக் கல்வியில் மதமே முக்கிய இடம் பெற்றது.

போர்த்துக்கேயருக்குப் பின் இலங்கையையாண்ட ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைக் கல்வித்திட்டத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. தேவாலயமும் பாடசாலையும் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. பாடசாலைகள் யாவும் விசேட தினங்களுக்கு மட்டுமே லீவு கொடுக்கப்பட்டது. புதன் கிழமைகளிலும், சனிக்கிழமைகளிலும் அரைநாள் லீவு கொடுக்கப்பட்டது. பாடசாலை நேரம் காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரையுமாகும்.

ஒல்லாந்தர் காலத்தில் ஏழைகளின் கல்வியில் முக்கிய கவனம் செலுத்தினர். இவர்களுக்குரிய பாடசாலைகள் ஆரம்ப பாடசாலைகளாகவும் கலவன் பாடசாலைகளாகவுமிருந்தன. கம்பெனியின் ஊழியர்கள், பறங்கியர்கள் ஆகியோரின் குழந்தைகட்கென "நிதர்லாந்து" பாடசாலை ஒன்றை ஆரம்பித்தனர். அனுதை நிலையம், ஏழைகளின் விடுதி என்னும் நிலையங்களில் பாடசாலைகள் நிறுவியதோடு கோவில் பற்றுப் பாடசாலைகளையும், தனியார் பாடசாலைகளையும் அமைத்தனர். அனுதைக் குழந்தைகளுக்கு வேருன கல்வி போதிக்கப்பட்டது.

ஒல்லாந்தரின் பாடசாலைகளில் கல்வி கற்ற ஐரோப்பிய குழந்தைகட்கு எழுத்து, கணிதம், வாசிப்பு, புவியியல், சங்கீதம் ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டன. இப் பாடசாலைகளில் ஒல்லாந்தரின் திருச்சபைகளில் இரண்டாந்தரப் பதவிகளை வகித்தவர்களான போதகர்களும் உபதேசியார்களும் ஆசிரியராகப் பணிபுரிந்தனர். இப் பாடசாலைகளில் போர்த்துக்கேய மொழி கற்பிக்கப்படலாகாதென்றும், அம்மொழி பேசப்படலாகாதென்றும் தடைசெய்யப்பட்டிருந்தது. காலப்போக்கில் போர்த்துக்கேய பாடசாலைகள் இயங்குவதற்கும் அனுமதி கொடுத்தார்கள். வருடாந்த பரிசோதனையின்போது 6 வயதடைந்த சிறுவர்கள் பாடசாலையில் கட்டாயம் அனுமதிக்கப்படல் வேண்டுமென்றும் ஞானஸ்நானம் பெற்ற பெற்றோர் தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள். தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத்தவறும் பிள்ளைகட்டு அபராதம் விதிக்கப்பட்டது. முறையாக ஆசிரியர் பயிற்சி பெருத ஆசிரியர்கள் கடமையாற்றுவதைத் தவிர்ப்பதற்காக அவர்களை ஒழுங்காகச் சென்று குருமாரிடம் கல்வி கற்கவேண்டுமென்றும் கட்டளை செய்தனர். ஆசிரியர் தமது அறிவை வளர்ப்பதற்கேற்ற ஒல்லாந்த மொழிப்புத்தகங்களும் பத்திரிகைகளும் தாராளமாகக் கொடுத்துதவினுர்கள். இவ்வாசிரியர்கள் வாய்ப்பேச்சு மூலம் பாடம் சொல்லிக் கொடுப்பதற்குப்பதிலாக மாணவர்களுக்கு வாசிப்புப் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும் நிறையக்கொடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. பாடசாலைகள் திறமையற்றவைகளாக இருப்பின் ஆசிரியர்கள் பௌத்தவர்களாக இருக்கவேண்டுமென்றும் அல்லது பொருளாசை பிடித்தவர்களாக இருக்கவேண்டுமென்றும் எண்ணினுர்கள்.

பெண்களுக்கு 10 வயது வரையும் கல்வி கற்று பாடசாலையை விட்டு விலகுதல் வேண்டுமென்றும் சட்டமிட்டிருந்தனர். மாணவர்கள் யாவரும் பாடசாலைக்கு கட்டாயமாகச் செல்லவேண்டுமென்றும் வீட்டு வேலைகட்கு பெற்றோருக்கு உதவத் தினமும் ஒரு பிள்ளையையேனும் இரு பிள்ளையையேனும் மறித்துவிட்டு மற்றவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கும் பெற்றோருக்கு அனுமதியளிக்கப்பட்டது. மாணவ ஆசிரியர்கள் தாம் படித்தவற்றை அதே முறையில் மீண்டும் சொல்லிக்கொடுக்கக்கூடியவாறு இருந்தமையினுல் ஒல்லாந்தரின் கல்வி முறை தனது திட்டத்திற்குத்தானே பலியாகவேண்டி நேரிட்டது. சமூகத்திலொரு நல்ல நிலையையடைவதற்கும் இலாபத்திற்காகவும், வேறு நோக்கங்களுக்குமாகவே பலர் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டனர். மிகச் சிலரே சேவை நோக்குடன் அத்தொழிலில் ஈடுபட்டனர். ஆசிரியருக்கு வழங்கப்பட்ட ஊதியங்களில் பாடசாலைக்குப் பாடசாலையும், காலத்திற்குக் காலமும் வேறுபட்டன. சம்பளம் நிர்ணயிக்கும்போது மாணவர்களின் தொகையும் ஆசிரியருடைய திறமையும் கணக்கில் எடுக்கப்பட்டன. உதாரணமாக கோயில்பற்று பாடசாலைகளில் கல்வி கற்பித்த ஆசிரியரிலும் பார்க்க மிசெனரிகளில் கல்வி கற்பித்த ஆசிரியருக்கு உயர்ந்த ஊதியம் கொடுக்கப்பட்டது. உதவி ஆசிரியர்களுக்கு குறைந்த வேதனம் கொடுக்கப்பட்டது, எவ்வித முன்னறிவித்தலின்றி இவர்களை வேலை நீக்கம் செய்யக் கூடிய சட்டம் இருந்தமையால் அவர்களின் பதவி பாதுகாப்பற்றதாகவுமிருந்தது.

ஒல்லாந்தப் பாடசாலைகளை எடுத்து நோக்குமிடத்து ஆரம்ப பாடசாலை நூல்கள், வினுவிடை நூல்கள், பாடசாலைக் கவசியமான பொருள்கள் என்பவற்றில் பெரும் பற்றுக்குறை இருந்தது. இதன் காரணத்தால் கல்விமுறை பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆசிரியர் ஒரு புத்தகப் பிரதியை வைத்துக்கொண்டு மாணவர்களுக்கு கற்பிக்க சிறுவர்கள் மணலில் எழுதி கல்வி கற்ருர்கள். 1737ம் ஆண்டு வரை இந்நிலைமை நீடித்திருந்தது. அப்பாடசாலைகளில் உபயோகிக்கப்பட்ட புத்தகங்களெல்லாம் மதம் சம்பந்தமாக இருந்தன. இவர்களின் கல்வியமைப்பு இரண்டு முறைகளைக் கொண்டதாக இருந்தது. (1) நாட்டு மக்களை மத மாற்றம் செய்தல். (2) ஒல்லாந்தர் செல்வாக்கை நிலைநாட்ட செய்தல் என்பன.

இவர்களது பாடத்திட்டத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு எவ்வித கவனமும்

செலுத்தப்படவில்லை. நல்ல எதிர்கால முன்னேற்றத்தையும் அறிவுத்திறமையையும் காண்பித்த மாணவர்களுக்கு மிசெனரிகளில் உயர்கல்வி கற்கும் வாய்ப்பும், மதகுருவாக்கும் நோக்கத்துடன் ஒல்லாந்து தேசப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்துகொள்ளும் வாய்ப்பும் நல்கப்பட்டன. திறமைவாய்ந்த மாணவர்களுக்குக்கூட கம்பெனியின் சேவையில் உயர்பதவி ஒன்று வகிக்க எந்தச் சந்தர்ப்பமும் அளிக்கப்படவில்லை. கல்வியின் நுண்ணறிவு அம்சங்களுக்கு மாத்திரமே போதனையின் முழு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கல்விப்போதனை முறைகள் நியம ஒழுங்குப் பிரகாரம் மனனம் செய்யும் முறையாகவும் அமைந்து ஆக்கப்பூர்வ முயற்சிகளுக்கு இடம் அளியாமலும் உடல், உணர்ச்சி, சூழல், நிலைமைகளுக்கு மதிப்பளிக்காமலும் அமைந்திருந்தது. பதினேழாம் நூற்றுண்டிலிருந்த சாதி, சமூக நிலைபற்றிய பேதங்களுடன் இணைந்த கல்விக் கொள்கையும், நடைமுறையும் இந்தக் கல்வி முறையைப் பார்க்கினும் சிறந்த ஒன்றை உருவாக்கி இருக்கமுடியாது. 300 ஆண்டுகளுக்கு மேலாக நம் நாட்டில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் செல்வாக்கு பரவியதன் காரணமாக எமது சமுதாயம் பல தரப்பட்ட திசைகளிலும், துறைகளிலும் எப்படி உருப்பட்டதென்பது புலனுகின்றது.

ஒல்லாந்தரின் பின் இலங்கையை 1802ல் பிரித்தானிய அரசாங்கம் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கியது. சிவில் தேசாதிபதி ஒருவர் நிருவாகப் பொறுப்பை ஏற்றமை நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு அத்திவாரமிட்டது. புதிய தேசாதிபதியாகிய கௌரவ பிரடரிக் நோர்த் கிறிஸ்தவ சமயத்தையும் கல்வியையும் வளர்ப்பதில் தனி ஆர்வம் காட்டினுர். குடியேற்றப் பிரதேசங்களில் கல்வியை திருத்தியமைக்க முயலுகையில் தேசாதிபதி நோர்த் தமக்கு உதவி செய்யக்கூடிய குருமார் இல்லாது இன்னல்பட்டார். மேலைத்தேசக் கல்வியை கிறிஸ்தவ சூழ்நிலையில் வைத்து வளர்க்கவேண்டும் என்பது இவரது அவாவாகும். இக்காலத்தில் யேம்ஸ் கோடினரும் லண்டன் மிசனரி சங்கத்தின் மிசனரிமாரும் வந்த பின்பே குடியேற்றப் பிரதேசங்களில் கல்வியைத் திருத்தியமைக்கத் திட்டமிட்டார்.

கோயில்பற்றுப் பாடசாலைகளை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்காக கோடினர் எடுத்த முதல் நடவடிக்கை பாடசாலை ஆசிரியருக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமெனத் தேசாதிபதியை வேண்டிக்கொண்டதாகும். எனவே ஒவ்வொரு பாடசாலைக்கும் எட்டு ரிக்ஸ் டொலர்கள் (Rix dollars) சம்பளமாகக் கொடுக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். இவ்வாறு அவர் செய்தமையால் அரசாங்கப் பாடசாலைகளுக்குப் பண உதவி அளிக்கும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. கோயில்பற்றுப் பாடசாலைகளில் பாடவிதானம் வாசிப்பு, எழுத்து, எண்கணிதம், சமயம் என்பவற்றை உள்ளடக்கியது. இவையாவும் மாணவரின் தாய் மொழியில் கற்பிக்கப்பட்டு வந்தன. சமய போதனை முக்கிய இடத்தைப் பெற்றது. இப்பாடசாலைகளில் ஒல்லாந்தருடைய கோயில்பற்றுப் பாடசாலைகளைப் போலன்றி மாணவரின் வரவு கட்டாயப்படுத்தப்படவில்லை. இதனுல் மிகக்குறைந்த மாணவர் வரவே காணப்பட்டது. இதனைத் தீர்க்கு முகமாக தேசாதிபதி ''எல்லாப் புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவப் பெற்ருேரும் தம் பிள்ளைகளைச் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டும்'' என்று ஆணையிட்டார். அரச ஆணைகள் மூலம் நோர்த் தேசாதிபதி பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதை ஊக்குவித்தார். உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு இங்கிலாந்து சென்று பல்கலைக்கழகக் கல்வி பெறுவதற்குப் புலமைப்பரிசில் கொடுப்பது உகந்ததென்று பிரித்தானிய அரசாங்கத்திற்கு விதப்புரை செய்தார்.

மேநிலைப் பாடசாலைகளைத் தாபிப்பதன் நோக்கம் 'பறங்கியர் பிள்ளைகளுக்கும், முதலியார் பதவி வகிக்கத் தகுதியுடைய குடி மக்களின் பிள்ளைகளுக்கும், சுதேச உத்தியோகத்தரின் பிள்ளைகளுக்கும் கல்வி பயிற்றுவதற்காகும்! இப்பாடசாலைகளில் போதிக்கும் கல்வி கோயில்பற்றுப் பாடசாலைகளிற் புகட்டப்படுவதைவிட உயர்ந்த தரமுடையதாக இருந்தது. மேநிலைப் பாடசாலைகள் இரண்டு வகையினதாக அமைந்திருந்தன. (1) கொழும்பிலுள்ள அகடமி. இது நாட்டில் கிடைக்கக்கூடிய உயர்தரக் கல்வியைக் கொடுத்தது. மற்றையது ஆரம்பப் பாட

சாலை. இப்பாடசாலை அகடமிக்கு மாண வரை ஆயத்தம் செய்வதாக அமைந்திருந் தது. அரசாங்க உத்தியோகங்கள் யாவற் றுக்கும் சுதேச குடும்பங்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்படும் சிறந்த தரமுடைய உத்தி யோகத்தரை மேநிலைப் பாடசாலைகள் கொடுத்துதவின. ஆரம்பப் பாடசாலைகள் ஆண்பிள்ளைகளை 8 வயதில் அனுமதித்தன. அடிப்படை ஆங்கிலக்கல்வி கற்பிப்பதே இப் பாடசாலையின் நோக்கமாகும். பாடவிதா னம் ஆங்கிலம், சுயமொழி, ஆரம்பச் சமூக இலக்கிய அறிவு என்பவற்றை உள்ளடக் கியது. எட்டு வருடங்களுக்கு ஆங்கிலம் ஒரு பாடமாக பயிற்றப்பட்டதால் இப் பாடசாலைகள் அரசாங்க சேவைக்குப் போதுமான உத்தியோகத்தரை ஆயத்தம் செய்யப் போதுமானதாக இருந்தது. மிகச் சிறப்பான முயற்சியும் திறமையும் காட்டு பவர் அகடமிக்கு அனுமதிக்கப்பட்டு அர சாங்கச் செலவில் கல்வி பயிற்றப்பட்டனர். அகடமியின் முக்கிய கடமை இளைஞரை அரசாங்க சேவைக்கு ஆயத்தம் செய்வதா கும். அகடமியின் பாடவிதானத்தில் ஆங் கிலமும் மாணவர்கள் தாய்மொழியும் இங் கிலாந்து செமினரிகளில் பொதுவாகக் காணப்பட்ட பாடங்களும் சேர்க்கப்பட் டன. வாழ்க்கையில் ஒருவேளை அபிவிருத்தி யாகாமலும் கவனிக்காமலும் விடப்படக் கூடிய மாணவரின் ''சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தும்'' நோக்கத்துடன் கீழைத் தேச இலக்கியங்கள் என்பவற்றைக் கற்பிப் பதிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. கோவில்பற்றுப் பாடசாலைகள் சுதேச மொழிப் பாடசாலையாக இருந்தன. அர சாங்க உத்தியோகத்தில் சேர விரும்பு வோருக்கு ஆங்கிலக்கல்வி கற்பதற்கு அர சாங்கப் பொறுப்பில் அகடமி தவிர வேறு பாடசாலைகள் எதுவும் இருக்கவில்லை. இதிலே கற்பிக்கப்பட்ட கல்வி தற்காலத் தில் சாதாரண உயர்நிலைப் பாடசாலை ஒன் றில் கற்பிக்கப்படும் கல்வியை ஒத்தது.

இலங்கையிலுள்ள மிசனரிச்சங்கங் களால் தாபித்து நடாத்தப்பட்ட பாட சாலைகள் புறம்பான ஒரு முறையில் அமைந் திருந்தன. இதில் வேறுபட்ட பெயர்களுடன் வேறுபட்ட கல்வியைக் கற்பித்த பல்வேறு பாடசாலைகள் அடங்கின. அவையாவன:- சுயமொழிப் பாடசாலைகள், தருமப்பாட சாலை, விடுதிப்பாடசாலை என்பவற்றுடன் கல்லூரிகளும், செமினரிகளும் சேர்ந்து மிச னரிப் பாடசாலைகளாக அமைந்தன. நாட் டில் அதிகரிக்கும் ஆங்கிலக் கல்வித் தேவை யைப் பூர்த்தி செய்வதற்காகத் தனியார் பாடசாலைத்திட்டம் உருவாகியது. தனியார் தாபனங்கள் குறைந்த மாணவர்களைக் கொண்ட தாபனமாகும்.

***1830ல் மிசனரி அரசாங்கத் தனியார் பாட சாலைகளில் பரம்பலையும், பாடசாலை மாண வர் பரம்பலையும் ஒப்பிட்டுக் காட்டும் அட்ட வணை.***

| பாடசாலைகளின் வகை | முழுத்தொகை |
|---|---|
| மிசனரி | 236 |
| அரசாங்கம் | 97 |
| தனியார் | 640 |

| மாணவர் தொகை | பாடசாலை செல்லும் மாணவர்கள் வரவு வீதம் |
|---|---|
| 9274 | 42 |
| 1914 | 10 |
| 8424 | 43 |

இலங்கையில் கல்விமுறை செயல் முறைக்கு ஏற்றதாக அமையவில்லையெனக் கருதிய மத்திய பாடசாலை ஆணைக்குழு 1814ல் மூன்று மத்திய பாடசாலைகளை நிறு வத் தீர்மானித்தது. செய்முறைக் கல்விக்கு ஊக்கமளிப்பதே இவ்வாணைக்குழுவின் குறிக் கோளாக இருந்தது. அகடமியில் கல்வி பயி லாத ஏழைப்பிள்ளைகட்கு மத்திய பாடசாலை யில் செய்முறைக்கல்வி அளிக்கப்பட்டது. அகடமி, தேசாதிபதி ஹோல்டன் பதவி யிலிருந்த காலத்தில் தனித்தன்மை வாய்ந்த அம்சங்களைப் பெற்றிருந்தது. இது கீழ் நிலைப்பாடசாலை, உயர்நிலைப்பாடசாலை யென்று இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது. கீழ்நிலைப்பாடசாலையில் ஆங்கிலம், வாசிப்பு, எழுத்து, இலக்கணம், எண்கணிதம், புவி யியல், சரித்திரம், கேத்திரகணிதம், அட் சரகணிதம் என்பன கற்பிக்கப்பட்டு வந் தன. உயர்தனிப்பாடசாலையில் இந்தப் பாடங்களுடன் தர்க்கம், ஆங்கில சட்டத்

தின் மூலதத்துவங்கள், இயற்கை மெய்யியல் தத்துவங்கள், வானியல் தத்துவங்கள், சிங்களம், இலத்தீன் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

ஆசிரியர்கள் யாவரும் ஆங்கில அறிவைக் குறிப்பிடத்தக்க அளவில் பெற்றிருத்தலே ஒரு முக்கிய தகைமையென கோல்புறாக் குழுவினர் கருதினர். இதனால் ஆங்கில மொழி எல்லோருக்கும் கட்டாய மொழியாக்கப்பட்டது. இலங்கையின் கல்வி வரலாற்றில் முதன்முறையாக 1862ல் இலங்கை மாணவர்களுக்கு உள்ளூர் பரீட்சையொன்றை நிகழ்த்துவதற்குத் தீர்மானித்தது. அரசாங்க சேவையில் சில நியமனங்களுக்கு வேண்டியவர்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவே இப்பரீட்சை இலங்கையில் நடாத்த தீர்மானிக்கப்பட்டது.

இதன்பின் 1869ல் பொதுப் போதனைத் திணைக்களம் அமைக்கப்பட்டது. J. S. லோரி என்பவர் முதற்பணிப்பாளராக நியமிக்கப் பட்டார். மிசன் பாடசாலைகள் அரசாங்கத்தின் மேற்பார்வையில், இதுகாறும் கல்வியின் நிர்வாகத்திலும், கட்டுப்பாட்டிலும் தமக்கிருந்த செல்வாக்கைத் திருச்சபை இழக்கும்நிலை ஏற்பட்டது. இச்செல்வாக்கை இழக்கவிரும்பாத திருச்சபையார் தமக்கு இந்த உரிமை தொடர்ந்துமிருக்க வேண்டுமென தேசாதிபதியிடம் எடுத்துரைத்த காரணத்தினால் 1869லேயே தேசாதிபதி ஒரு கல்விச் சபையை நியமித்தார். இச்சபைக்குக் கல்விப் பணிப்பாளர் ஒருவரையும் நியமித்து கல்விப் பூட்கையைப்பற்றி ஆலோசனையைக் கூறுவதற்குப் பாடசாலை முகாமையாளரும் சிறந்த கல்வி நிபுணர்களும் நியமிக்கப்பட்டனர்.

1812ல் நியமிக்கப்பட்ட குழுவானது தனது விதப்புரையில் சிறந்த நிர்வாகம் நடைபெறவேண்டுமானால் பொதுப் போதனைத் திணைக்களம் கல்வித்திணைக்களமாக மாற்றியமைக்கப்பட வேண்டுமெனக் கூறியது. 1920ம் ஆண்டில் முதலாம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி கல்விச் சபையின் அதிகாரம் மேலும் விரிவடைந்தது. C.W.W. கன்னங்கரா அவர்கள் இச்சபை பற்றிக் கூறும்போது ''கல்வி நிர்வாகக்குழு தனது அங்கத்தவர்களாகக் கல்வித்துறை நிபுணர்களை அடக்காது அரசியல் வாதிகளைக் கொண்டுள்ளது'' என்று கூறியுள்ளார். தாய் மொழியே போதனை மொழியாக அமையவேண்டுமெனவும் தேசிய அடிப்படையில் கல்வியைத் திட்டமிடுவதற்கு அரசாங்கம் தேசிய அடிப்படையில் அமையவேண்டுமெனவும் கருத்து நிலவியபோதும் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பிப்பதை ஆதரித்தவர்களும் பலர் இருந்தனர். கல்வி வசதிகள் அளித்தலின் அடிப்படையாக நீண்ட காலத் தீவிர முயற்சியின் பெயரில் 1912ல் கொழும்பில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்பட்டது. இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைக்கு இங்கு மாணவர்கள் ஆயத்தம் செய்யப்பட்டனர்.

1931ம் ஆண்டில் வெளியான டொனமூர் சிறப்பாணைக் குழுவின் அறிக்கை இந்நாட்டின் அமைதியான சமூகப் புரட்சியைத் தோற்றுவித்தது. ''எல்லா நிலையிலும் கல்வி கட்டாயமாகவும், இலவசமாகவும் தாய் மொழி மூலமும் இருப்பதுடன் கல்வியில் சம வாய்ப்பளிப்பதெனில் அது ஆற்றல் அடிப்படையில் பெரும்பாலும் அரசின் ஈடுபாட்டுடன் அமைதல் வேண்டும்'' என்பது இக்குழுவின் முக்கிய சிபார்சாகும். கல்வியுலகில் ஏற்பட்ட இப்புரட்சியில் C.W.W. கன்னங்கராவின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது. இவர் இலங்கையின் முதல் கல்வி மந்திரியும், கல்வி நிர்வாகக் குழுவின் முதல் தலைவருமாவர். இவரது பதவிக்காலத்தில் உலகில் பொருளாதார மந்தம் ஏற்பட்டாலும் இவர் கொண்டு வந்த முக்கியமான மாற்றம் உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளம் வழங்கியமையாகும். இந்நடவடிக்கை ஆசிரியர் தகைமையை உயர்த்தவும், அவர்தம் தொழிலை முன்னேற்றவும் ஆசிரிய சேவையில் தன்மான உணர்வை ஊட்டவும் பெரிதும் உதவியது. கிராமப்புற பாடசாலைகளுக்கு நன்மைபயக்கக்கூடிய பல திட்டங்களை இவர் புகுத்தினார். இப்பாடசாலைகளில் மதிய உணவு இலவசமாகக் கொடுக்கப்பட்டது. இத்துடன் 1945ல் இலவசக்கல்வி முறையையும் ஆரம்பித்தார். இப்படியான சேவையைச் செய்த பெருமைவாய்ந்த கன்னங்கரா அவர்களை இந்நாடு என்றும் நன்றியோடு நினைவுகூரும்.

இலவசக் கல்வித்திட்டத்தால் பெண்களும் கல்விப் பொருளாதாரத் துறையில் ஆண்களுடன் சமவாய்ப்புப் பெற்றனர். கல்வி கற்போர் தொகை அதிகரித்தது. இதனுல் வசதிகள் அதிகரிக்கவேண்டியநிலை ஏற்பட்டது. எனவே கல்விக்காகச் செலவிடப்படும் தொகையும் அதிகரித்துக்கொண்டே வந்தது. இதன்பின் 1960ல் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டதும் எல்லாப் பாடசாலைகளுக்கும் ஒரேவிதமான பாடவிதானமும் அமுல் செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து கல்வித் துறையில் பெரும் மாற்றம் 1972ம் ஆண்டே ஏற்பட்டது. இவ்வாண்டில் அறிமுகமாக்கப்பட்ட தேசிய கல்வித்திட்டம் வரவேற்கப்பட்டதென்பதில் ஐயமில்லை.

**திருமதி அ. வேலாயுதம்**
(இறுதியாண்டு)

# சைவ மன்ற ஆண்டறிக்கை - 1974

காப்பாளர்:— திரு. இ. சி. வேலாயுதபிள்ளை அவர்கள் (அதிபர்)
ஆலோசகர்:— திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள் (முல்லைமணி) (விரிவுரையாளர்)
தலைவர்:— திரு. அ. சுந்தரமூர்த்தி.
செயலாளர்கள்:— 1. திரு. த. மனேகரராஜா. 2. செல்வி. வ. மகேஸ்வரி.
பொருளாளர்:— திரு. சோ. ஈஸ்வரசர்மா.
ஆட்சி மன்ற உறுப்பினர்:— 1. திரு. சா. தில்லைநாதன். 2. திரு. க. சரவணமுத்து. 3. திருமதி. சா. விக்கினேஸ்வரன். 4. திருமதி. அ. வேலாயுதம். 5. செல்வி. வ. மாரிமுத்து.

சைவ சமயப் பற்றும், தெய்வ பக்தியும் நிறைந்த அதிபர், விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவ - மாணவியர் துணைகொண்டு இவ்வாண்டு முழுவதும் எமது மன்றம் பல செயற்கரிய செயல்களிலீடுபட்டு கல்லூரி பெருமையை வளர்த்துளது, என்பதை மகிழ்வுடன் அறியத் தருகிறேம்.

இவ்வாண்டின் முதல் நிகழ்ச்சியாக, 19-2-1974ம் திகதி மன்றத் தலைவர், செயலாளர் தலைமையில் கிருஷ்ணமூர்த்தி, த. ஜெயானந்தன், வீ. பாலகிருஷ்ணன், சி. சிவஞானசுந்தரம், கு. சுப்பையா, இ. குலசிங்கம், ஸ்ரீதேவகாந்தன், ஜே. யோகராசா, சி. நடேசன், வ. குபேரநாதன், வீரபுத்திரன், செல்வியர் க. தம்பிராஜா, சு. மயில்வாகனம் ஆகியோரைக் கொண்ட குழு சிவராத்திரி விழாவை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் சென்றது. 20-2-1974ம் திகதி அங்கு சிரமதானத்தில் ஈடுபட்டது.

29-4-1974ம் திகதி சித்திரை விழா, எமது அதிபர் தலைமையில் பல்வித கலை நிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

16-10-1974ம் திகதி நவராத்திரி விழா, விரிவுரையாளர் திரு. வே. சுப்பிரமணியம்

அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்ந்து ஒன்பது நாட்களும் வெகு விமரிசையாக காலை - மாலை பூசைகளுடன் நடாத்தப்பட்டது. கடைசி மூன்று நாட்களில் முறையே இயலரங்கு, இசையரங்கு, நாடகஅரங்கு என்பன இடம் பெற்றன. இவற்றிற்கு விரிவுரையாளர்கள் திரு. ஏ. சுந்தரலிங்கம். திரு. எஸ். தர்மலிங்கம், திரு. வீ. சுப்பிரமணியம் ஆகியோர் தலைமையேற்று மிகச் சிறப்பாக நடாத்த உதவினர். இயலரங்கு நிகழ்ச்சியில் திருமதி கங்கேஸ்வரி கந்தையா சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்தினார். கவிஅரங்கு பொன் சிவானந்தன் தலைமையில் சிறப்பாக நடந்தது. மற்றும் சாயிபஜனை, மாமாங்க கோயில் திருப்பணி போன்ற வெளிவேலைகளையும், எமது மன்ற அனுசரணையுடன் மன்ற உறுப்பினர் ஏற்று சிரமதான முறையில் செய்து முடித்தனர்.

இவ்வாண்டு முழுவதும் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பூரண ஒத்துழைப்பு நல்கிய அனைவர்க்கும் நன்றி கூறுகிறோம்.

வாழ்க சைவம்!
வளர்க நம் தொண்டு!!

**செல்வன். த. மனோகரராஜா**
**செல்வி. வ. மகேஸ்வரி**
(இணைச் செயலாளர்கள்.)

# கிறிஸ்தவ மாணவ மன்ற அறிக்கை

| | |
|---|---|
| காப்பாளர்:- | திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை, அதிபர். |
| ஆலோசகர்:- | திருமதி பி. ஜீ. காசிநாதர் } விரிவுரையாளர்கள். |
| | திரு. என். தேவபாலசிங்கம் } விரிவுரையாளர்கள். |
| தலைவர்:- | சகோதரி எம். குளோடெலா. |
| உபதலைவர்:- | செல்வி ஜீ. தம்பிராசா. |
| செயலாளர்:- | திரு. கே. ஜீ. அருளானந்தம். |
| உபசெயலாளர்:- | திருமதி ஜே. டி. சோமநாதர். |
| பொருளாளர்:- | திரு. ஜே. யோகராசா. |
| உபபொருளாளர்:- | செல்வி ஆர். ஏபிரகாம். |
| நிர்வாக உறுப்பினர்:- | திரு. ஏ. யோசேப். |
| | திரு. எஸ். ஏ. யோகராசா. |
| | திரு. ரி. கந்தையா. |
| | செல்வி. கே. மேரி அற்தமலர். |
| | செல்வி. ஏ. ஏ. மோசஸ். |
| | திருமதி ஜீ. பி. ஜீவரத்தினம். |

''இதோ எல்லா மக்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கறிவிக்கிறேன்''

''இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்''

இவ்வாறு தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இயேசுபிரான் மாட்டுத் தொழுவத்திலே ஏழ்மைக் கோலமாய் அவதரித்த நற்செய்தியைக் கூறும்முகமாக மார்கழி மாதம் 3ம் திகதி பி. ப. 7-30 மணிக்கு கிறிஸ்தவ மாணவர்கள் கரோல் பாடிக்கொண்டு மெழுகுதிரியின் ஒளியில் பவனி சென்று அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவ மாணவிகளின் இருப்பிடங்களுக்கு சென்று செய்தியைக் கூறினர்.

இதைத் தொடர்ந்து (1974-12-04) மார்கழி மாதம் 4ம் திகதி நத்தார் பண்டிகை விழா மிக விமரிசையாக கலாசாலை மண்டபத்தில் தலைவரின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமானது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த அருட்திரு ஜே. டி. பி. யேசுதாசன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர். இதன்பின் மிகவும் சிறப்பாக சிற்றுண்டி விருந்து இடம்பெற்றது. பின்பு சுவிசேஷ வாசகமும், நத்தார் ஜயந்தி பாடல்களும் நடைபெற்றன. நிகழ்ச்சியின் இறுதியில் கிறிஸ்தவ மாணவர் மன்றத்தினரால் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி நாட்டிய நாடகம் ஒன்று காண்பிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இவ்விழாவிற்குச் சமூகம் கொடுத்த அனைவருக்கும் கிறிஸ்தவ மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இராப்போசன விருந்து அளிக்கப்பட்டது. விழாவிலும், இராப்போசன விருந்திலும் பங்குபற்றிச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றியுரை கூறப்பட்டது.

இவ்விழாவைச் சிறந்த முறையில் கொண்டாடுவதற்குச் சமூகம் தந்துதவிய ஞானதந்தையார் அனைவருக்கும் எம் மன்றத்திற்கு ஆலோசனைகளும், அறிவுரைகளும் நல்கிய அதிபர், விரிவுரையாளர்களுக்கும் கரோல் பாடல்கள் பாடுவதற்குப் பயிற்சியளித்துதவிய சங்கீத விரிவுரையாளர் செல்வி வி. சுப்பிரமணியத்திற்கும், முக்கிய பொறுப்பேற்று எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைய உதவி செய்த எமது ஆலோசகர் திருமதி பி. ஜீ. காசிநாதர், திரு. என். தேவபாலசிங்கம் ஆகியோருக்கும், எம்முடன் சேர்ந்து இசை நிகழ்ச்சிகளுக்கு உதவிய ஜீவம் சகோதரர்களுக்கும், எல்லா வகையிலும் உதவிய ஆசிரிய மாணவர்களுக்கும் எங்கள் அழைப்பை ஏற்று வருகை தந்து விழாவைச் சிறப்பித்த சைவமன்றத்தினருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

> ''உன்னதத்திலே இருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மானிடர்மேல் பிரியமும் உண்டாவதாக''

வணக்கம்.

**கே. ஜீ. அருளானந்தம்.**
*(செயலாளர்)*

# எமது சாரணர் படையின் ஆண்டறிக்கை 1974

**போஷகர் :–** திரு. E. C. வேலாயுதபிள்ளை அவர்கள் (அதிபர்)
**சாரணராளர் :–** திரு. S. S. இராசதுரை அவர்கள் (விடுதி மேற்பார்வையாளர்)
**பதில் பாசறைப்பதி :–** திரு. A. V. பாலசுப்பிரமணியம் அவர்கள் (விரிவுரையாளர்)
**படைத் தலைவர் :–** திரு. M. சம்பந்தர் அவர்கள் (ஆசிரிய மாணவன்)

எமது கலாசாலை சாரணர் படையின் 25 வது ஆண்டறிக்கையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வருடத்தின் முதலாவது படைக் கூட்டம் 1974-1 24ல் கலாசாலை மைதானத்தில் எமது பதில்ப்பாசறைப்பதியின் ஆசியுரையுடன் வெகு விமர்சையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வருடம் நாங்கள் சுமார் 30 கூட்டங்கள் கூடி அறிவு பெற்றோம்.

எமது தமிழ்க்கலாசாலை சரித்திரமே கண்டறியாத வகையில் நாங்கள் 1974-6-4 தொடக்கம் 1974-6-7 வரை பீட்று தேசிய சாரணர் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று வந்ததை பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

1974-11-9 தொடக்கம் 1974-11-11 வரை நடைபெற்ற தருசின்ன பயிற்சி வகுப்பில் (Pre – Wood Badge Course) பங்கு பற்றிய 8 சாரணர்களுக்கும் மகிழ்ச்சி கூறுவதோடு அவர்கள் (Wood Badge Part III) மேற்படி பயிற்சிப்பாசறையில் வெற்றி பெறவும் வாழ்த்துகிறோம்.

1974-11-22ம் திகதி நடைபெற்ற பாசறைத்தீ விழாவில் பிரிந்து செல்லும் படையின் தலைவர் M. சம்பந்தர் புதிய தலைவர் M. இரத்தினத்திற்கு கலாசாலை சாரணர் பதிவுப்புத்தகத்தையும் (Log Book) சாரணர் கொடியையும் கையளித்து இனி வரும் படையும் நல்ல நிலையில் எமது சாரணீயத்தை வளர்த்து புகழ்தேடும் என நம்புவதாகக் கூறி விடைபெற்றார்.

எமது கலாசாலையின் சாரணீயத்திற்கு எல்லா வகையிலும் உதவியீந்த கௌரவ அதிபருக்கு படை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

அத்தோடு கடந்து 25 வருடமாக சாரணீயத்திற்கே உழைத்து எமது கலாசாலை "பேடன் பவல்" என பெயர் பெற்ற எமது பதில் பாசறைப் பதிக்கும் நன்றியும் பிரிவும் கூறுகின்றோம்.

எம்மோடு இணைந்து எமக்கு பயிற்சியளித்து எமக்கு ஊக்குவித்த எமது சாரணராளர் திரு. S. S. இராசதுரைக்கும் நன்றியும் பிரிவும் கூறுகின்றோம்.

உலகம் பரந்து சேவை செய்யும் இச் சாரணீயத்தை வளர்த்தும் பாதுகாத்தும் அடுத்தவருடம் வரும் எமது புதிய சாரணர்களையும் அன்புக்கரம் நீட்டி பண்புடன் வரவேற்று தம்முடன் சேர்த்து நற்சாரணீயத்தை நலமுடன் பயின்று வெளி செல்லுமாறு முதலாம் வருட படை அங்கத்தவர்களைக் கேட்டு கடமை செய்யப் பிரிவதோடு அன்பு ஆசியையும் கோருகின்றோம்.

**A. ஜோசப்.**
*(கலாசாலை சாரணர்ப்படை உதவித்தலைவர்)*
2ம் வருடம்.

# தமிழ் இலக்கிய மன்ற அறிக்கை 1974

**ஆட்சி மன்றம்:—**

**காப்பாளர்:—** திரு. இ. சி. வேலாயுதபிள்ளை (அதிபர்)
**ஆலோசகர்கள்:—** திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) விரிவுரையாளர்)
திரு. ம. செ. அலெக்சாண்டர் (விரிவுரையாளர்)
**தலைவர்:—** திரு. தம்பிஐயா தேவதாஸ்.
**துணைத் தலைவர்:—** திரு. கே. சோமசுந்தரம்.
**செயலாளர்:—** திரு. வே. தங்கராசா.
**துணைச் செயலாளர்:—** செல்வி. செ. நளாயினி.
**பொருளாளர்:—** திரு. சி. நவரத்தினம்.
**இதழாசிரியர்:—** திரு. இரா. சின்னு.
"தேன்" கையெழுத்தேடு.

**ஆட்சி மன்ற உறுப்பினர்கள்:—**

1. செல்வி. வ. மாரிமுத்து.
2. செல்வி. வி. அருளானந்தம்.
3. செல்வி. அ. கணபதிப்பிள்ளை.
4. செல்வி. கு. கமலாதேவி.
5. திருமதி. எம். ஆர். ரேமண்ட்.
6. திரு. எஸ். தங்கராசா.

எமது இலக்கிய மன்றத்தின் இவ்வாண்டறிக்கையை தங்கள் முன் சமர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன். செந்தமிழ் காக்கும் பெரும்பணியைச் சிரமேற்கொண்ட எமது தமிழிலக்கிய மன்றத்தின் முதல் கூட்டம் 28-01-74 ஆம் ஆண்டு திங்கட்கிழமை எமது அதிபர் திரு. இ. சி. வேலாயுதபிள்ளை அவர்களின் தலைமையில் கூடியது.

எமது மன்றம் இவ்வாண்டுக்குரிய முதல் நிகழ்ச்சியாக ''இலக்கியம் எதற்கு?'' என்ற ஆய்வரங்கை 13-03-74 இல் திரு. தம்பி ஐயா தேவதாஸ் தலைமையில் நடத்தியது. இக்கருத்தரங்கில் திருவாளர்கள் ஐ. சிவசுந்தரம், க. கனகசிங்கம், முருகு இரத்தினம், நோமன் பல்தசார், எம். ஆறுமுகம், வி. ரி. தர்மலிங்கம், கே. சுப்பையா ஆகியோர் கலந்துகொண்டனர். இதனையடுத்து சுவாமி விபுலானந்தரின் இருபத்தேழாவது சிராத்ததினவிழா மன்ற ஆலோசகரான திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் விரிவுரையாளர் திரு. கோணமலை கோணேசபிள்ளை அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். சிறப்புரையை அடுத்து சுவாமி விபுலானந்த அடிகளால் இயற்றப்பட்ட சில பாடல்கள் ஒலிப்பதிவுக் கருவிமூலம் இசைக்கப்பட்டன. இவற்றோடு விரிவுரையாளரும் எமது இலக்கிய மன்ற ஆலோசகருமாகிய திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) அவர்கள் தலைமையில் ''யாழ்நூல் தந்தோன்'' என்னும் தலைப்பில் கவியரங்கு ஒன்றும் நடைபெற்றது. இக்கவியரங்கில் திருவாளர்கள் ஐ. சிவசுந்தரம், க. கனகசிங்கம், வீ. பாக்கியதுரை, ந. டே. குணரத்தினம், முருகு இரத்தினம், வே. ஹரிதாஸ், பொ. பூபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

11-09-74 புதன்கிழமை அன்று திரு. தம்பிஐயா தேவதாஸ் தலைமையில் பாரதி விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தவத்திரு. வே. அன்ரனி ஜோன் M. A. அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். ஆசிரிய மாணவர்களான திரு. த. மனோகரராசா, திரு. சி. நவரத்தினம், ஆகியோரால் பாரதி பாடல் இசையோடு பாடப்பட்டது. ஆசிரிய மாணவரான திரு. வி. ரி. தர்மலிங்கம் உரையாற்றினார். இதையடுத்து ''இனியொரு விதி செய்வோம்'' என்ற தலைப்பில் திரு. பொன் சிவானந்தன் தலைமையில் கவியரங்கொன்று நடைபெற்றது. இக்கவியரங்கில் திருவாளர்கள் பொ. பூபாலன், ஐ. சிவசுந்தரம், க. கனகசிங்கம், முருக இரத்தினம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்துடன் வேறு பல இலக்கிய முயற்சிகளிலும் மன்றம் ஈடுபட்டுழைத்து வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வருட இறுதிக்குள் மன்றத்தின் சார்பில் சிறுகதை, கவிதை, கட்டுரை, போட்டிகளை நடத்தி பரிசு வழங்கப்பட்டன.

மேற்படி மன்றத்தின் பூரண வளர்ச்சியில் பங்குகொள்ளும் அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரியமாணவர்கள் அனைவருக்கும், உரிய வேளையில் எமது அழைப்பையேற்று வந்து எமது மன்ற நிகழ்ச்சிகளைச் சிறப்பித்த சொற்பொழிவாளர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

— வாழ்க தமிழ் —

**வே. தங்கராசா**
*(செயலாளர்)*

# கல்விக் கழக ஆண்டு அறிக்கை 1974

காப்பாளர்:— திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை (அதிபர்)
ஆலோசகர்:— திரு. கோ. கோணேசபிள்ளை (விரிவுரையாளர்)
தலைவர்:— திரு. செ. குபேரநாதன்.
செயலாளர்:— திரு. வே. ஹரிதாஸ்.
பொருளாளர்:— திரு. சோ. கேசவராசா.
செயற்குழு உறுப்பினர்கள்:— திரு. எஸ். ஏ. அனஸ்லி யோகராசா.
திரு. த. யோகரத்தினம்.
திருமதி. அ. வேலாயுதம்.
செல்வி. ஜீவராணி.

கல்வி மிகப்பரந்த அளவில் முன்னேறிக் கொண்டுவரும் இவ்விஞ்ஞான காலத்தில், கல்வியானது ஒரு சமூகசேவையென்ற கருத்து மாற்றமடைந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனைக் குறிக்கோளாகக் கொண்டே எமது புதிய கல்வித்திட்டத்திலும் விவசாய உற்பத்தித்தொழில் மற்றும் கைத்தொழில் முயற்சிகள் அடங்கிய தொழில் முன்னிலைப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வியைப் புதிய முறையில் அணுகும் முயற்சியில் எமது கல்விக்கழகம் இலங்கைப் பாடவிதான அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் கலாசாலை இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் 40 பேரை நிரலித்த முறை (Programmed Learning) கற்பித்தலுக்கான ஒரு வாரப்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

கிழக்கிலங்கையில் ஆத்மீக ஒளியைப் பரப்பிநிற்கும் இராமகிருஷ்ணமிஷன் மாணவர் இல்லத்தை எமது கழக அங்கத்தவர்கள் பார்வையிட்டுப் புதிய முறையில் அநுபவத்தைப் பெற்றனர்.

சுவாமி விபுலானந்தர் நினைவு விழாவை முன்னிட்டு எமது கழகம் பரீட்சைப்பகுதி உபஆணையாளர் திருவாளர் சதாசிவம் அவர்களைச் சிறப்புச் சொற்பொழிவாளராக வரவழைத்து அவரைக் கௌரவித்தது.

மேலும் வளர்ந்துவரும் புதிய கல்வித் திட்டத்திற்கேற்ப கல்விக்கழகம் கலங்கரை விளக்காக நற்பணியாற்றவேண்டுமென எதிர்காலத்தை நம்பி நிறைவெய்துகின்றோம். நன்றி

**வே. ஹரிதாஸ்**
(செயலாளர்)

# கணித விஞ்ஞானக் கழக ஆண்டறிக்கை 1974

மன்றக் காப்பாளர்:- திரு. இ. சி. வேலாயுதபிள்ளை (அதிபர்)
ஆலோசகர்:- திரு. கோ. கோணேசபிள்ளை (விரிவுரையாளர்)
தலைவர்:- திரு. எஸ். கேசவராஜா (2ம் வருடம)
உப தலைவர்:- திரு. கே. சுப்பையா (2ம் வருடம்)
உப தலைவர்:- செல்வி எல். சிவகுரு. (1ம் வருடம்)
செயலாளர்:- திரு. கே. ஜி. அருளானந்தம் (2ம் வருடம்)
உப செயலாளர்:- திருமதி எஸ். விக்னேஸ்வரன். (2ம் வருடம்)
உப செயலாளர்:- திரு. என். சிவஞானம் (1ம் வருடம்)

பொருளாளர்:- திரு. ரீ. யோகரத்தினம்.
உப பொருளாளர்:- செல்வி. வி. மாரிமுத்து.
அங்கத்தவர்கள்:- திரு. என். ஸ்கந்தராசா.
திரு. எஸ். கனகமூர்த்தி.
செல்வி. ஆர். அருளம்பலம்.
செல்வி. கே. புஷ்பவதி.
செல்வி. வி. சுப்பிரமணியம்.

இன்றைய உலகில் அரசியல், பொருளாதாரம், நாகரீகம், பண்பாடு, தொழிற்றுறைகள் ஆகிய அனைத்திலும் கணிதமும், விஞ்ஞானமும் பின்னிப்பிணைந்துள்ளன. இத்தகைய வாழ்க்கைக்கு உதவும் சாதனமாக இருக்கும் இவ்விருமணிகளும் கல்வியில் இன்று மிகவும் முக்கியத்துவத்தை வகிக்கின்றன. இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர்தான் விஞ்ஞானக்கல்வி பிரபல்யம் அடையத்தொடங்கியது. இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியுற்று இன்று ஓர் உயர்ந்த நிலையில் விஞ்ஞானக்கல்வி இருக்கிறது. அவதானம், பிரச்சினை, தத்துவம், பரிசோதனை, முடிவு என்னும் வழிகளில் இக்கல்வியை இலகுவாகவும், சிறப்பாகவும் கற்கலாம். இவற்றுள் முதற்படியாக அமைவது அவதானமேயாகும். இந்த கூரிய அவதானத்தினுல்தான் இன்று பல பாரிய உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டதெனலாம்.

இவ்வாறே கணிதம் எனப்படுவது தர்க்கரீதியாக ஆராயும் சிந்தனைக்கு மனிதனை வழிப்படுத்துவதேயாகும். வானியல் ஆராய்ச்சிக்கும், சோதிடத்திற்கும் காரணமாய் இருப்பதும் கணிதமே. நெம்புகோல் முதல் அணுக்குண்டு ஆராய்ச்சி வரை யாவற்றிற்கும் மூலாதாரமாய் இருப்பதும் கணிதமே. கணிதம் மனிதனின் புறவாழ்க்கைக்கு மட்டுமல்லாது அகவாழ்க்கைக்கும் துணைபுரிகிறது. கணிதத்தில் பின்னங்களை விடுவிப்பதுபோன்று வாழ்க்கையில் எழும் சிக்கல்களையும் சிந்தித்து சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளும் திறனும் கணிதச்சிந்தனையாளனுக்கு உண்டு. கணிதத்தில் உண்மைகளை உள்ளவாறு நிரூபித்துக்காட்டும் இத்தத்துவம் வாழ்க்கைக்கும் பயன்படுகிறது.

எனவே இவ்விருதுறைகளையும் உணர்ந்த எங்கள் கலாசாலை இவ்விருதுறைகளையும் இணைத்து கணித விஞ்ஞானக்கழகம் என்ற பெயரில் சிலவருடங்களாகத் தொடர்ந்து சிறப்பான சேவைகள் செய்து வருகின்றது. இதைத்தொடர்ந்து இவ்வாண்டு ஆரம்பத்தில் மேற்கூறப்பட்ட செயற்குழுவுடன் ஆரம்பித்த இக்கழகம் கழகக் காப்பாளர் திரு. இ. சி. வேலாயுதபிள்ளை, ஆலோசகர் திரு. கோ. கோணேசபிள்ளை ஆகியோரின் விடாமுயற்சியினுல் மிகவும் சிறப்பாக இயங்கிவருகின்றது.

சென்ற ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் ஆசிரிய மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல சொற்பொழிவுகள் எங்கள் கழகத்தால் நடாத்தப்பட்டன. இவற்றுள் முதலாவதாக 4–7–74 இல் திரு. டி. ஏ. பெரேரா என்பவர் தொழில் முன்னிலைக் கல்வி என்னும் விடயம்பற்றி சொற்பொழிவு மூலம் ஆசிரிய மாணவருக்கிருந்த ஐயங்களை நீக்கியமை போற்றுதற்குரியது.

அடுத்ததாக 19-7-74 இல் திரு. மகிந்தாரணவீர (கல்விப்பணிப்பாளர்) அவர்கள் ''நவீன விஞ்ஞானக்கல்வி'' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினுர். இவரின் சொற்பொழிவில் இருந்து இன்றைய புதிய கல்வித்திட்டத்தில் விஞ்ஞானம் பெறும் முக்கிய இடத்தினை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அன்றைய தினமே திரு. எஸ். வீரசிங்க (பிரதம கல்விப்பணிப்பாளர்) ''குடிசனக்கல்வி'' என்றுல் என்ன? அது எவ்வாறு இன்றைய கல்வியில் பங்கு பெறுகிறது என்று மிகவும் தெளிவாக விளக்கினுர். இவ்வாறு எங்கள் கழகம் நல்ல பணிகளில் சென்ற ஆண்டு முழுவதும் இயங்கி வந்தது.

தொடர்ந்தும் இக்கழகம் இப்பணியை பாரம்பரியமாக நடைமுறைப்படுத்தவேண்டுமென வாழ்த்தி எனது இவ்வருட ஆண்டறிக்கையை முடிக்கிறேன்.

நன்றி.

**கே. ஜீ. அருளானந்தம்.**
(கௌரவ செயலாளர்)

# விவசாய விஞ்ஞான கழக அறிக்கை

காப்பாளர்:— திரு. ஈ. சி. வேலாயுதபிள்ளை (அதிபர்)
ஆலோசகர்:— திரு. ஏ. சுந்தரலிங்கம் (விரிவுரையாளர்)
தலைவர்:— திரு. பொ. சிவானந்தம்.
செயலாளர்:— திரு. கே. சுப்பையா.
உப தலைவர்:— திரு. பி. சீனித்தம்பி.
பொருளாளர்:— திரு. கே. வெற்றிவேல்.
உப பொருளாளர்:— திரு. உமா மகேஸ்வரன்.
உறுப்பினர்கள்:— திரு. கே. சோமசுந்தரம்.
திரு. டி. தேவதாஸ்.
திரு. பி. மகாதேவா.
திரு. எஸ். சிவஞானசுந்தரம்.
திரு. எஸ். மாணிக்கவாசகர்.

**கழகத்தின் செயல் திட்டங்கள்:—**

1. பயிர் செய்கை திட்டம்.
2. கோழி வேளாண்மை.
3. நாற்றுக் கன்று விநியோகம்.
4. கலாசாலை வளவில் நெற் செய்கை.
5. மாங்கன்றுகள் ஒட்டி விநியோகித்தல்.
6. உற்பத்திப் போரை முன்னிட்டு கலாசாலை தரிசு நிலங்களில் பயிர்ச் செய்கையை, மேற்கொள்ளல்.
7. விவசாய கருத்தரங்குகள் நடத்துதல்.
8. கலாசாலை மாணவரின் விவசாய கல்விச் சுற்றுலா.
9. புதிய அவரையினப் பயிர்களை பயிரிடல்.
10. பூந்தோட்ட அமைப்பும் பராமரித்தலும்.

எங்கள் கழகம் வகுத்த செயல் திட்டங்களுக்கேற்பப் பல ஆக்கப் பூர்வமான செயல்களில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது. எமது ஆக்கவேலைகள் திறமையுடன் வெற்றியடைய முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர் எங்கள் கழக ஆலோசகரும் விவசாய விஞ்ஞான விரிவுரையாருமான திரு. ஏ. சுந்தரலிங்கம் அவர்களேயாம் மேலும் மாணவர்களின் அயரா உழைப்பும், விரிவுரையாளரின் தளரா முயற்சியும் எங்கள் மன்றத்திற்கு மேலதிகாரிகள் பலரின் ஆசிகளையும் பாராட்டுகளையும் வாங்கித் தந்துள்ளன. அரசினரின் உணவு உற்பத்தி இயக்கத்திற்கமைய எம் ஆசிரிய மாணவர் ஈடுபட்டு கடுமையாய் உழைப்பது குறிப்பிடத்தக்கது. எமது ஆக்க வேலைகள் மட்டக்களப்பு பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு மட்டுமின்றி, உணவு உற்பத்தியில் ஈடுபடும் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எங்களது கழகத்தின் செயல் திட்டங்களால் ஆசிரிய மாணவர்களாகிய நாம் நேரனுபவமூலம் கற்பதுடன், விவசாயத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சுயமாகத் தீர்க்கக்கூடிய வழிகளையும் அறிந்துள்ளோம்.

எங்கள் கழகத்தால் முதன் முதல் செய்யப்பட்ட நெல் வேளாண்மை 22-1-74ல் அறுவடை செய்யப்பட்டபோது விழா எடுக்கப்பட்டது. இவ்விழாவிற்கு மட்டக்களப்பு மேலதிகாரி அரசாங்க அதிபர் திரு. பி. சங்காரவேல் அவர்களும், அண்மையில் மாற்றலாகிச் சென்ற கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். சமீம் அவர்களும் கலந்து விழாவைச் சிறப்பித்தனர். இவ்வேளை கல்விப்

பணிப்பாளர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி எங்களது கலாசாலையில் நெற்செய்கைப் பண்ணப்படும் பகுதிக்கு விசேட குழாய் நீர் வசதி செய்து கொடுத்துள்ளார். 22-2-74ல் புதிர் உண்ணும் வைபவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 17-6-74ல் எங்கள் கழகமும், சமூகவியல் கழகமும் இணைந்து ''மாவட்ட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ''அரசாங்க திணைக்களகங்களின் பங்கும் சேவையும்'' எனும் விடயம் பற்றிய கருத்தரங்கு கலாசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடத்தின. இக்கருத்தரங்கிற்கு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சங்காரவேல் அவர்கள் தலைமை தாங்க, மட்டக்களப்பு விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சண்முகம் அவர்கள் நெல் சந்தைப்படுத்தும் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. தில்லை நடேசன் அவர்கள், கூட்டுறவு ஆணையாளர் திரு. பெர்ணண்டோ அவர்கள் சிறு கைத்தொழில் சேவை உதவிப் பணிப்பாளர் திரு. ந. பத்மநாதன் அவர்கள், கமத்தொழில் உதவி ஆணையாளரும் உற்பத்தி பெருக்கத் தலைவருமான திரு. குமாரசிங்கம் அவர்கள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் திரு. வாமதேவர் அவர்கள் ஆகியோர் கருத்துப் பரிமாறினர்.

27-7-74ல் விவசாய விருப்பப்பாட மாணவர்கள் மகா இலுப்பள்ளமை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மூன்று நாள் தங்கி அங்கு நடைபெறும் பரீட்சார்த்தங்களையும் ஆராய்ச்சிகளையும் பார்வையிட்டதுடன் விரிவுரைகளையும் கேட்டு விசேடமாகப் பயிலும் வாய்ப்பு கிடைத்தது. இச் சுற்றுலாவுக்கான ஒழுங்குகளை கழகம் செய்ததுடன் செலவில் ஒரு பகுதியையும் வழங்கி ஊக்குவித்தது.

20-9-74 — 26-9-74 வரை எமது கழகம் உற்பத்தியாண்டு நிறைவு விழாவை பல ஆக்க வேலைகளைச் செய்து கொண்டாடியது. விழாவின் ஆரம்ப தினத்தில் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கவி அரங்கிற்கு விரிவுரையாளர் திரு. ஏ. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். கவியரங்கிலே மண்டூர்க் கவிஞன் திரு. பொன் சிவானந்தன், திரு. கே. கனகசிங்கம், திரு. பாக்கியதுரை என்போர் ''உணவு உற்பத்தி செய்வோம்'' என்ற தலைப்பில் கவிதை வாசித்தனர். கருத்தரங்கின் பின்பு கவியரங்கின் பின்பு திட்டமிட்டபடி கலாசாலை வளவுக்குள் பல வேலைகள் செய்யப்பட்டன. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள செயற்கை உரத்தட்டுப்பாட்டை முன்னிட்டு 29-9-74ல் கூட்டுப்பசளை தயாரிக்கும் செயல் கலாசாலையில் முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டது. இச்செயலை காண்பதற்கும், கற்பதற்கும் கோட்டைமுனை அரசினர் மகா வித்தியாலய மாணவ மாணவிகளும், வின்சன்ட் மகளீர் கல்லூரி மாணவிகளும் வருகை தந்தனர். மேற்கூறிய ஆக்கவேலைகள் தவிர இன்னும் பல வேலைகளையும் எமது கழகம் செய்துள்ளது. இன்னும் பலவற்றை செய்யவும் உள்ளது. எங்களைப் பின்பற்றி விவசாய கழக ஆக்கவேலைக்கு உதவிய முதலாம் வருட மாணவர்களுக்கு கழகம் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கின்றது.

எங்கள் கழகத்தின் வளர்ச்சிக்கு கலங்கரை விளக்கமாயும், ஆக்கவேலைகளுக்கு கைகொடுத்த தெய்வமாயும் விளங்கிய விரிவுரையாளர் திரு. ஏ. சுந்தரலிங்கம் அவர்களைப் பாராட்டுவதில் பெருமையும், மகிழ்வும் அடைகிறோம். மேலும் எங்களது சகல செயல்களுக்கும் உறுதுணையாய் இருந்த அதிபர் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும், கழகத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்ட சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் என்பவற்றில் கலந்துகொண்ட மன்றத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இவ்வருடம் கலாசாலையில் இல்ல ரீதியாகப் பூந்தோட்டப் போட்டியையும் நடாத்தியது மட்டுமன்றி முதலாம் இடத்தைப் பெறற இல்லங்களுக்கு முதன் முறையாக வெற்றிக்கிண்ணமும் கொடுத்து கௌரவிக்கப்பட்டது. இவ்வாண்டுதான் கலாசாலை சிறந்த விவசாய வீரன் ஒருவரை தெரிவு செய்து அவருக்கு கிண்ணம் வழங்கி பரிசளிக்கும் முறை அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் எங்கள் விவசாய உற்பத்திப் பொருட்கள் எங்கள் கலாசாலை விடுதிக்கு மிக மலிவான விலையில் கொடுத்ததால் எங்கள் உணவுச் செலவும் குறையக்கூடியதாக இருந்தது.

நன்றி

**கே. சுப்பையா**
(செயலாளர்)

# அரசினர் ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு.

## சமூகவியல் கழகம்

**நோக்கம்;—** 1. சமூகவியல் அறிவை விருத்தி செய்தல்.
2. சமூகவியல் துறையில் ஆராய்வுகளை மேற்கொள்ளுதல்.
3. சமூகவியலை கற்க - கற்பிக்க தேவையான முறைகளை அறிதல், செயல்படுத்தல்.
4. சமூகவியல் பாடத்திற்கேற்ற கற்றல் கற்பித்தல் சாதனங்களை சேகரித்தல். தயாரித்தல்.
5. சமூகவியல் கூடமொன்றை ஸ்தாபித்தல், அதை நிரந்தர கண் காட்சி சாலையாக நடாத்துதல்.
6. சமூக சேவைகளில் ஈடுபடுதல்.
7. சமூகவியலில், அறிவு, மனப்பாங்கு, செயல் திறன் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

**ஸ்தாபித்த திகதி:—** 1974ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி.

**நிர்வாகிகள்:—** காப்பாளர்:- திரு. ஈ. சி. வேலாயுதப்பிள்ளை (அதிபர்)
ஆலோசகர்கள்:- திரு. எஸ். தருமலிங்கம் (உப அதிபர்)
திரு. ஏ. வீ. பாலசுப்பிரமணியம் (விரிவுரையாளர்)
திரு. எம். எஸ். ஏ. அலெக்சாண்டர் (விரிவுரையாளர்)
தலைவர்:- திரு. வீ. ரி. தர்மலிங்கம்.
உப தலைவர்:- திரு. உமா மகேஸ்வரன்.
செயலாளர்:- திரு. எஸ். கனகமூர்த்தி.
உப செயலாளர்:- திரு. எம். சரவணமுத்து.
தனாதிகாரி:- திரு. எண். விநாயகமூர்த்தி.
உப தனாதிகாரி:- செல்வி. ஏ. இராஜேஸ்வரி.
செயலவை உறுப்பினர்கள்:- செல்வி. ஜீ. தம்பிராஜா.
செல்வி. வீ. மாரிமுத்து.
செல்வி. வீ. சௌந்தரிப்பிள்ளை.
சமூகவியல் பொறுப்பாளர்கள்:- திரு. வீ. பாக்கியதுரை.
திரு. எஸ். சித்திரவேல்.

**செயல்படுத்திய திட்டங்கள்:—**

1. சமூகவியல் கழக வெளியீட்டுப் பலகை வாயிலாக நாடுகளின் விபரங்களும், நமது குடியரசு தலைமையாளர் பட்டியலும், தேசிய உற்பத்தி பொருள்களின் விபரங்களும் வெளியிடப்பட்டன.
2. 1974-6-14 இல் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் வானிலை அவதான நிலையத்தையும், டச்சுக்கோட்டையையும் பார்வையிட்டனர்.
3. 1974-6-30 இல் கலாசாலை மாணவர்கள் அனைவரும் பொலநறுவை புராதன நகரை பார்வையிடச் சென்றனர்.
4. 1974-7-10 விவசாய விஞ்ஞான கழகத்துடன் சேர்ந்து "மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி வேலைகளில் எமது திணைக்களத்தின் பங்கு" எனும் தலைப்பில் ஆறு திணைக்கள தலைவர்களின் கருத்தரங்கு நடைபெற்றது.

5. 1974-9-12 இல் முதலாம் வருட மாணவர் வளி மண்டல அவதான நிலையத்தையும், டச்சுச்கோட்டையையும் பார்வையிட்டனர்.

6. 1974-9-22 இல் சமூகவியல் கூடமொன்றை நிறுவுவதற்கு முன்னேடியாக கற பித்தல் சாதனங்களை சேகரித்தல். பட்டியல் படுத்தல் நடைபெற்றது.

7. 1974-10-10 ''இன்றைய புதிய கல்வியில் எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது'' எனும் தலைப்பில் விவாதம் நடைபெற்றது.

8. 1974-11-2 வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையை பார்வையிட்டனர். அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் ஆகியோருடைய ஒத் துழைப்பிற்கு நன்றி.

**எஸ். கனகமூர்த்தி,**
செயலாளர்.

# வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி - 1974

(×)

கலாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி 74-05-30 ந் நாள் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் உடற்கல்வி அதிகாரி திரு. ரீ. கிருபைராசா அவர்களின் தேசியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகக் கோலாகலமாக நடைபெற்றது

கலாநிதி திருமதி தி. காரியவாசம் (கல்விப்பணிப்பாளர், ஆசிரியர் கல்வி) அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்,

போட்டியின் இறுதியில் விளையாட்டு வெற்றி வீரனுகத் திரு. த. கோவிந்தசாமி (கலைமகள்) அவர்களும், வெற்றி வீராங்கனையாக செல்வி. க. தம்பிராசா (கலைமகள்) அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கலைமகள் இல்லத்தினர் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

இல்லங்களுக்கிடையே நடைபெற்ற ஏனைய போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்:

1. வலைப்பந்தாட்டம். — கலைமகள் இல்லம்.
2. காற்பந்தாட்டம். — கலைமகள் இல்லம்.
3. கைப்பந்தாட்டம். — திருமகள் இல்லம்.
4. எறிபந்தாட்டம். — கலைமகள்.

# போட்டி முடிவுகள்

## சிறுகதைப் போடடி

**1ம் இடம்:- திரு. ஆர். இரெங்கராசா.**

(மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தினுல் அன்பளிப்புச் செய்யப்பட்ட வெள்ளிக் கிண்ணம் பரிசிலாக வழங்கப்படுகிறது)

2ம் இடம்:- திரு. பி. பூபாலன்.
3ம் இடம்:- திரு. ந. டே. குணரத்தினம்.

## கவிதைப் போட்டி

1ம் இடம்:- திரு. க. கனகசிங்கம் (தமிழ்ப்பித்தன்)

*(மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை முன்னால் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக மகன் திரு. குழந்தைக் குமரன் அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வெள்ளிக் கிண்ணமும், தமிழ் இலக்கிய மன்றத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வெள்ளிக் கிண்ணமும் வழங்கப்படுகிறது)*

2ம் இடம்:- திரு. இரா. சின்னு (ஸ்ரீதேவகாந்தன்)
3ம் இடம்:- திரு. முருகு இரத்தினம்.
செல்வி. செ. நளாயினி.

## முதலாம் வருடம் கட்டுரைப் போட்டி

1ம் இடம்:- திரு. முருகு இரத்தினம்.

*(மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை முன்னை நாள் தமிழ் விரிவுரையாளர் திருமதி. கங்கேஸ்வரி கந்தையா அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வெற்றிக் கிண்ணமும், தமிழ் இலக்கிய மன்றம் அன்பளிப்புச் செய்த வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படுகிறது)*

2ம் இடம்:- திரு. க. கணேசன்.
3ம் இடம்:- திரு. எம். சரவணமுத்து.

## இறுதி வருடம் கட்டுரைப் போட்டி

1ம் இடம்:- திரு. ஐ. சிவசுந்தரம்.

*(திருவாளர். P. T. அரசன் M. M. C. J. P. U. M. அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வெள்ளிக் கிண்ணமும், தமிழிலக்கிய மன்றம் அன்பளிப்புச் செய்த வெள்ளிக் கிண்ணமும் வழங்கப்படுகிறது)*

2ம் இடம்:- திரு. சி. கனகமூர்த்தி.
3ம் இடம்:- திரு. வீ. பாக்கியதுரை.

# அரசினர் ஆசிரிய கல்லூரி மட்டக்களப்பு.

## மாணவர் மன்றம் — முதலாந் தவணை - 1974.

| | |
|---|---|
| *தலைவர்:—* | திரு. கே. ஜி. அருளானந்தம்.<br>செல்வி. ஜி. தம்பிராசா. |
| *உப தலைவர்:—* | திரு. வி. உமா மகேஸ்வரன்.<br>சகோதரி. மேரி குளோடெலா. |
| *இணைச் செயலாளர்கள்:—* | திரு. வி. பாக்கியதுரை.<br>செல்வி. ஆர். ஆபிரகாம். |
| *கல்விச் செயலாளர்:—* | திரு. ஆர். குலசிங்கம்,<br>செல்வி. செ. நளாயினி. |
| *விளையாட்டுச் செயலாளர்:—* | திரு. ரி. ஜெயானந்தம்.<br>திருமதி. அ. வேலாயுதம். |
| *உதவி விளையாட்டுச் செயலாளர்:—* | திரு. வி. கிருஷ்ணபிள்ளை.<br>திருமதி. மா. ஞானகணேசன். |
| *சுகாதாரச் செயலாளர்:—* | திரு. ரி. யோகரெட்ணம்.<br>செல்வி. கே. கந்தையா. |
| *நிதிச் செயலாளர்;—* | திரு. எஸ். நடேசலிங்கம்.<br>திருமதி. எஸ். விக்கினேஸ்வரன். |

## மாணவர் மன்றம் — இரண்டாம் தவணை - 1974.

| | |
|---|---|
| *தலைவர்;—* | திரு. அ. தில்லையம்பலம்.<br>செல்வி. இ. ஆபிரகாம். |
| *பொதுச் செயலாளர்:—* | திரு. நா. சித்திரவேல்.<br>செல்வி. வ. மாரிமுத்து. |
| *கல்விச் செயலாளர்:—* | திரு. ந. குழந்தைவேல்.<br>செல்வி. க. தம்பிராஜா. |
| *உதவிக் கல்விச் செயலாளர்:—* | திரு. ந. திருச்செல்வம்.<br>செல்வி. ஜீ. வடிவேல். |
| *நிதிச் செயலாளர்:—* | திரு. இ. இராமநாதன்·<br>செல்வி, வ. மகேஸ்வரி. |
| *உதவி நிதிச் செயலாளர்:—* | திரு. பூ. சீனித்தம்பி.<br>செல்வி. இ. விஜயலெட்சுமி. |
| *விளையாட்டுச் செயலாளர்:—* | திரு. க. மூத்ததம்பி.<br>செல்வி. க. மேரி அற்புதமலர். |
| *உதவி விளையாட்டுச் செயலாளர்:—* | திரு. ந. இராஜேந்திரன்.<br>திருமதி. கி. இரட்ணஜோதி. |
| *சுகாதாரச் செயலாளர்:—* | திரு. கு. செல்வேந்திரதேவர்.<br>செல்வி. ம. கலாவதி. |
| *உதவிச் சுகாதாரச் செயலாளர்:—* | திரு. கி. கணேசன்.<br>செல்வி. ப. பீதாம்பரம். |

## மாணவர் மன்ற உறுப்பினர் — மூன்றும் தவணை - 1974.

| | |
|---|---|
| *தலைவர்:—* | திரு, என். விநாயகமூர்த்தி.<br>செல்வி. அ. அ. மோசஸ். |

பொதுச் செயலாளர்:— திரு. ஏ. சிவசுந்தரம்.
திருமதி. தி. இரத்தினசிங்கம்.

உதவிப் பொதுச் செயலாளர்:— திரு. எஸ். நவரத்தினம்.
திருமதி. டீ. பியசேனு.

கல்விச் செயலாளர்:— திரு. எம். வீரபுத்திரன்.
செல்வி. க. மேரி அற்புதமலர்.

உதவிக் கல்விச் செயலாளர்:— ஜோ. நோமன் பல்தசார்'
செல்வி. கே. புஸ்பவதி.

சுகாதாரச் செயலாளர்:— திரு. ஈ. என். இராஜேஸ்வரா.
செல்வி. ம. கலாவதி.

உதவிச் சுகாதாரச் செயலாளர்:— திரு. எம். சரவணமுத்து.
திருமதி. எஸ். கணபதிப்பிள்ளை.

விளையாட்டுச் செயலாளர்:— திரு. சீ. லம்பேர்ட்.
திருமதி. த. கணபதிப்பிள்ளை.

உதவி விளையாட்டுச் செயலாளர்:— திரு. கே. தம்பித்துரை.
செல்வி. கே. குருகுல பூபாலசிங்கம்.

நிதிச் செயலாளர்:— திரு. ஏ. கிருஷ்ணபிள்ளை.
செல்வி. இ. அருளம்பலம்.

உதவி நிதிச் செயலாளர்;— திரு. கே. சரவணமுத்து.
செல்வி. ஏ. கருணுநிதி.

# 1974ம் ஆண்டு பயிற்சி முடிந்து வெளியேறுவோர்

1. திரு. வே. ஹரிதாஸ், திருமலை வீதி, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.
2. திரு. ஐ. சிவசுந்தரம், ஆரையம்பதி, காத்தான்குடி.
3. திரு. கே. ஜீ. அருளானந்தம், 2ம் குறிச்சி, பெரிய கல்லாறு, கல்லாறு.
4. திரு. பொ. சிவாநந்தன், 2ம் குறிச்சி, காரைதீவு. (கி. மா.)
5. திரு. செ. சிவநேசராசா, மட்/குறுமண்வெளி, களுவாஞ்சிக்குடி.
6. திரு. ந. குழந்தைவேல், மட்/குறுமண்வெளி, களுவாஞ்சிக்குடி.
7. திரு. த. யோகரெட்ணம், ''சாந்திநிகேதன்'' ஆரைப்பற்றை - 1, காத்தான்குடி.
8. திரு. யோ. யோகராசா, 70, கதிராமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
9. திரு. அ. யோசேப், 11, ஒலிவ் வீதி, மட்டக்களப்பு.
10. திரு. வே. தம்பிஐயா, ''முல்லை'' ஆரையம்பதி - 1, காத்தான்குடி.
11. திரு. த. தேவதாஸ், 90/5. புதிய செட்டித்தெரு, கொழும்பு - 15.
12. திரு. செ. குபேரநாதன், 29, புகையிரத குடிமனை, ஜயந்தி மாவத்தை, அநுராதபுரா.
13. திரு. செ. நடேசலிங்கம், தம்பலகாமம்.
14. திரு. ஸ். அனல்சி யோகராச,, 86, பத்தமேனி, அச்சுவேலி.
15. திரு. பொ. மகாதேவன், திரியாய், திருக்கோணமலை.
16. திரு. வீ. பாக்கியதுரை, கங்குவேலி, தெகிவத்த.
17. திரு. ந. விநாயகமூர்த்தி, விபுலாநந்தர் வீதி, கட்டைபறிச்சான் – 3, மூதூர்.
18. திரு. சோ. கேசவராசா, ஆலங்கேணி - 1, கிண்ணியா.
19. திரு. நா. சித்திரவேல், சின்னக் கிண்ணியா, கிண்ணியா.
20. திரு. க. கனகசிங்கம். விபுலாநந்தர் வீதி, கட்டைபறிச்சான் - 3, மூதூர்.
21. திரு. வே. தங்கராசா, நாயன்மார் திடல், தம்பலகாம்.
22. திரு. அ. தில்லையம்பலம், சம்பூர் - 1, மூதூர்.
23. திரு. சி. சிவஞானசுந்தரம், சேனையூர் – 4, மூதூர்.

24. திரு. க. வெற்றிவேல், சம்பூர் - 7, மூதூர்.
25. திரு. ஆ. கிருஷ்ணபிள்ளை, தம்பிலுவில் - 2, திருக்கோயில்.
26. திரு. அ. சுந்தரமூர்த்தி, ''வசந்தம்'' காரைதீவு - 2. (கி. மா.)
27. திரு. பா. நவரெத்தினம், தம்பிலுவில் - 2, திருக்கோவில்.
28. திரு. த. கோவிந்தசாமி, தமிழ்க் குறிச்சி, சம்மாந்துறை.
29. திரு. த. கந்தையா, தமிழ்க் குறிச்சி, சம்மாந்துறை.
30. திரு. த. மனோகரராசா, 2ம் குறிச்சி, தம்பிலுவில், திருக்கோவில்.
31. திரு. க. மூத்ததம்பி, சேனைக்குடியிருப்பு, 1ம் வட்டாரம், கல்முனை
32. திரு. மு. சம்பந்தர், 373, நவயாலத்தன்னை, கட்டுகஸ் தோட்டை.
33. திரு. கு. செல்வேந்திரதேவர், கல்லுமலை, அஞ்சிகடை. க / தெல்தெனியா.
34. திரு. எஸ். நடேசன், எனசலங்கேவத்த, கண்டி.
35. திரு. இரா. இரங்கராசா, டேவிட்சிங்கோ மே/பா. ஊருபெலாவ. தெய்யோவிற்ற.
36. திரு. க. ஸ்கந்தராசா, பிலாண்டுவ, வறக்காப்பொளை.
37. திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, 224, அளுத்மாவத்தை றோட், கொழும்பு - 15.
38. திரு. மு. ஆறுமுகம், எலிபெடை பாடசாலை, போகவந்தலாவ.
39. திரு. இ. என். இராசேஸ்பரா, கார்பக்ஸ் கடைவீதி, டிக்கோயா.
40. திரு. சி. கனகமூர்த்தி, 170/11, நிவ்லைன்ஸ், நோர்வூட்.
41. திரு. வி. ரி. தருமலிங்கம், மேல்மடக் கோம்பரை, வட்டுக்கொடை.
42. திரு. இ. சுப்பையா, தன்கந்தை எஸ்டேட், மாத் / இரத்தோட்டை.
43. திரு. வீ. பாலகிருஷ்ணன், கட்டாரத்தன்னை எஸ்டேட், இரத்தோட்டை.
44. திரு. பொ. பூபாலன், கோங்கவிருமுல்ல, பலாபத்வெல, மாத்தளை.
45. திரு. மு. வீரபுத்திரன், நோர்த் மாத்தளை, கவடிப்பளை, மாத்தளை.
46. திரு. த. ஜெயானந்தன், 18ம் கட்டை, வாழைச்சேனை.
47. திரு. ஜோ. கி. இலம்பேட், 35/8, தூவனை, கொச்சிக்கடை.
48. திரு. ச. முருகேசு, மொறக்கொலை டிவிசன், ஆலிஎல.
49. திரு. ஆர். இராமநாதன், அப்புத்தளை எஸ்டேட், கல்கந்தை பிரிவு, அப்புத்தளை.
50. திரு. இ. குலசிங்கம், ''இரஞ்சிதவாசா'' கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
51. திரு. க. சோமசுந்தரம், 27, பிரதான வீதி, அப்புத்தளை.
52. திரு. ம. ஐயாத்துரை, 2ம் குறிச்சி, தம்பிலுவில், திருக்கோவில்.
53. திரு. சோ. ஈஸ்வரசர்மா, 27, எல்லை வீதி, (வடக்கு) மட்டக்களப்பு.
54. திரு. சா. தில்லைநாதன், வைத்தியசாலை வீதி, மண்டூர்.
55. திரு. இரா. சின்னு, 7, கட்டாக்காலிப் பிரிவு, டயரபாத் தோட்டம், பண்டாரவளை.
56. திருமதி. எம். எச். சிறிபத்மநாதன், ஹென்றிக் ஒழுங்கை, அர்ச் மிக்கேல் வீதி, மட்டக்களப்பு.
57. திருமதி. சா. விக்னேஸ்வரன், 8, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.
58. செல்வி. இ. ஏப்பிரகாம், திருக்கோவில்.
59. செல்வி. க. தம்பிராசா, ஜொய்லி, கல்லாறு.
60. செல்வி. த. கனகரெத்தினம், 'ஸ்கந்தவாசா' கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.
61. செல்வி. க. கந்தையா, பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு.
62. செல்வி. சு. மயில்வாகனம், ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி.
63. செல்வி. தி. தம்பியப்பா, மாவடி ஒழுங்கை, களுதாவளை, களுவாஞ்சிக்குடி.
64. செல்வி. அ. கணபதிப்பிள்ளை, கிருஷ்ணன் கோவில் றோட், வந்தாறுமூலை, செங்கலடி.
65. செல்வி. அ. அ. மோசெஸ், 119, பார் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
66. செல்வி. பா. செல்லத்தம்பி, இல. 16, வித்தியாலய வீதி, திருகோணமலை.
67. செல்வி. ம. சோமநாதபிள்ளை, 101, பிரதான வீதி, திருகோணமலை.
68. செல்வி. வ. சௌந்தரிப்பிள்ளை, 6, கடல்முக வீதி, திருகோணமலை.
69. செல்வி. செ. நளாயினி, 6ம் கட்டை, சாம்பல் தீவு, திருகோணமலை.
70. செல்வி. இ. அருளம்பலம், பிரதான வீதி, கிளிவெட்டி.

71. திருமதி. அ. வேலாயுதம், 718, அன்பு வழிபுரம், திருகோணமலை.
72. செல்வி. வ. மாரிமுத்து, லட்சுமி வாசா, கிளிவெட்டி.
72. செல்வி. ம. கலாவதி, 2ம் குறிச்சி, காரைதீவு.
74. திருமதி. க. தவமணி, 1ம் குறிச்சி, கோட்டைக்கல்லாறு.
75. திருமதி. தி. வேல்முருகு, 2ம் வட்டாரம், கல்முனை.
76. செல்வி. வி. அருளாநந்தம், மே/பா. த. சோமசுந்தரம், ஆஸ்பத்திரி வீதி, கல்முனை.
77. செல்வி. க. மேரி அற்புதமலர், மேரி இல்லம், அக்கரைப்பற்று.
78. செல்வி. வ. மகேஸ்வரி, தபால் நிலைய வீதி, அக்கரைப்பற்று.
79. திருமதி. தி. இரெத்தினசிங்கம், ஆஸ்பத்திரி ரோட், கல்முனை.
80. திருமதி. ஏ. ஜெயலெட்சுமி, இல. 32, மலபார் வீதி, கம்பளை.
81. செல்வி. க. செல்வவினாயகம, "கமலவாசா" தொண்டமானாறு.
82. திருமதி. ந. கந்தசாமி, செட்டிபாளையம், குருக்கள் மடம்.
83. திருமதி. எம். ஆர். குமணசிங்கம், கோயில் போரதீவு, பெரிய போரதீவு.
84. திருமதி. ஜி. பரமலிங்கம், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை.
85. திருமதி. ஜி. வி. ஜீவரெத்தினம், 24, கோவிந்தன் தெரு, மட்டக்களப்பு.

அழகு, அழகு என்று அங்கலாய்க்கிறோம்; ரசித்துப் பேசுகிறோம். ஆனால் அழகுள்ளவை, நாம் எண்ணுவது போல அவ்வளவு பிரயோஜனப் படுபவையல்ல. உதாரணம் வேண்டுமா? மயிலையும் தாமரையையும் பாருங்கள்.

—தாகூர்.

# கிரேஷன் வர்த்தக கலாசாலை,

## மட்டக்களப்பு.

(அரசாங்க பதிவு இல. B. 449)

(21/2, முனைத்தெரு, மட்டக்களப்பின் மத்தியாகவும்,
நகர பஸ் நிலையத்தின் எதிராகவுமுள்ளது).

**3-1-1974ல் புதிய ஆண்டு ஆரம்பம்.**

வெகு விரைவில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கான வசதிகள். இங்கு கல்வி கற்ற பல மாணவர்கள் ஏற்கனவே வேலை வாய்ப்புக்கள் பெற்றுவிட்டனர்.

வேலை செய்யும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேலை நேரத்துக்குப் பின் மாலை நேரங்களில் விசேஷ வகுப்புக்களும், ஏனையோருக்கு நாள் முழுவதும் வகுப்புகளும் ஒழுங்கு செய்யப்படும்.

**அ. வர்த்தகம்** [ஆங்கில மூலமும் தமிழ் மூலமும்]

சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், பொருளியல்,
வர்த்தக கணிதம், வர்த்தகம்.

**ஆ. விஞ்ஞானம் - கணிதம்** [ஆங்கிலமூலமும் தமிழ் மூலமும்]

புதிய கணிதம், தூய கணிதம், பிரயோக கணிதம்,
உயர்தர கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல்,
உயிரியல், எண் கணிதம்.

**இ. மொழிகள்**

[3ம் தரத்திலிருந்து க. பொ. த. (சாதாரணம்) வரை]
ஆங்கிலம் — தமிழ் — சிங்களம்.

**பின்வரும் பரீட்சைக்கான வகுப்புக்கள்:**

1. கணக்கு வைப்பு [லண்டன் டிப்ளோமா]
2. கணக்கு வைப்போர் தாபனம், புள்ளி விபரத் தயாரிப்பு [லண்டன்]
3. இலங்கை பல பொறியியல் தராதரப் பத்திரப் பரீட்சை.
4. வங்கிகள் தாபனப் பரீட்சை.
5. க. பொ. த. சாதாரணப் பரீட்சை.
6. க. பொ. த. உயர்தர பரீட்சை.

மாணவர்களுக்கு வயதுக் கட்டுப்பாடில்லை. வாரத்தில் ஐந்து நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.

பூரண தகுதியும், அனுபவமும் வாய்ந்த புனித மிக்கேல் கல்லூரியின் முன்னைநாள் வர்த்தக ஆசிரியர் அவர்களின் நேரடியான மேற்பார்வையில் ஆறு பூரண தகுதியுடைய ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள்.

வேறு தகவல்களுக்கு விரைவில் பின்வரும்
முகவரிக்கு விண்ணப்பிக்கவும்:-

''இயக்குனர்''
**கிரேஷன் வர்த்தக கலாசாலை,**
21/2, முனைத் தெரு,
மட்டக்களப்பு.

தரம் குன்றாத அழகிய
பவுண், தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்

# கீதா நகைமாளிகை

22, மெயின் வீதி,
மட்டக்களப்பு.



ஓடர் நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.



நம்பிக்கை நாணயம் நேர்மையே முக்கியம்.

*For all your requirement in*

*Printing & Stationery*

*Pleace Contact*

# *Catholic Press*

*Batticaloa.*

364

**EQUIPPED WITH THE LATEST**

**AUTOMATIC MACHINES**

**NEAT & QUICK JOBS ASSURED**

**No. 18, Central Road, BATTICALOA.**

S. S. R. CATHOLIC PRESS, BATTICALOA.